
www.tamilarangam.net

Raya

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE : FRANCE

சுவடுகள் - ஐந்தாவது வருடத்தினுள்.....



# சுவடுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதினைந்து வருடங்கள்

# 1977ம் ஆண்டு

யாழ்ப்பாணத்தில் கடைகள் பொலிசாரால் தீயிடப்பட்டன. சில தமிழர்கள் வீதிகளில் தடைகளை ஏற்படுத்தி மேலும் பொலிசாரின் முன்னேற்றத்தைத் தடுத்தனர். இந்தப் போராட்டத்தில் பொலிசார் கண்மூடித்தனமாகச் சுட்டதில் இரு தமிழர்கள் பலியாகினர். இதேவேளை கொல்லப்பட்ட சிங்களப் பொலிசாரின் இரத்தம் தோய்ந்த உடல்கள் பெட்டி பெட்டியாக யாழ்ப்பாணத்தில் இருந்து வருகின்றற என்று தென்னிலங்கையில் வதந்தி பரப்பப் பட்டது. இதனால் ஆத்திரம் தூண்டப்பட்ட சிங்களக் காடையர்கள் தமிழர்களைக் கொன்றும், சொத்துகளைச் சூறையாடியும், பெண்களை மானபங்கப் படுத்தியும் சிங்களப் பிரதேசத்தில் இருந்து தமிழர்களை வெளியேற்றினர்.

தமிழர்க்கெதிரான சிங்கள இனவாதத்தின் செயல்பாடுகள் முதன்முதலாக மலையகத் தமிழர்களின் குடியுரிமை வாக்குரிமை பறிப்புடன் தொடங்கியது. பின் 56இல் நிகழ்ந்த சிங்களம் மட்டும் சட்டம் இரண்டாவது பெரிய ஒடுக்குமுறையாகும். இதன்போது தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கலவரம் தமிழ் மக்களுக்கு எதிரான முதலாவது பெரிய இனக்கலவரமாகும்.

காலத்திற்குக் காலம் தமிழ் மக்கள்மீது பலவித ஒடுக்குமுறைகள் தொடுக்கப் பட்டாலும், 1977 இனக்கலவரம் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். 1977 தேர்தலில் தமிழ் மக்கள் முதன்முதலாக தமிழீழத்திற்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்தனர். தேர்தலில் தமிழ் மக்களுக்காக ஒரு தனிநாடு அமைப்பது என்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு வடக்கு கிழக்கில் பெரும்பான்மை ஆதரவு கிடைத்தது. இதன்பின்பே கலவரத்தைத் தொடக்கியது இலங்கை அரசு.

இனக்கலவரம் கொளுந்துவிட்டு எரிகையில் 'தர்மிஷ்ட' ஜனாதிபதி ஜேஆர் 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என தொடர்பு சாதனங்களின் ஊடாக இனவாதத்தைக் கக்கினான்.

இந்த இனக்கலவரம் தமிழர்களைப் பயமுறுத்தவில்லை, இதற்குப் பின்னரும் கலவரங்களும் முழு அளவிலான போரும் தமிழ் மக்கள்மீது தொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் மேலும் மேலும் ஒடுக்குமுறைகள் கூட விடுதலைக்கான வேட்கை அதிகரிக்கும் என்பதைச் சிங்கள இனவாதிகள் உணர்வதாகத் தெரியவில்லை.

– கே.சேகரன் –

---

* இலங்கையில் இருந்து 11,862 குழந்தைகள் ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளதாக அரசு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். சுவீடன், நெதர்லாந்து போன்றவையே முக்கியமாக இலங்கைக் குழந்தைகளை வாங்கியுள்ளன. தற்போது குழந்தைகளைத் தத்தெடுப்பது அரசாங்க அனுமதியுடனேயே நிகழ்வதால் இத்தொகை குறைவதாகவும், எனினும் எதிர்வரும் காலங்களில் இத்தொகை அதிகரிக்கும் எனவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

www.tamilarangam.net




# ஒரு யாழ்ப்பாணக் கடிதத்தில் இருந்து....

இங்கு வைத்தியசாலைக்குத் தினசரி வருகிற தம்பி தங்கைமார்களைப் பார்த்துக்கொண்டு நாங்கள் ஏன் இன்னும் உயிரோடு இருக்கிறமோ தெரியாது. 18வயதுப் பையன். ஸ்கூலில் கிறிக்கெட்டில் பெரிய வீரன். துருதுருவென்று ஊர் முழுக்கச் சென்று அரசியல் வேலை செய்தவன். 18வயதுக்கு மீறிய பொது அறிவு. இத்தனையுடன் ஆனையிறவுப் போராட்டத்திற்குச் செல்கிறான். முதுகில் ஒரு சிறு காயம். **Spinal code paralised.** கழுத்தின் கீழ் ஒரு இயக்கமும் கிடையாது. கழுத்தை மட்டும் அங்கால இங்கால திருப்பமுடியும். அவனுக்கு வாழ்க்கையின் இயக்கம் முழுவதும் தலைக்குள்தான்.

மூக்கில் நுளம்பு வந்திருந்து கடிக்கிறது. வேதனையில் மூக்கைச் சுழிக்கிறான். அவனால் அதற்குமேல் எதுவும் செய்யமுடியாது. போர்முனையில் முதற் காவலரணில் நின்று பாரிய ராணுவத்திற்கு எதிராகத் தீவிரமாகப் போராடிய அவன், கேவலம் ஒரு சிறு நுளம்பைக் கையைத் தூக்கித் துரத்த முடியாமல் படுத்திருக்கிறான். ஆனாலும் அவன் அழுவதில்லை. சிரிக்கிறான். 'நான் அடுத்தமுறை ஆனையிறவு அடிபாட்டுக்குப் போய் நாலு 'பஃபள்' விழுத்தாட்டிப் பாருங்கோ' என்று நம்பிக்கையில் சிரிக்கிறான். ஆனால் எல்லோருக்கும் அப்பட்டமாக விளங்குகிறது, அவனுக்கு இந்த வாழ்க்கையில் இருந்து மீட்சி கிடையாது என்று. ஜீரணிக்க முடியாத அந்த உண்மையை அவனுக்குச் சொல்லி அந்தக் கண்களில் தெரியும் நம்பிக்கைச் சுடரொளியை கெடுக்கவேண்டாம் என்று பேசாமல் மௌனமாய் இருந்து வருகிறோம். ஒரு வருடமாக சாப்பாடு ஊட்டிவிட்டு, சலம் மலம் எல்லாம் எடுத்து குளிப்பாட்டி - எல்லாம் 16வயதுப் பையன்கள்தான் செய்கிறார்கள். நாலு நாட்களில் படுக்கைப்புண் உண்டாகிவிடும். கோரையாய்ப் புரையோடிச் செல்லும் அந்தப் பொல்லாத படுக்கைப் புண்கள்.

இந்தப் படுக்கைப் புண்களாலேயே அவனுக்கு மரணம் வருமென அவனுக்குத் தெரியாது. அவனால் புத்தகம் பிடித்து வாசிக்க முடியாது, அருகில் இருப்பவர்கள் புத்தகம் பிடிக்க அவன் வாசிக்கிறான். இது தொடங்கி ஒரு வருடமாகிறது. ரத்தக் கண்ணீருடன் நாளும் பொழுதும் அவனுக்கு அருகிலேயே பெற்றோரும் சகோதரர்களும்.

அந்தக் கண்களில் தெரிந்த


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலப்போக்கில் சரிவரும் என்ற நம்பிக்கை தேயத் தொடங்கிவிட்டது. ஆனாலும் சிறுதுளி நம்பிக்கையுடன் அவன், மாறாத அதே குறும்புச் சிரிப்புடன். நுளம்பு தொடர்ந்தும் மூக்கில் (நீ என்னை என்ன செய்வாய் பயலே என்று திமிராய்) அமர்ந்திருந்து தொல்லை செய்தபடி. இப்பொழுதெல்லாம் அவன் மூக்கை கொஞ்சம் வேகமாக வலுவாக சுழித்து நுளம்பை அடித்துவிரட்டப் பழகியுள்ளான்.

இது ஒருவனின் கதையல்ல. இதே நிலையில் இங்கு 72பேர் இருக்கிறார்கள் (ஆனையிறவு யுத்தத்தின் பின்னர்) அதற்குமுன் எத்தனையோ பேர். இவர்களைப் பார்த்தபிறகு கை, கால்களை இழந்து வருபவர்களைப் பார்த்து 'பறவாயில்லை, நல்லவேளை paralised ஆகாமல் தப்பிவிட்டார்களே, ஒருமாதிரி ஜெய்ப்பூர் கால்பொருத்திச் சமாளிக்கலாம்' எனக் கூறுமளவுக்கு வந்துவிட்டோம். வாழவேண்டிய வயதில் இளமைக் கனவுகளோடு துள்ளித் திரியிற வயதில் இவர்களுக்கு இந்த அவஸ்தை தேவையா?

பக்கத்தில் கூடித் திரிந்த சிறுபையன்கள் தமக்கும் இதேநிலை வரும் என்று தெரிந்தும் போர்முனைக்குப் போகிறார்கள். நாளும் பொழுதும் வீரமரணம் வீரச்சாவு என்று கேட்கிறோம். நேற்று பின்வீட்டில் புலம்பல், இன்று நாலாம் வீட்டில். நாளை?

'அம்மா அக்கா சாப்பாடு தாங்கோ' என்று சாப்பிட்டுச் சிரிக்கச் சிரிக்க நாலுகதை சொல்லிச் சென்றவன் இரவோடிரவாக Bodyஆகக் கொண்டுவந்து இறக்கப்படும் கொடூரம். அல்லது நாலைந்து கிலோ இறைச்சித் துளிகளாய் வீடு திரும்பும் கொடூரம். அல்லது களத்திலேயே புழுத்து நாறிப்போகும் நிலை.

இத்தனையும் பார்ப்பவர்கள் ஒன்றில் உயிரைத் தொலைக்க வேண்டும் அல்லது பாசத்தைத் தொலைக்க வேண்டும்.

* உலகிலேயே அதிகளவு தற்கொலைகள் நிகழும் நாடுகளில் ஒன்றாக இலங்கை திகழ்கிறது. ஒருலட்சம் பேருக்கு 40பேர் வீதம் தற்கொலை நிகழ்கிறது. இலங்கையின் தற்கொலை வீதம் தற்போதைய அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள தற்கொலை வீதத்தைவிட இது அதிகமாகும். சில ஸ்கன்டினேவிய நாடுகளில் மட்டுமே இதைவிட அதிக தற்கொலை நிகழ்கிறது. இத்தகவல்களைப் பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் வெளியிட்டுள்ளார்.

– பிரமன் –

பாசத்தைத் தொலைக்க முடியாவிடின் பைத்தியமாக அலைய வேண்டியதுதான்.

இதைப்பற்றி எல்லாம் எழுத உங்கள் கருத்துச் சுதந்திரத்தைப் பாவிப்பதில்லையா? இப்ப நாங்கள் இருக்கும் நிலை எவ்வளவு மோசமான நிலை. எந்த நாட்டின் உதவியும் இல்லாமல் 13 – 15 வயதுச் சிறார்களை வைத்துக்கொண்டு போராடுவது லேசான காரியமா? இவ்வளவு கஷ்டங்கள் போதாதென்று வெளிநாடுகளில் கிடைக்கும் சிறு உதவிகளையும் கெடுத்து, இலங்கையரசு தான் செய்ய முனையும் புலி எதிர்ப்புப் பிரசாரத்தை, உங்களைப் போன்ற கருத்துச் சுதந்திரக்காரர் அவர்களுக்காகச் செய்து கொடுத்து எங்கள் தம்பி தங்கைமார்களை கைகாலற்ற வெறும் முண்டமாக்குவதில் எவ்வளவு முனைப்பாகச் செயல்பட்டு வருகிறீர்கள் என்பதை நீங்கள் யோசித்துப் பார்த்தீர்களா?

எந்த நாட்டை எடுத்தாலும் சிலபல காரணங்களுக்காக அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றனதான். ஒரு மிகப்பெரிய போராட்டத்தில்

www.tamilarangam.net


போராட்டத்தைப் பின்தள்ளும் காரணிகளை அகற்றுவதில் சில நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவை. அதற்காக இவர்கள் மனித உரிமை மீறல்களைச் செய்துதான் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் இது தவிர்க்க முடியாதது. இவர்களது தவறுகளை நீங்கள் புத்தகங்களில் எழுதுவதை யாரும் பிழை என்று சொல்லவில்லை. ஆனால் தவறுகளை மட்டும் எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்.

இனிமேலாவது உங்களது சுவடுகள் எமது தம்பி தங்கைகள் நடந்து செல்லும் கரடுமுரடான பாதையில் பதிக்கப்பட்ட 'இரத்தச் சுவடுகள்' பற்றியதாக இருக்கட்டும்.

கருத்துச் சுதந்திரத்தை வென்றெடுக்க இது நேரமில்லை. அதற்குக் காலமிருக்கு. இப்ப முக்கியம், சரியோ தவறோ புலிகளின் வழியில் ஊன்றுகோலாய் நின்று நாலா பக்கத்தாலும் நெருக்கும் ராணுவத்தை அடித்துத் துரத்துவது.

இங்ஙனம்
[redacted]
யாழ்ப்பாணம்.

# நோர்வேயிடமிருந்து கற்போம்!



நோர்வேயில் கலை இலக்கியத் துறைகளில் இளைஞர்களுக்கு ஆர்வம் ஏற்படுத்துப் பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இவ்வகை முயற்சிகளில் குறிப்பிடத் தக்கது தொலைக்காட்சித் தயாரிப்புகளான U, Midt i Smoroyet போன்ற நிகழ்ச்சிகளாகும். இந்த நிகழ்ச்சிகள் பலரைக் கவர்ந்துள்ளதுடன், சுவையும் தரமும் மிக்கனவாயும் உள்ளன. இவ்விரு நிகழ்ச்சிகளும் முழுக்க முழுக்க இளைஞர்களால் தயாரிக்கப் படுபவை.

இந்நிகழ்ச்சிகளின் வெற்றியை அடுத்து, தற்போது (13வயது முதல் 21வயது வரையிலான) இளைஞர்களால் தயாரிக்கப்படும் சஞ்சிகை ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதனால் இளைஞர்களது எழுத்தறிவு சிறப்படைய வழியமைக்கிறது.

ஈழத்தில் இந்த நிலை எமக்கு இல்லை. திறமையும் ஆர்வமும் உள்ளவர்களுக்குப் போதிய வடிகால்கள் இல்லை. இவ்வாறு வாய்ப்புகள் இல்லாமையால் இவர்கள் சோர்ந்து போவதுடன், முடமாக்கப் படுகின்றனர். இதைவிட எமது சமூகம் காசைப்பற்றிக் கவலைப்பட்ட அளவு, கலை இலக்கியங்கள் பற்றியோ சமூகரீதியான சிந்தனைகள் பற்றியோ கவலை கொள்வதில்லை. இந்த நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதற்கு ஐரோப்பாவில் தற்போது வெளிவரும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் உதவவேண்டும்.

*- இலக்கியா -*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோர்வேயில் இலங்கையர்.

* கடந்த ஐந்து வருடங்களில் நோர்வேயில் அரசியற் தஞ்சம் கோரியோரின் தொகையில் முதல் பத்து நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

| | | |
|---|---|---|
| 1986 | 213 | (2722) |
| 1987 | 1291 | (8613) |
| 1988 | 158 | (6602) |
| 1989 | 451 | (4433) |
| 1990 | 512 | (3962) |
| 1991 | 556 | (4569) |

* 1991ஆம் ஆண்டு ஆடி மாதம் முதலாம் திகதிய கணக்குப்படி இலங்கையரின் எண்ணிக்கை 5470 ஆகும்.

* 1991ஆம் ஆண்டு நோர்வேஜியப் பிரஜாவுரிமை பெற்ற இலங்கையர் 40 பேராகும்.

* 1991ஆம் ஆண்டு வேலை அல்லது வதிவிட அனுமதி வழங்கப்பட்ட இலங்கையர்களில் 3576 பேர் ஆண்கள், 1775 பேர் பெண்கள்.

வயதுரீதியாக

0 - 15வயது 589

16 - 30வயது 3011

31 - 45வயது 1734

46 - 60வயது 154

61க்கு மேல் 43

மொத்தமாக 5531

* நோர்வேயில் வாழ்வதற்காகக் காட்டப்பட்ட காரணங்கள்: 281 - குடும்ப மீளிணைவு, 16 - கல்வி, 1450 - புதுப்பித்தல், 647 - நிரந்தர வதிவிட அனுமதி (நோர்வேயில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்படாமல் இந்த அனுமதி பாதுகாக்கும்)

* 1991இல் வெளிநாட்டில் விசாபெற்று இங்கு வந்த இலங்கையர் 178பேர். (103 ஆண்கள், 75 பெண்கள்)

- ஆதாரம்: குடிவரவுத் திணைக்கள ஆண்டறிக்கை

**மணிமாறன்**

## நண்பன்

நோர்வேயில் இருந்து இன்னொரு புதிய சஞ்சிகை. கிறிஸ்தவ முற்போக்கு மாசிகை எனத் தன்னை அடையாளப் படுத்தும் இதழின் தொடர்புகளுக்கு: NANPAN, Vadmyra Veien 42, 5071, Loddefjord, BERGEN

## டென்மார்க்கில் இலங்கையர்!

1984முதல் 1989வரை டென்மார்க்கில் அரசியற் தஞ்சம் கோரிய இலங்கையர் தொகை.

| | |
|---|---|
| 1984 | - 266 |
| 1985 | - 300 |
| 1986 | - 2752 |
| 1987 | - 516 |
| 1988 | - 605 |
| 1989 | - 361 |

தற்போதைய மொத்தம் 4,800

தகவல்: குடிவரவுத் திணைக்களம்

- மணிமாறன் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வ.ஐ.ச.ஜெயபாலன்

# கனவுகளும், கவிஞர் சோலைக்கிளியின் காகம் கலைத்த கனவும்

I

நான் விமர்சகனல்லன், ஒரு எழுத்தாளன். விமர்சனமும் படைப்பும் வெவ்வேறு துறைகள். அதனால்த்தான் சோலைக்கிளியின் (யு.எம்.எஸ்.அத்தீக்) *காகம் கலைத்த கனவு* கவிதைத் தொகுதியை என்னிடம் தந்த சுவடுகள் பதிப்பகத்தாரிடம் விமர்சனம் எனக்குப் பரிச்சயமில்லாத துறை, இப்புத்தகம் தூண்டிவிடுகிற சிந்தனைகளை மட்டும் எழுதித் தருகிறேன் என்று கூறினேன்.

II

சோலைக்கிளியின் கவிதைத் தொகுதி கைக்கு வந்ததுமே மனசு அடித்துக் கொள்ளத் தொடங்கியது. எனது பல்கலைக்கழகத்து முஸ்லிம் நண்பர்களது நினைவு மனதை ஆக்கிரமித்தது. அவர்களுள் கவிஞர்கள், எழுத்தாளர்கள், சிறுசஞ்சிகை ஆசிரியர்கள் சிலர் இருந்தார்கள்.

"எங்களை வேரோடும், வேரடி மண்ணோடும் பிடுங்கி எறிந்து விட்டார்கள். நீ மௌனம் சாதிக்கிறாயா?" என்று அவர்கள் அதட்டுவது போலப் பிரமை. உண்மையில் என்னை அதட்டியது எனது மனச்சாட்சிதான். எனது முஸ்லிம் நண்பர்கள் பலர் தமது தாயகத்தில் இருந்து, இரவோடிரவாக விரட்டப்பட்டதை எண்ணி மனசு அழுதது.

முஸ்லிம் மக்களது வீடு வாசல் சொத்து சுகங்கள் அபகரிக்கப்பட்ட கொடுமை, பலஸ்தீனியர்களைப் போலத் தமது பாரம்பரிய மண்ணிலிருந்து அவர்கள் விரட்டி அடிக்கப்பட்ட கொடுமை எமது விடுதலையின் பெயரால் நடத்தி முடிக்கப் பட்டிருப்பதை எண்ணி மனசு அழுதது.

முஸ்லிம் மக்களில் பலர் தென்னிலங்கைத் தெருக்களிலே வேண்டப்படாத அகதிகளாக அலைகிறார்கள். இந்தக் கொடுமை கைவிடப்பட்டு, தவறுகள் இன்னமும் திருத்தப்படவில்லை. இத்தகைய கொடுமைகளால் சர்வதேச ரீதியாகவும், களத்திலும் எமது விடுதலைப் போராட்டம் சிறுமைப்பட்டுப் போயுள்ளது.

காலங்கள் இப்படியே நீடிக்காது என்கிறது வரலாறு. தமிழ்ப் போராளிகளிடையே சுயவிமர்சனத்துக்கும் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கும் வழிவிடும் நிர்ப்பந்தங்கள் மாறுதல்கள் ஒரு புயலைப் போல நிச்சயம் வரும்.

பாதுகாப்பு என்ற பெயரில் சாதாரண தமிழ் மக்களுக்கு எதிரான கொடுமைகளைப் புரிந்து முஸ்லிம் மக்களது உரிமைக் குரலைக் கொச்சைப்படுத்துகிற முஸ்லிம் தீவிரவாதிகள் மத்தியிலும் இது நிகழும். இத்தகைய மாற்றங்களுக்குத் தடையாக மலைகள் இருந்தாலும் அவை வரலாற்றுப்

www.tamilarangam.net

புயலில் அடிப்புண்டு போய்விடும். ஈழத்துத் தமிழ் மக்களதும் முஸ்லிம் மக்களதும் வரலாறுகள் மீண்டும் இணைவதும் முன்நோக்கிச் செல்வதும் நிச்சயம் நிகழும்.

இது கனவுதான். எனினும் வெறும் கனவல்ல இது. இத்தகைய கனவுகள் வரலாற்றில் அடிக்கடி நனவாகிக் கொண்டு வந்திருப்பதை நான் அறிவேன்.

III

வட மாகாணத்தில், தெல்லிப்பளையைச் சூழ்ந்த பிரதேசங்களும், கிழக்கு மாகாணத்தில் கல்முனையை சூழ்ந்த பிரதேசங்களும் தமிழுக்கு அதிக கலைஞர்களையும் இலக்கியக் காரர்களையும் தந்திருக்கிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

தெல்லிப்பளையைச் சூழ்ந்த பிரதேசத்தில் இசை தாளவாத்தியக் கலையும் கவிதையும் சிறக்க, கல்முனை சூழந்த பிரதேசத்தில் கிராமிய ஆடல்களும், பாடல்களும் கவிதைகளும் செழித்திருக்கிறது.

கல்முனைக்கு மேலும் ஒரு சிறப்பு, முதன்மைப்பட்டுள்ள முஸ்லிம் தமிழ்க் கவிஞர்களதும் எழுத்தாளர்களதும் நட்பும் பங்களிப்பும் சார்ந்ததாகும். கவிஞர் நீலாவணன் கவிதைகளை கவிஞர் நு∴மான் பதிப்பித்தமையையும், கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தினது கவிதைகளை முஸ்லிம் கவிஞர்கள் கொண்டாடியதையும் நான் இங்கே நினைவு கூரக்கூடும். பல ஈழத்து தமிழ்ப் படைப்பாளிகளின் ஆக்கங்களை நூலுருவாக்கியதில் முஸ்லிம் படைப்பாளிகளின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும். மஹாகவியின் நூல்கள் நு∴மானாலும், எஸ்.பொ.வின் எழுத்துகளும், மஹாகவியின் குறும்பாவும் ர∴மானாலும் பதிப்பிக்கப் பட்டவையாகும்.

கல்முனையை நினைக்கிறபோது கவிஞர்கள் நீலாவணன், நு∴மான், பசீல் காரியப்பர், நற்பிட்டிமுனை பளீல், சோலைக்கிளி, எச்எம்பாரூக், எழுத்தாளர் உமா வரதராஜன் இப்படிப் பலர் எனது ஞாபகத்துக்கு வருகிறார்கள்.

கல்முனைப் பிரதேசம் தந்த முக்கியமான கவிஞர்களில் ஒருவராக சோலைக்கிளி *காகம் கலைத்த கனவு* ஊடாகத் தன்னை உறுதிப் படுத்தியிருக்கிறார்.



முதன்மையான ஈழத்துக் கவிஞர்களுள் ஒருவராகத் தன்னை நிறுவியிருக்கிறார்.

IV

சோலைக்கிளியின் *காகம் கலைத்த கனவு* கவிதைத் தொகுதியை வெளிக்கொண்டு வருவதில் தமிழ்க் கவிஞர்களும் கலைஞர்களும் ஆற்றிய பங்கு மகிழ்ச்சி தருகின்றது. இந்த வகையில் தமிழகப் படைப்பாளி எஸ்வி.ராஜதுரை, கவிஞர் சேரன், *சுவடுகள் பதிப்பகத்தைச்* சேர்ந்த கவிஞர் இளவாலை விஜயேந்திரன், ஓவியர் தம்பா போன்றவர்கள் நினைவுக்கு வருகின்றனர்.

அறுபதுகளில் கல்முனையில் முளைத்துச் செழித்த தமிழ் முஸ்லிம் கலைஞர்களது ஐக்கியமும் வளர்ச்சியும் எல்லாச் சவால்களையும் தாண்டி விசாலித்து இன்றும் வளர்ந்து வருகிறது என்பதற்கு இவை சாட்சி. இதை எதிர்காலத்தின் நற்சகுனமாகவே நான் பார்க்கிறேன்.

V

சோலைக்கிளியின் கவிதைகள் பற்றி அவரது *காகம் கலைத்த கனவு* கவிதைத் தொகுதியைவிட சிறப்பாகச் சொல்லக்கூடிய எழுத்தாக்கம் சாத்தியமில்லை.

உப்புக் கழிகளும், கடலும், வயலும், அருவிகளும், மேய்ச்சல் நிலமும், காடுகளும் என நெய்தல், மருதம், முல்லை நிலங்கள் சொருகிக் கிடக்கிற பூமியில் பிறந்த கவிஞன் சோலைக்கிளி.

தன்னுணர்ச்சிப் பாடல்கள்போல மனவெளியில் விரிகிற அவரது ஓரிரு

www.tamilarangam.net

கவிதைகளின் பகுதிகள் சங்ககாலக் கவிதைகளை, அதற்கு சமாந்தரமான காலத்திலும் புலத்திலும் தோன்றிய பண்டைய சீன கொரிய கவிதைகளை வாசிக்கிற அனுபவத்தை எனக்கு ஏற்படுத்தியது. சங்ககாலக் கவிதைகள் பல தமிழில் இதுகாறும் வெளிவந்த தன்னுணர்ச்சிக் கவிதைகளின் கொடுமுடிகள் என்பது எனது கருத்து.

சோலைக்கிளியின் பெரும்பாலான கவிதைகளின் மையத்தில் சோலைக்கிளி இருக்கிறார். அங்கு அவரது அனுபவங்கள், மன உணர்ச்சிகள், பதிவுகள் கவிதைப் படிமங்களாகி மாலையாகத் தொடுக்கப் படுகிறது.

ஒரு நினைவுக்கு - ஒரு மனப்பதிவுக்கு - ஒரு உணர்ச்சி கொந்தளிக்கும் தருணத்துக்கு - வாலும் தலையும் பொருளும் தேடமுடியாத போதும் அவை பாடல்களாகவும் கவிதைகளாகவும் சிறந்திட முடியும். தமிழில் கவிதை வாசிக்கிற பலர் இன்னமும் இதனைப் புரிந்து கொள்ளவில்லை.

சிலர் சோலைக்கிளி தனியனாக வெளிப்படுகிறார், தன்னைச் சார்ந்த சூழ்ந்த சமூகத்துடன் வெளிப்படவில்லை என்கிறார்கள்.

சிலர் சோலைக்கிளியின் கவிதைகளின் சேதிகள் என்ன என்று கேட்கிறார்கள்.

வட்டார வழக்கு மிகையாக இருப்பதால் வாசிப்பது தடைப்படுவதாக வேறு சிலர் சொல்கிறார்கள்.

இவர்கள் எல்லோருமே சோலைக்கிளியின் கவிதைப் படிமங்கள் பல ஆணியைப்போல மனதில் தைக்கிற கூர்மையுள்ளது என்றார்கள். இது உண்மைதான்.

வன்முறையில் இருந்து வன்முறைக்கு நகர்கிற சமகாலத்தை நிராகரிக்கிற தொப்பி சப்பாத்துச் சிசுவில் ஒருசில வரிகளையாவது இதற்கு உதாரணத்துக்குக் குறிப்பிடலாம்.

*தொப்பி*
*காற்சட்டை சப்பாத்து*
*இடுப்பில் ஒரு கத்தி*
*மீசை*
*அனைத்தோடும் பிள்ளைகள் கருப்பைக்குள் இருந்து*
*குதிக்கின்ற ஒரு காலம் வரும்*
*.......*
*....*
*வற்றாளைக் கொடி நட்டால்*
*அதில் விளையும் நிலக்கண்ணி.*

வேறொரு கவிதையில் மேகம், சிறகு முளைத்த கவிஞனாகத் திரிகிறது.

*"ஒரு சிறகு முளைத்த கவிஞனைப் போல*
*மேகம்*
*சுதந்திரமாய்த் திரிகிறது"*

சிங்கள அரசபடைகளாலும், தமிழ் முஸ்லிம் இனவெறியர்களாலும் அடிக்கடி பாதிப்புக்கு உள்ளாகிற ஒரு பட்டினம் கல்முனை. குருட்டுத்தனமான இனக்கலவரங்களுக்கு யார் தப்பமுடியும்? சோலைக்கிளியும் இந்த அவல அனுபவங்களுக்குள் தள்ளப் பட்டிருக்கிறார்.

*"நமது நகரம்*
*மீண்டும்*
*தாலி அறுத்துக் கிடந்தது....."*
*(பக்.17)*
என்றும்
"'ஊர்'
*அது என்ன செய்யும்?*
*யானையும் யானையும் மறியேறும்போது*
*சும்மா கிடந்த*
*தகரைப்பற்றை மிதிபடுமே, தகரைப்பற்றை*
*அதைப்போல*
*மிதிபட்டு*
*மிதிபட்டு*
*இறகுதிர்ந்த கோழியைப்போல உருக்குலைந்து தவிக்கிறது......"*
*(பக்34)*

மனித உரிமைகளுக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் குரல் எழுப்பும் பத்திரிகை. நீங்களும் சந்தாதாரராகுங்கள்.

சரிநிகர்

ஒரு வருட சந்தா 15$

6, அலோசாலை கொழும்பு-3 இலங்கை.

SARI NIHAR 6 ALOE AVENUE COLOMBO-3 SRI LANKA



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எனது நினைவில் வரும்போது உம்மா
பழுக்காத மாங்காய்மாதிரி விறைத்த
முகத்தோடு
இன்னொரு தாரமும் அகதியாய் போவதற்கு
ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்த
காட்சிகள் வந்துபோயின......"
(பக்.86)

"நான் மூன்றுதினங்களாய் அகதி.
இந்த உயிரையும், அதற்குள்ளே ஊறுகின்ற
கவிதையையும்
காப்பாற்றி வெற்றிகண்ட ஒருவன்....."
(பக்.94)

என்றும் அவரது அனுபவங்கள் கவிதையாகி உள்ளன.

சோலைக்கிளியின் காதல் நினைவுகள் சில கவிதைகளில் அழகாக வந்துள்ளது.

"அது ஒரு காலம்
காதல் கிறுக்கு தலையில் இருந்த
நாம் பெருவிரலில் நடந்த நேரம்.
அப்போது வானம்
எட்டிப் பிடித்தால் கைக்குப் படுகின்ற
ஒரு முழ இரு முழத் தூரத்தில் இருந்தது.

ஏன் உனக்குத் தெரியுமே
அண்ணார்ந்து நீ சிரித்தால்
நிலவிற்குக் கேட்கும்......"
(பக்.67)

## VI

சோலைக்கிளி போன்ற தன்னுணர்ச்சிக் கவிஞர்களுக்கு ஏற்படக்கூடிய பெரிய விபத்து தருமு சிவராமுக்கு ஏற்பட்ட விபத்தாகும். அத்தகைய அச்சத்தை ஊட்டுகிற கவிதைகள் பல சோலைக்கிளியின் தொகுதியில் இல்லை. எனினும், ஒரு கவிஞனைப் போலத் திரிகிற அற்பனுக்கு என்ற கவிதை அந்த வகையினது. எனக்கு அது அருவருப்பை மூட்டியது.

"அற்பனே! என் இரக்கத்துக்குரிய
அற்பனே.....
......
நீ குப்பை கூளத்துள் கைவிட்டுத்தேடு
என் கவிதையின் மலம் கிடக்கும்.
புசி,




உன் மூளைக்கும் போசாக்கு
திமிருக்கும் மருந்து....."
(பக்.106)

இவருடைய ஆரம்பகாலக் கவிதைகளுள் இக்கவிதை இடம்பெற்றிருப்பின் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கவே மாட்டேன். இது சோலைக்கிளியின் அண்மைக் காலக் கவிதைகளில் ஒன்று.

இத்தருணத்தில் இவரது இரண்டாவது கவிதைத் தொகுதியின் முன்னுரையில் நு:மான் குறிப்பிட்டது போல "அவருடைய உணர்வுலகும் உலகப் பார்வையும் இன்னும் விசாலமடைய வேண்டும், அடையும் என்றே நம்புகிறேன்" என்று குறிப்பிடத் தோன்றுகிறது.

நமது இருப்பு உலகத்தின் இயற்கையின் இருப்புக்குள் ஒரு அங்கமே. நமது இருப்பு மனதளவில்கூட உலக இருப்பில் இருந்து விடுபட்டு, நமது மனதளவுக்கு குறுகிப் போய்விடக் கூடாது.

"இது புதுமை உலகம்
அதிலும் கவிதைக்கு வாழ்வை ஒப்படைத்த
எனது
உலகம் மிகவும் புதுமை"

என்ற கவிஞர் மேலும் அந்த உலகுள், தன்னம்பிக்கையுடனும் விசாலித்தும் சிறகசைக்க வேண்டும்.

மொத்தத்தில் பல நல்ல கவிதைகளைத் தந்தமைக்காக கவிஞர் சோலைக்கிளிக்கும், இதனை அழகுறப் பதிப்பித்தமைக்காக சுவடுகள், பொன்னி பதிப்பகத்தினருக்கும் நன்றி சொல்லத் தோன்றுகிறது.●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரியும் அகதிகள்

## எரிக்கும் ஜேர்மனி

நேரம் 18.23

அவன் தனது சிவந்த அணியை இழுத்து மேலே விடுகிறான். இப்போது கண்கள் மட்டுமே தெரிகின்றன. அவனை யாரும் அடையாளம் காணமுடியாது. பொலிஸ் வாகனத்தைக் கோபாவேசமாகத் தாக்குகிறான். இது (கிழக்கு) ஜேர்மனியின் ரொக்டோக் நகரின் ஐந்தாவது கொடூரமான இரவு.

இதுவரை நூறு பொலிசார் காயமுற்றனர். பலர் படுகாயமடைந்தனர். ஒகஸ்ற் மாதத்தின் கடைசி வாரம். புதிய நாஜிகள், காடையர்கள், ரொக்டொக் நகர வாசிகள் என ஏராளம்பேர் வெளிநாட்டு அகதிகள் முகாமை முற்றுகையிடுகின்றனர். இவர்கள் அனைவரதும் பொதுவான சிந்தனை வெளிநாட்டவரின் வாசனையை நகரில் இருந்தும், ஏன் முழு ஜேர்மனியில் இருந்தும் துடைத்து எறிவதுதான்.



நேரம் 18.30

ஜேர்மனியின் தொலைக்காட்சிகள் அனைத்தும் ரொக்டோக் நகரச் சம்பவம் காட்டப் படுகிறது. திடீரெனக் கண்ணாடி அணிந்த பருத்த உருவம் தொலைக்காட்சியில் தோன்றுகிறது. "ரொக்டோக் சம்பவம் முழு ஜேர்மனிக்கும் அவமானம். இதனால் உலக அரங்கில் ஜேர்மனியின் மரியாதை கெட்டுப் போகிறது." என்கிறது. அந்த உருவம் வேறு யாருமல்ல, ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோல்தான். அங்கிருந்த 115 வெளிநாட்டவர் இடமாற்றம் செய்யப் படுகின்றனர். 23ஆம் திகதி இவர்கள் வசித்த கட்டிடம் நாஜிகளால் தீயிடப்பட்டுத் தரைமட்டமான சாம்பலாகிறது.

"நான் நித்திரை கொள்ளவில்லை, மேலாடையை மட்டுமே மாற்றினேன்." எனப் பொலிஸ் அதிகாரி சிக்பிறீட் அடுத்த நாள் தொலைக்காட்சிக்குச் சொல்கிறார்.

இவர் வேலையால் நிறுத்தப் படுகிறார். காரணம், வெளிநாட்டவர்கள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் போது இவர் இரவு நன்றாக நித்திரை செய்து கொண்டிருந்தமை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரம் 20.30

இருள் சூழ்கிறது. சிறிதளவு கூட்டம் சேர்கிறது. இருள் கெட்டியாக மேலும் மேலும் சனக்கூட்டம் சேர்கிறது.

"நான் நாஜி அல்லன். ஏன் மக்கள் இவ்வாறு சொல்கிறார்களென விளங்கிக் கொள்கிறேன். வெளிநாட்டு அகதிகள் எமது பணத்தை உறிஞ்சிக் குடிக்கிறார்கள், களவாடுகிறார்கள். அவர்களை இதனாலேயே பயமுறுத்துகிறோம், மிரட்டுகிறோம், விரட்டி அடிக்கிறோம்" என நாற்பது வயதான ஒருவர் சொல்கிறார்.

நேரம் 21.14

150 முதல் 200 வரையான பொலிசார் வாகனங்கள் நிறுத்தப்படும் இடத்துக்கு விரைகின்றனர். தபாற்பெட்டிகளைப் பொலிசார் பார்வையிடுகின்றனர். RÖHMET என்று பெரிய அளவில் பெயர் போடப்பட்டுள்ளது. வீட்டினுள் இருப்பவர் சண்டைக்குத் தயாராவது தெரிகிறது. இருள் பரவி மோதலுக்குச் சமிக்ஞை காட்டுகிறது.

தொலைக்காட்சியில் நீதியமைச்சர் தோன்றி "ரொக்டோக் அசம்பாவிதம் வெளிநாட்டு அகதிகள் மீதான வெறுப்பினால் மட்டும் நிகழவில்லை. இதற்கான மூலகாரணம் மிக ஆழமானது. கிழக்கு ஜேர்மனியர்களது வேலையில்லாத் திண்டாட்டமும், அவர்களது எதிர்காலம் பற்றிய கவலையை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்" என்கிறார்.

நேரம் 21.24

பியர் மணம் எங்கும் பெருக்கெடுத்துப் பரவுகிறது. மதுபானச் சாலைகளில் கிறிமினல்களும், காடையர்களும் குழுமுகின்றனர். நகரவாசிகள் பயம் காரணமாக விளக்குகளை அணைத்துவிட்டு ஜன்னல் வழியே பார்க்கின்றனர்.

"வெளிநாட்டவரே வெளியேறுங்கள். ஜேர்மனி ஜேர்மனியர்க்கே" என்ற முழக்கம் நகரைக் குலுக்குகிறது.

"இதே வீதியில் பேர்லின் சுவர் வீழ முன், வியட்னாமியர், கியூபா நாட்டவர், எதியோப்பியா, அங்கோலா நாட்டவர் சுதந்திரமாக வசித்தனர். எந்தப் பிரச்சனையும் இருந்ததில்லை. யாரும் பிரச்சனைகளுக்குப் போனதில்லை. இன்று? சீ! வெளிநாட்டவர் பிள்ளைகளை ஜன்னல் வழியாகத்தான் சிறுநீர் கழிக்க வைக்கின்றனர். சத்தமாகப் பாட்டுப் போடமுடியாது. எங்களால் தாங்க முடியவில்லை. அரசியல்வாதிகளின் சோத்தித்தனமான அகதி அரசியலால் நாங்கள் ஏன் கஷ்டப்பட வேண்டும்" எனக் கோபமாகக் கேட்கிறார், அதே இடத்தில் பிறந்து வளர்ந்த ஒருவர்.

நேரம் 22.08

ஆகாயத்தில் வீசியெறியப்பட்ட முதலாவது பியர்ப் போத்தல் பொலிசாருக்கு அருகில் வீழ்கிறது. இதையடுத்து சரமாரியாகக் கற்கள் வீசப்படுகின்றன. காதில் பஞ்சு அடைத்தபடி பலர் கூச்சல் இடுகின்றனர். பலர் நாஜிகளின் பாணியில் 'சல்யூட்' செய்கின்றனர்.

மெக்லன்பேர்க் மாநிலப் பொலிஸ், ரகசியப் பொலிஸ் அதிபர் தொலைக்காட்சியில் தோன்றுகிறார்.

"இதுவரை நிகழும் மோதல்களை என்னால் புரிந்துகொள்ள முடியும். கடந்த இரு வருடங்களுள் 12,000 அகதிகளை எடுத்துள்ளோம். இது மிகப்பெரிய தொகையாகும்"

நேரம் 22.16

பொலிசார் சனக்கூட்டத்தைக் கலைக்கிறார்கள். பொலிசாரிடம் பிடிபடாது தப்பி ஓடுகின்றனர். சிறிது தூரத்தில் ஒரு வாகனம் தீமூட்டி எரிக்கப்படுகிறது. பொலிசார் நெருங்கி வராதிருக்க நெருப்புக் குண்டுகள் வீதியில் வீசப்படுகின்றன. வீதியில் நெருப்புத் தடைகள் ஒட்டப்படுகின்றன. இந்த ஐந்தாம் நாள் அவர்களால் பலவற்றிற்குத் தீ மூட்டப்படுகிறது. தொலைக்காட்சியில் தொடர்ந்தும் சொற்போர் நிகழ்கிறது.

"முன்னாள் கிழக்கு ஜேர்மனியில் உள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நவநாஜிகள், மேற்கு ஜேர்மனியில் சிறந்த முறையில் ஸ்தாபனமயப்படுத்தப் படவில்லை. காட்டுமிராண்டித் தனமான வன்முறைகள் இனிவரும் காலங்களில் அதிகரிக்கும். இதைப் பாராமுகமாக இருக்கமுடியாது"

நேரம் 23.19

எங்கும் அமைதி. கார், பஸ், புகையிரதம் எல்லாம் நின்றுவிட்டன. வீதியோர விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டு விட்டன. வீடுகளில் இன்னமும் விளக்குகள் அணைந்தபடி உள்ளன. பொலிசாரால் சுற்றி வளைக்கப்பட்ட நாஜிகள், காடையர்கள் களைத்த நிலையில் தூக்கக் கலக்கத்தில்; அவர்களிடம் வெறும் போத்தல்கள், கற்கள், சிறு ஆயுதங்கள்.

ஒருவன் கத்துகிறான் "ஒரு மாதத்தின்முன் நானும் அகதிகளின் தொல்லைகளுக்கு உள்ளானேன். என்னிடமிருந்து இவர்கள் களவாடி விட்டார்கள். தலைநகர் பொண்ணில் இருந்துகொண்டு ஆள்பவர்கள் வீதிச் சண்டையை வெட்கக்கேடான செயல் என இலகுவாகச் சொல்லி விடுவர்கள். அவர்கள் இங்கு வரட்டும். இங்கு சீவித்துப் பார்க்கட்டும்! எங்கள் நாட்டு மக்களையே எமது பொலிசார் விரட்டிக் கலைக்கின்றனர். இதுதான் வெட்கப்பட வேண்டிய நிலை"

நேரம் 00.12

சுற்றி வளைக்கப்பட வட்டம் சிறிதாகிறது. உள்ளே 146 நாஜிக் காடையர்கள். ஒரே ஒருவரைத் தவிர, எவரும் தப்ப முயலவில்லை.

"வீட்டில் எனது ஒருவயதுக் குழந்தை என்னைக் காணாது தவிக்கும். தயவு செய்து என்னை விட்டுவிடுங்கள். நான் வீட்டுக்குப் போகவேண்டும்" என அழுகிறாள் அந்தப் பெண். அப்படியென்றால் அந்தப் பெண் அங்கு ஏன் வந்தாள்.

நேரம் 00.16

அந்தப் பெண் அழுகையுடன் வீட்டுக்குச் செல்ல அனுமதிக்கப் படுகிறாள். மற்றவர்கள் கைதாகின்றனர்.

நேரம் 02.28

கடைசி நாஜியும் அந்த இடத்தில் இருந்து அகற்றப் படுகிறான். இந்தக் கைதிகளில் 13 வயதுச் சிறுமியும் ஒருத்தி. பெரியதொரு போர்நாடகம் முடிகின்றது.

"நாங்கள் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி மீண்டும் தாக்குதலில் இறங்குவோம்" என ஒரு வழுக்கைத் தலையன் கத்துகிறான், நாஜி பாணியில் கையை உயர்த்தியபடி.

செப்டம்பர் முதலாம்நாள் 1939இல்தான் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் தொடக்கம் ஜேர்மனியால் ஆரம்பிக்கப்பட்டது.

*தகவல்: ஆப்தன்பூஸ்தன்*

---

** ஜேர்மனியில் இளம் வயதினரிடையே நிகழ்த்தப்பட்ட வாக்கெடுப்பு ஒன்றில் ஏறத்தாழக் கால் பங்கினர் வெளிநாட்டவர்க்கு எதிரான கருத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.*

** அகதிகள் ஏற்கப்படும் மத்திய இடத்தில் தினசரி 200பேர்வரை புதிதாகப் பதிவாகின்றனர். இந்த வருடம் இதுவரை அரசியல் தஞ்சம் கோரிப் பதிவானோரின் எண்ணிக்கை 2,80,000.*

** ஜேர்மனியப் பூர்வீகத்துடன் வேறு நாடுகளில் வசித்தவர்கள், ஜேர்மனிக்கு வர அனுமதிக்கப் படுகின்றனர். இவர்கள் தாம் பெற்றோர் அல்லது அவர்களின் தாய்தந்தையர் ஜேர்மனியர்கள் என்பதை நிரூபித்தால் ஜேர்மனியப் பிரஜாவுரிமை பெறலாம். இவ்வாறு கடந்த வருடம் ஜேர்மனிக்குள் வந்தவர்களின் எண்ணிக்கை 2,50,000.*

** ஜேர்மனியில் வசிக்கும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை அறுபது லட்சம். இத்தொகை ஜேர்மனியின் சனத்தொகையில் 7.5% ஆகும்.*

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பலஸ்தீனக் கவிஞர் ஸமி அல் – களிம் கவிதைகள்**
**ஆங்கிலம் வழியாகத் தமிழில் மணி**

## பிரயாணச் சீட்டுக்கள்

நீர் என்னைக் கொல்லும் நாளிற்
சமாதானத்திற்கும்
வயல்கட்கும் மழைக்கும்
மாந்தரின் மனச்சாட்சிக்குங்
கொண்டுசெல்லும் பயணச் சீட்டுகளை
என் சட்டைப் பையிற் காண்பீர்.
அவற்றை வீணாக்காதீர்.



## நண்பகலில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம்

நான் ஒரு மரம் நட்டேன்
அதன் கனியை வெறுத்தேன்
அதன் தண்டை விறகாக்கினேன்
ஒரு குழல் செய்தேன்
அதில் ஒரு மெட்டிசைத்தேன்

குழலை நொறுக்கினேன்
கனியை இழந்தேன்
மெட்டை இழந்தேன்
மரத்திற்காக வெதும்பினேன்.

## கிழிந்த உதடுகள்

மரித்த வானம்பாடியொன்றன் கதையை
உனக்குச் சொல்ல விரும்புகிறேன்
கதையை உனக்குச் சொல்ல......
அவர்கள் என் உதடுகளைக் கிழித்திராதுவிடின்.

## ஒரு நகரின் கதை

நீல நகரொன்று
நிதமும் கடைக்கு வருகின்ற
உல்லாசப் பயணிகட்காக ஏங்குகிறது

இருண்ட நகரொன்று
சிற்றுண்டிச்சாலைகளைத் துப்பாக்கிகளுடன் துழாவும்
உல்லாசப் பயணிகளை வெறுக்கிறது

## நான் ஒரு பண்டமான விதம்

அவர்கள் என்னை ஒருமுறை கொன்றனர்
பின் என் முகத்தைப் பலமுறை அணிந்தனர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புங்கு, புளி, பூவரசு

● நாடோடி

## புங்கு

"என்னட்டக் கேட்டு என்னத்தத்தான் தெரிஞ்சுகொள்ளப் போறியள்? என்னட்ட ஒண்டுமே இல்ல. நான் இன்னும் உயிரோட நிக்கிறனெண்டத என்னாலகூட நம்பேலாமத்தான் கிடக்கு.

சாணேற முழஞ்சறுக்கும் எண்டதுபோல, ஒருசொட்டு வேர்விடுகிறதுக்கிடையில மருந்து மாயம் எண்டு சொல்லி என்ர வேர அறுத்துக்கொண்டு போடுவியள்.... என்ர கவலயே என்னச் சுத்திச் சுத்திச் சுடுகுது. இதுக்குள்ள உங்கட பரம்பரக் கதையள அறிஞ்சுவைச்சிருக்க எனக்கெங்க நேரம்...? என்னத்தான் தலையெடுக்க விடாமல் பறுகு பத்திப் போகச் சொல்லி விட்டியள் பறவாயில்ல, உங்கட வேரிலயே கத்தி வைக்கிறியளே...? அப்பனே மன்னிச்சுக் கொள்ளுங்கோ.... ஏதோ தெரியாமச் சொல்லிப் போட்டன். உங்கட பரம்பர வரலாறு எனக்குத் தெரியாது. (?) அந்தா.... அங்க புளியண்ண நிக்கிறார், கேட்டுப் பாருங்கோ ஏதாவது சொல்லுவார். என்னவிட அவருக்குக் கூடத் தெரியும்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## புளி

"மன்னிச்சுக் கொள்ளுங்கோ தம்பிமாரே. நான் சொல்லமாட்டன். சொல்லயே மாட்டன். தயவுசெய்து போங்கோடாப்பா. என்னில பேய் நிக்குதெண்டு நீங்களெல்லாரும் என்ன ஒதுக்கி வச்சத மறந்துபோய் விட்டியளே? இவ்வளவு காலமும் இல்லாமல் இப்ப உங்கட பரம்பர வரலாறு தேவையண்ட உடன பறந்தடிச்சு ஓடி வாறியள்.

பொழுதுபட்டு ஆறுமணி செண்டவுடன நான் நிக்கிற பக்கமே ஒருத்தரும் வரமாட்டியள். எத்தின நாள் நான் இத நினச்சுக் கவலப்பட்டிருப்பன்.

சில நேரம், இருந்துபோட்டுச் சாமத்தில சிலபேர் வருவியள். பன்ரெண்டொரு மணிக்கு. ஏனெண்டு பாத்தால் பேயோட்டிறதுக்கும், செய்வின சூனியம் விடுறதுக்கும்.

இன்னும் என்ர வயித்தில நீங்க அடிச்ச ஆணியள் இருந்துகொண்டுதான் இருக்கு. அவன்தான் பேயோட்டி முருகேசு கொளுத்தின கற்பூரத்தில எரிஞ்சுபோன என்ர வேர்க்கால காயங்கூட இன்னும் ஆறாமல்த்தான் இருக்கு. மறப்பனா? இதுகள நான் மறப்பனா...?

ஓமோம் இப்ப நீங்கள் கையைக் கழுவிறியள். அதுகளெல்லாம் நீங்க செய்யயில்ல, உங்கட முந்தின தலமுறைக்கும் முந்தின தலமுறதான் செய்ததெண்டு சடயிறியள். அந்தச் செய்வின, சூனியத்தில புழுத்துப்போன சனத்தப் பற்றித்தானே கேட்டறிய வந்திருக்கிறியள். சரி, அதத்தான் விடுவம்; உங்கட தலமுற மட்டுமென்ன?, என்ர நிழல்ல ஒதுங்கியிருந்து உறவாடினீங்களாக்கும். போங்க போங்க அந்தா அந்தச் சுடலயில நிக்கிற பூவரமக்கும் என்ர வயதுதான். போய் அதிட்டக் கேட்டுப் பாருங்க, ஏதாவது சொல்லும்"

## பூவரசு

"வாங்கோ, இருங்கோ. சந்தோசமாயிருந்திட்டுப் போங்கோ. சரியான வெய்யிலுக்கால வந்திருக்கிறியள்; கொஞ்சம் களைப்பாறிட்டுப் போங்கோ. அவசியமில்லாமல் கதைகளக் கிளறிப்போட்டு, என்ர வயித்தெரிச்சலக் கிண்டாதேயுங்கோ. உங்கட தலமுறயட்டச் சொல்லியாவது என்ர கவலயத் தீர்க்கலாமெண்டுதான் இவ்வளவு காலமும் நினைச்சுக் கொண்டிருந்தன். ஆனாலதுக்குப் பொசுப்பில்ல.

உதில உடஞ்சு கிடக்கிற கொள்ளிக்குட ஓட்டுச் சில்லுகளும், உந்தத் துருப்பிடிச்ச மூணு இரும்புக் கம்பிகளும், உந்த ஊர்ச் சனங்களின்ர கரிக்கட்டயளும் என்ர கவலயளத் தாங்கேலாமல் அழுதுகொண்டு கிடக்குதுகள்.

என்னச் சுத்திவரயிருக்கிற அத்தின ஊர்ச் சனங்களின்ர மொத்தச் சாவான பாவங்களும் சாம்பல் நீறாகப் பறந்துவந்து கொப்பு, இலை, காய், பூ எண்டு என்ர தேகம் முழுக்கப் படிஞ்சுபோய்க் கிடக்குது. அதுகூடப் பறவாயில்ல, மழயெண்டு வந்துதெண்டால் மொத்தப் பாவமுமே காஞ்சோடியிரும். ஆனாலிப்ப...?

நடுச்சாமத்தில றக்குகளில வந்து பச்ச ரெத்தமெல்லோ எனக்குத் தெளிச்சுப் போட்டுப் போறியள். உந்தா... உதில நிக்கிறதாரு? குலசிங்கத்தின்ர மோனெல்லே? உன்ர கொப்பர்கூட எனக்கு முன்னால நிக்கிற உந்த மூணு கம்பிகளுக்கு நடுவிலதான் எரிஞ்சுபோனவர்.... ஊருக்கு வாரிக் குடுத்துப் போட்டு ஓஞ்சுபோனவர், பாவம் மனுசன். நெஞ்சடைக்குதெண்டு ஒருநாள்ப் படுத்ததுதான், பிறகு எனக்கு முன்னால, என்ர காலடியிலயே காத்தோட கலந்துபோனவர். ஆனால் நீ.....? ஏமஞ்சாமத்தில விதம்விதமான றக்குகளில வந்துபோறாய்.

www.tamilarangam.net

போன கிழமை மட்டும் மூணு தரம் நீல றக்கிலவந்தாய். பழைய ரயருகளும், அர உயிருமா அம்பதறுவது கொண்டுவந்து குவிச்சாய். அதுவும் உன்ர சனங்களாம். உதுகளயெல்லாந் தாங்கிக்கொண்டு இன்னுமேன்தான் உயிரோட நிக்கிறனோ தெரியாது.

போங்கோ.... போங்கோ.... போய்ச் சேருங்கோ. முடிஞ்சா கொஞ்சப் பெற்றோலெடுத்து என்ர அடிவயித்தில ஊத்திக் கொளுத்திப் போட்டுப் போங்கோ.

ஒண்ட மட்டுஞ் சொல்லுறன் கேட்டுப்போட்டுப் போங்கோ. இனிமேலாவது உங்கட சரித்திரங்கள எழுதி வைக்கிறதுக்காவது ரெண்டொருத்தரயாவது விட்டுவையுங்கோ. உங்களக் கும்பிட்டுக் கேக்கிறன்"

புகை விதைத்து வாகனம் சுடலை வளவை விட்டு வெளியேறுகிறது. தறிப்பாரோ? எரிப்பாரோ? எது நிகழ்ந்தாலும் மரணம் மரணம்தானே......?

சிரித்துக் கொள்கிறது பூவரசு.

# லெனினுக்கு அரசியல் தஞ்சம் கிடைக்குமா?



கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் 'போலிக் கொம்யூனிஸ்ட்' கட்சியின் வீழ்ச்சிக்குப் பின் ஏற்பட்ட மாற்றத்தைத் தொடர்ந்து, ஆங்காங்கே நிறுவப்பட்டிருந்த லெனின், ஸ்டாலின், மாக்ஸ் ஆகியோரின் சிலைகள் அகற்றப்பட்டன. இந்தச் சிலைகளில் பல கலைச் சிறப்பு மிக்கதாக உள்ளன. இவ்வாறு அகற்றப்பட்ட சிலைகளை ஜேர்மனியரான ஜோசப் கூர்ப்ஸ் என்பவர் சேகரித்து, இவற்றைக் கொண்டு ஒரு அருங்காட்சியகம் நிறுவத் திட்டமிட்டுள்ளார்.

இது தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்த உக்ரேய்ன் தலைநகர அரச அதிகாரி ஒருவர், உலக அரச தலைவர்களின் சிலைகளில் மிக உயரமானதாகக் கருதப்படும் 45 மீற்றர், 900 தொன் எடை உள்ள லெனின் சிலையை இந்தச் சேகரிப்பாளரிடம் வழங்க முன்வந்துள்ளார்.

ஏற்கனவே இந்தப் பூங்காவில் நிறுவப்பட்ட ஸ்டாலின் சிலை பலரைக் கவர்ந்துள்ளது. இந்தப் பூங்கா, ஜேர்மனியில் உள்ள பாயர்ண் நகரில் அமைக்கப்பட்டு வருகிறது.


*சிவன்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'சிங்கள வீரர்' – தமிழர் அஞ்சலி!



www.tamilarangam.net

# தமிழர்களின் தேசிய அவமானம்

ஈழத்தமிழர்கள் தமது வாழ்வில் பல தேசிய அவமதிப்புகளைச் சுமந்து வந்துள்ளனர். இது அந்நியர்களால் மட்டுமல்ல, சுயநலத் தமிழ்த் தலைமைகளாலும் ஏற்பட்டுள்ளது. அந்நியர் ஆட்சிக் காலத்தில்` பல்வேறு வடிவங்களில் இந்த அவமானங்களைச் சுமக்க நேரிட்டது. பின்பு 'சுதந்திரம்' கிடைத்த பிறகு மலையகத் தமிழர்களின் வாழ்வுரிமைகள் பறிக்கப் பட்டமை, 1956இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டமை, 58,77,81,83 காலங்களில் இனக்கலவரங்கள், 64இல் சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தில் மலையக மக்கள் மந்தைகளைப் போல நாடுகடத்தப் பட்டமை, தமிழ் மக்களின் அபிலாஷைகளைக் கணக்கில் எடுக்காமல் தமிழரசு, கொங்கிரஸ் கட்சிகள் அரசுகளுடன் இணைந்தமை, சிங்கள அரசு தமிழ்க் கட்சிகளுடனான ஒப்பந்தங்களைக் (டட்லி – செல்வா, பண்டா – செல்வா) கிழித்தெறிந்தமை, தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களது போராட்டத்தைக் கைவிட்டு சுகபோகங்களில் திளைத்தமை, இயக்கங்கள் மக்கள்மீதே அடக்குமுறையைப் பிரயோகித்தமை, இயக்கத்தின் உள்ளும் மற்ற இயக்கத்திலும் போராளிகளைப் படுகொலை செய்தமை, போராளிகளை வீதியில் போட்டு எரித்தமை, இந்திய இலங்கை அரசுகளுடன் இணைந்து தமிழர்களைக் கொன்று குவித்தமை, தமிழ் மக்களது அபிப்பிராயங்களைக் கணக்கில் எடுக்காமல் தமிழ் மக்கள்மேல் திணிக்கப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தம் எனபன இவற்றில் சில.

இவை இவ்வாறிருக்க அண்மைக் காலத்திலும் சுயநலத் தமிழ்த் தலைமைகள் தமது இனத்தையே மொத்தமாக அவமதிக்கும் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

ஒருலட்சம் சிங்களவரைக் கொன்றுகுவித்த பிரேமதாசாவின் கால்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு இயக்கங்கள் அவரைப் புகழ்ந்து தள்ளுவதில் போட்டி போடுகின்றன. கொழும்புக் குழுக்கள் அவரைத் தமிழ் மக்களின் பிரச்சனை தீர்க்கவந்த பிதாமகன் எனப் புகழ்கின்றன. புலிகள் பிரேமதாசா நம்பிக்கைக்குரியவர் எனவும், ஈரோஸ் அவர் மாறியிருக்கிறார் எனவும் புகழ்பாடின.

இதுமட்டுமன்றித் தமிழர்களை ஆயிரக் கணக்கில் வடக்கு கிழக்கில் கொன்று குவித்த பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கொல்லப்பட்ட போது, கொழும்புத் தமிழ்க் குழுக்கள் அவரை 'மனிதாபிமானி' என்றுகூடப் போற்றின.

இதேபோலத்தான் இந்திய அரசும் ஈபிஆர்எல்எ:ப்பும் வடக்கு கிழக்கில் காட்டாட்சி நடத்திய காலத்தில் பல ஆயிரம் தமிழ் இளைஞர்கள் பலவந்தமாகப் பிடிக்கப்பட்டுத் தேசிய ராணுவத்தில் சேர்க்கப் பட்டனர். 89கடைசியில் கிழக்கில் சிங்களப் பொலிஸ் நிலைகளைத் தாக்கியது தேசிய ராணுவம். இதில் இறந்த சிங்களப் பொலிசாருக்காக, அப்போது அரசுடன் இணைந்திருந்த புலிகள் அஞ்சலி செலுத்தியதுடன் ஹரததாலும் அனுஷ்டித்தனர்.

இந்த நிலை இன்றும் தொடர்கிறது. கடந்த ஒகஸ்ற் மாதம் குண்டுவெடிப்பில் வடபிராந்திய அரசபடைகளின் தளபதி கொப்பேகடுவ கொல்லப்பட்டார். இவர் 80ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் மீதான பல காட்டுமிராண்டித் தாக்குதல்களை உத்தரவிட்டவர் என்பதுடன், 1990 யூனில் தொடங்கிய ஈழப்போரில் கிழக்கில் பல தமிழர்களின் தலையை வெட்டி

www.tamilarangam.net

வீதிகளில் போட்டு எரித்தவர்.

பின் முழு வட இலங்கைக்குமான தளபதியாகச் செயற்பட்டவர். இவரது காலத்தில் பல குண்டுத் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டு ஏராளம் தமிழர்கள் உயிரிழந்தனர். வடக்கு மீதான பொருளாதாரத் தடைக்கும் இவரே காரணகர்த்தா. இதனால் பல தமிழர்கள் உணவின்றியும், அத்தியாவசிய மருந்துகள் இன்றியும் உயிரிழந்தனர்.

இவரது மரணத்திற்குப் பின் சிங்கள அரசின் வாலில் தமது சுயநலத்திற்காகத் தொங்கிக் கொண்டிருக்கும் கொழும்பு இயக்கங்கள் இவரைப் பெரிய செயல் வீரராகவும் தமிழரைக் காக்க வந்த கடவுளாகவும் வர்ணித்து அஞ்சலி செலுத்தியுள்ளன.

இவ்வாறு சுயநலத் தமிழ்த் தலைமைகளின் செயற்பாடுகள் தமிழ்த் தேசிய இனத்தினைத் தொடர்ந்தும் அவமானப் படுத்துகின்றன. இவ்வாறான அவமானங்களைத் தொடர்ந்தும் சுமக்கமுடியாது. சுயநலத் தலைமைகளின் முகத்திரைகள் கிழிபடும், தமிழ் மக்கள் தமது விடுதலையை இவர்களிடம் இருந்தும் பெறுவர்●

– தமிழ்மறவன் –

## நிவேதனம்

புதிய சிறுகதைத் தொகுதி, வெளியீடு
திருமலை கலை இலக்கிய வட்டம்,
வித்தியாலய ஒழுங்கை, திருகோணமலை,
இலங்கை.




வெளிவந்துவிட்டது!

ஈழத்தின்
தலைசிறந்த
கவிஞர்களில்
ஒருவரான
சோலைக்கிளியின்
'காகம் கலைத்த கனவு'
கவிதைத் தொகுதி

ஐரோப்பா எங்கும்
விற்பனையாளர்கள்
தேவை

சகல
தொடர்புகளுக்கும்

சுவடுகள் பதிப்பகம்

SUVADUGAL PATHIPPAGAM
Herslebs Gt43
0578 Oslo
NORWAY


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கெரில்லா இயக்கத் தலைவர் கைது

- சுதாகரன் -

இன்று உலகில் உள்ள முக்கிய கெரில்லா இயக்கங்களில் ஒன்று பெரு தேசத்து sendero Luminos (Shining Path/ ஒளிரும் பாதை) இயக்கம். இதன் தலைவர் அபிமாய்ல் குஸ்மான் (Abimael Guzman) செப்டம்பர் 13ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டார். இவர் இன்றைய கெரில்லா இயக்கத் தலைவர்களில் முக்கியமானவர்.



பெருவின் தலைநகர் லீமாவில் குஸ்மான் கைதானார். பெருவின் கிழக்குப் பகுதி, காட்டுப் பிரதேசம், அண்டெஸ் பகுதி மற்றும் கரையோரப் பகுதிகளும் 'ஒளிரும் பாதை'யின் கட்டுப்பாட்டில் உள்ளன. முக்கியமாக பெருவின் பாதிச் சனத்தொகை மக்கள் வாழும் சேரிப்பகுதிகளில் அவர்களது செல்வாக்கு ஓங்கியிருந்தது.

வீடு ஒன்றில் வைத்துக் கைதான குஸ்மானுடன் ஏழு முக்கிய தலைவர்களும் கைதாகினர். எதிர்காலத்தில் இயக்கத்தின் நடவடிக்கைகள் பற்றித் திட்டமிடக் கூடியபோதே இவர்கள் கைதாகினர் என அறிவிக்கப் படுகிறது.

பன்னிரு வருடங்களுக்கு முன் பெருவின் புகழ்பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றில் தத்துவப் பேராசிரியராக இருந்தவர் குஸ்மான். நாளாந்தம் மக்களின் வறுமை, துன்பத்தை அனுபவ ரீதியாக உணர்ந்தவர். இந்த மக்களின் நிலையை மாற்றவேண்டும் என்பதற்காகத் தனது பல்கலைக்கழக வாழ்வைத் துறந்து அரசியலில் நேரடியாக இறங்கி வேலை செய்தார். மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காக 1970ஆம் ஆண்டு வேறு பலருடன் இணைந்து பெரு கொம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து பிரிந்து 'ஒளிரும் பாதை' என்ற பெயரில் விடுதலைக் குழு ஒன்றை அமைத்து மக்களிடையே வேலை செய்தார்.

இவரது அமைப்புக்கு மக்களிடையே பெரும் செல்வாக்கு வளர்ந்தது. இதனால் அரசுக்குப் பெரும் தலையிடி ஏற்பட்டது. அரசு தனது கோபத்தை மக்கள்மீது படைகளை ஏவியும், மக்களைக் கைது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்தும், சிறையில் அடைத்தும் காட்டியது. இது இன்னும் அதிக கோபத்தை அரசின்மீது மக்கள் கொள்ளக் காரணமாகியது. அரசின் தேடுதல்கள் அதிகரிக்க குஸ்மான் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ள நேர்ந்தது. 1979இல் அவரது தலைமறைவு வாழ்வு தொடங்கியது. அடுத்த இரு வருடங்களில் முழு அமைப்பாக அரசின்மீது கெரில்லாப் போராட்டத்தைத் தொடங்கியது 'ஒளிரும் பாதை'.



இதுவரை 26000 உயிர்களைப் பலியெடுத்துள்ளதாகக் கணிப்பிடப்படும் இந்த உள்நாட்டு யுத்தத்தில் பெருவின் சர்வாதிகாரிகள் சுகபோகங்களை அனுபவிக்க, வறுமையில் வாடும் மக்கள் மேலும் வறுமையையே கண்டனர். தமது தினசரி வாழ்வையே கொண்டுசெலுத்த முடியாமல் திண்டாடினர் மக்கள். அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் மக்களை ஒடுக்குவதற்காக அரசபடைகளை ஏவிப் படுகொலைகள் புரியும், கொடுமை நிறைந்த அரசை அருகில் உள்ள அமெரிக்கா ஆயுத, பண உதவிகள் செய்து காப்பாற்றுகிறது. கடந்த பன்னிரு

* மாவோவின் பாதையைப் பின்பற்றுவதாகக் கூறும் 'ஒளிரும் பாதை' ஆரம்பத்தில் இருந்த மக்களது பேராதரவைப் பிற்காலத்தில் பெரிதும் இழந்தது. ஏனைய சில அயல் நாடுகளில் விடுதலைப் போராட்டங்களுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்தபோதும் ஒளிரும் பாதை அவ்வாறான அங்கீகாரத்தைப் பெறாமைக்கு முக்கிய காரணமாக அமைப்பு நிகழ்த்திய மனித உரிமை மீறல்கள் கூறப்படுகின்றன.

* ஒளிரும் பாதை தாக்குதல்களை நிகழ்த்திய அளவு தீவிரத்துடன் மக்களைப் போராட்டத்தில் இணைக்கவில்லை. இதுவே அரசு பெற்ற பல வெற்றிகளுக்கும், அமைப்பின் தலைவர்கள் கைதாவதற்கும் முக்கிய காரணமாக அமைந்தது.

* பெருவில் மரணதண்டனை அமுலில் இல்லை. ஆனால் குஸ்மான்மீது மரணதண்டனை விதிக்க அரசு திட்டமிட்டு வருகிறது. தனது ஆதரவாளர்கள் மூலம் குஸ்மானுக்கு மரண தண்டனை விதிக்குமாறு கோரும் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்தி வருவதுடன், குஸ்மான் மீதான தீர்ப்பு விவகாரத்தில் மக்களது கருத்தை மதிப்பேன் என பெரு அதிபர் ப்யூஜிமோரி கூறியுள்ளார்.

* குஸ்மான் கைதான சில தினங்களின் பின் அவரைப் பார்க்கச் செய்தியாளர்கள் அனுமதிக்கப் பட்டனர். சிறையினுள் உள்ள வெளியான பகுதி ஒன்றில் கம்பிக் கூண்டு ஒன்றினுள் வைக்கப்பட்டிருந்த குஸ்மான் புரட்சி வெல்லும் எனவும், மக்கள்விரோத ஆட்சி தூக்கி எறியப்பட்டு மக்களது ஆட்சி மலரும் எனவும் குரலெழுப்பினார். விடுதலை கீதங்களையும் அவர் பாடினார். அவர் உற்சாகமாகவும் உறுதியாகவும் காணப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருடங்களில் அரசு போர்ச்செலவாக ஏறத்தாழ 2200கோடி டொலர்களைத் தின்று தீர்த்துள்ளது. இந்தச் செலவுகள் கடனாக வழங்கப் பட்டமையால் இன்று பெரு தேசம், பெரும் கடனாளியாகியுள்ளது. இந்தச் செலவுகளுக்காகக் கரைக்கப்பட்ட பணம், மக்களின் வறுமையை ஒழிக்கப் பயன்படுத்தப் பட்டிருந்தால் பெருவின் வறுமை பெருமளவில் ஒழிந்திருக்கும் என உலகம் முழுவதும் உள்ள மனிதாபிமானிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் பெரு ஜனாதிபதி அல்பேட்டோ ப்யூஜிமோர் பாராளுமன்றத்தைக் கலைத்து அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தார். இதையடுத்து யூன் மாதத்தில் வேறொரு கெரில்லா அமைப்பின் தலைவர் விக்டர் போலாய் கைதானார்.

இவ்வாறு தலைவர்களைக் கைது செய்வதன் மூலம் மாத்திரம் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்ய முடியாது என்றும் ஒளிரும் பாதையை இந்த முறையில் அழித்துவிட முடியாது எனவும் பெரு மக்கள் குரல் எழுப்பியுள்ளனர்.

## மோசமான வருடம்!

– தூதுவன் –

உலகெங்கும் சமாதானமும் சகவாழ்வும் உருவாகவேண்டும் என்று பலகோடி மக்கள் நாளாந்தம் கனவு காண்கிறார்கள். ஆயினும் என்ன கனவுதான் நனவாகாமல் நழுவிக்கொண்டே போகிறது.

கடந்த வருடத்துடன் முடிந்துபோனதாகச் சொல்லப்படும் பனிப்போர் காலத்திலும் மனித உரிமைகள் மீறப்படுவதாக உலகில் எங்கும் பேசப்பட்டது. கொம்யூனிசப் பூதத்தினாலேயே மனித உரிமைகள் மீறப்பட்டதாகப் பூச்சாண்டி காட்டப்பட்டது. போலிக் கொம்யூனிசம் முடிவுக்கு வந்தபின்னும் மனித உரிமைகள் மதிக்கப்படாமல் தொடர்ந்தும் மீறப்படுவதேன்?

இந்த வருடம் முதல் ஆறு மாதத்தில் மிக மோசமான அளவில் 142 நாடுகளில் மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்துள்ளன. இதில் 100 நாடுகளில் அரசியற் கைதிகள் பயமுறுத்தல், சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளனர். குறைந்தது 25 நாடுகளில் மக்கள் திடீரெனக் காணாது போதல் நிகழ்ந்துள்ளது. இதில் இலங்கையும் ஒன்று. 45 நாடுகளில் சட்ட விசாரணை இன்றி மக்கள் தூக்கில் இடப்பட்டுள்ளனர்.

இதில் முக்கியமானதாக ஈராக், புருண்டி, பர்மா, சீனா உள்ளதாக மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது. இந்த விடயத்தில் ஐரோப்பிய நாடுகளும் குறைந்துவிடவில்லை. முன்னாள் யூகோஸ்லாவியாவில் பல தரப்பினரும் மக்கள் படுகொலைகளை நிகழ்த்தியுள்ளன.

துருக்கியப் படைகளும் குர்திஷ் மக்கள்மீது கொலைவேட்டை நிகழ்த்தியுள்ளன. கடந்த வருடம் ஈராக்கில் இருந்து விடுதலை அடைந்த குவைத்தில் பலர் கைதாவதும், சித்திரவதை செய்யப்படுவதும், காணாமற் போவதும் பெரிய அளவில் நிகழ்ந்துள்ளது.

பிரேசிலில் வீதயோரச் சிறுவர்கள் அரச படைகளினால் கொடூரமான முறைகளில் கொல்லப் படுகின்றனர்.

அமெரிக்காவில் தூக்குத் தண்டனை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




வருடாவருடம் நோர்வேயில் இடம்பெறும் அமண்டா திரைப்பட விழாவில் சிறந்த நடிகருக்கான விருது வில்:.பிறட் பிறெய்ஸ்ற்ராண்டிற்கு வழங்கப் பட்டுள்ளது. சிறந்த வெளிநாட்டுப் படத்திற்கான விருதை கப்பித்தானோII (Capitano II) பெற்றுள்ளது.

சிறந்த படத்திற்கும் திரைக்கதைக்குமான பரிசு 'துாருண் லியான்'க்கும் (Torun Lian), சிறந்த நடிகைக்கான பரிசு அன்னிக்காவுக்கும் (Anneka Von Derlippe) வழங்கப்பட்டன. சிறந்த நோர்வேஜியப் படமாக Frida - med hjertet i haanden இற்கு வழங்கப் பட்டது. சிறப்பு விருது நடிகை லீவ் உல்மானுக்கு (Liv ullmann) வழங்கப் பட்டுள்ளது.

– சினிப்பித்தன் –




## அதிகம் சம்பாதிக்கும் உலக நடிகர்




தமிழில் அதிகம் சம்பாதிக்கும் நடிகர் யார் என்று கேட்டால் 'சுப்பர் ஸ்டார்' ரஜனிகாந்த் என்பீர்கள். சற்றே மேலே போய் உலக அளவில் எற்று கேட்டால் ரம்போ ஸ்ரலோனோ அல்லது வேறு திரைப்பட நடிகர்கள் பெயரையோதான் கூறுவீர்கள். உண்மை அதுவல்ல. இன்று உலகில் மிக அதிகமாக உழைப்பவர் நகைச்சுவை நடிகர் பில் கொஸ்பி (Bill Cosby)தான். இவர் கடந்த வருடம் சம்பாதித்த தொகை 9கோடியே 80லட்சம் அமெரிக்க டொலர்கள்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Oui!

சே.தில்லைநாதன்


பிரான்சில் அண்மையில் நிகழ்த்தப்பட்ட சர்வசன வாக்கெடுப்பில் பிரான்சின் வாக்காளர்களில் பெரும்பான்மையினர், ஐரோப்பிய சமூகத்துடன் இணைவதற்கு ஒப்புதல் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய சமூகத்தில் முற்றாக இணைவது பற்றிய சர்வசன வாக்கெடுப்பு சில காலம் முன்னர் டென்மார்க்கில் நிகழ்ந்தது. இந்த வாக்கெடுப்பில், டென்மார்க் மாஸ்ற்றிச்ற் (Maastricht) ஒப்பந்தத்தை ஏற்கவேண்டியதில்லை என வாக்காளர்கள் தீர்ப்பளித்தனர். இந்தத் தீர்ப்பு பல 'ஐரோப்பிய சமூக' நாடுகளைப் பயமுறுத்தியது. மக்களின் அபிப்பிராயங்களைக் கணக்கில் எடுக்காமல், ஐரோப்பிய நாடுகள் சில, அரசியல் பொருளாதார ரீதியில் ஒன்றிணைவது பற்றிப் பலத்த கேள்வி எழுந்தது.

டென்மார்க்கின் முடிவு இவ்வாறு பெரும் கேள்விகளை எழுப்பக் காரணம், டென்மார்க் ஐரோப்பிய சமூகத்தில் இணைவதற்கான அடிப்படையான பன்னிரு நாடுகளில் ஒன்று என்பதுதான். டென்மார்க் நிராகரித்த இந்த ஒப்பந்தத்தை ஏனைய பதினொரு நாடுகளில் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற சந்தேகம் பரவலாக எழுந்தது. இந்தச் சந்தேகம், ஐரோப்பிய சமூகத்தில் முக்கியம் வாய்ந்த நாடான பிரான்சின் சர்வசன வாக்கெடுப்பு வரை அனைவரையும் காத்திருக்க வைத்தது. ஆனால், பிரான்சின் வாக்காளர்கள் மிகக் குறைந்த வித்தியாசத்திலேயே ஐரோப்பிய சமூகத்துடன் இணைய ஒப்புதல் கொடுத்திருப்பது (50.7% ஒப்புதல்) சந்தேகத்தைத் தீர்ப்பதற்குப் பதிலாகப் பலரையும் குழப்பத்திற்கு உள்ளாக்கி விட்டது.

பிரான்சின் தீர்ப்பை, (உதாரணமாக நோர்வேயில்) மாஸ்ற்றிச்ற் ஒப்பந்தத்திற்கு

பிரான்சின் 'ஆமாம்!'







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்ப்புத் தெரிவிப்போர் தமது வெற்றியாகக் கொண்டாடினர். அதற்குக் காரணம் மிகக் குறைந்தளவிலேயே பிரான்ஸ் மக்கள் ஐரோப்பிய சமூகம் உருவாக ஆதரவு தெரிவிக்கின்றனர் என்பதுதான். அதேவேளை பிரான்ஸ் ஆதரவு தெரிவித்துவிட்டது என்று, ஐரோப்பிய சமூக இணைவு ஆதரவாளர்கள் வெற்றி கொண்டாடுகிறார்கள். 'இது,




ஏறத்தாழ வெற்றி தோல்வியின்றி முடிந்த ஒரு போட்டியில் இருதரப்பும் வெற்றி கொண்டாடுவது போல' என ஒரு பிரபல அரசியல் விமர்சகர் குறிப்பிட்டார். நோர்வேயில் வசிக்கும் பெரும்பாலான பிரெஞ்சு மக்களும் இந்த முடிவை ஆதரித்துள்ளனர்.

இதேவேளை டென்மார்க்கின் முடிவு பற்றிக் கவலைப்படாமல் முன்பே திட்டமிட்டபடி ஐரோப்பிய சமூகம், 1992 முடிவில் இணையவேண்டும் என ஜேர்மன் கூறியுள்ளது. மீண்டும் ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தித் தனது வாக்காளர்களுக்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்கி முடிவை மாற்ற கால அவகாசம் வழங்குமாறு டென்மார்க் வேண்டியுள்ளது.

ஏறத்தாழ இதே காலப்பகுதியில் இருபது வருடங்கள் முன்னர் (1972 செப்டம்பர்) நோர்வேயில் ஐரோப்பிய சமூகத்துடன் இணைவது பற்றி அபிப்பிராய வாக்கெடுப்பு நிகழ்ந்தது. பெரும்பான்மையினர் அந்த யோசனையை நிராகரித்தனர். தற்போது ஐ.ச.உடன் இணைவதற்கான எதிர்ப்பு படிப்படியாக அதிகரித்து, பிரான்சின் முடிவுகளுடன் முன்னெப்போதும் இல்லாதளவு கூடியுள்ளது. நோர்வேயில் தேசிய ரீதியாகத் தற்போது 50%க்குச் சற்று அதிகமானோர் எதிர்ப்பையும், ஏறத்தாழ 35% அளவினர் ஆதரவும் தெரிவிக்கின்றனர். மீன்பிடியில் பெருமளவு தங்கியுள்ள வடநோர்வேயில் 15% வாக்காளர்களே ஆதரவு தெரிவிக்கும் அதே வேளை, 65%க்கு மேற்பட்டோர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

## ஐந்தாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு

1974இல் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நிகழ்ந்தபோது உருவாக்கப்பட்ட உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கத்தின் ஐந்தாவது மாநாடு ஒக்டோபர் மூன்றாம் திகதி முதல் ஐந்தாம் திகதிவரை சிட்னியில் (அவுஸ்திரேலியா) நிகழ்கிறது. ஏற்கனவே சென்னை, மொறீஷியஸ், சேலம், கோலாலம்பூர் ஆகிய நகர்களில் 1977 முதல் 1987வரை நான்கு மாநாடுகள் நிகழ்ந்துள்ளன. தற்போது மலேஷியாவில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் உலகத் தமிழர் பண்பாட்டியக்கத்தின் இந்த மாநாடு சிறக்க சுவடுகள் வாழ்த்துகிறது.

மாநாடு பற்றிய தகவல்கள் மற்றும் தொடர்புகட்கு:

Conference Secretary,
ICTC 92,
P.O.Box: S60
Homebush South,
NSW - 2140,
AUSTRALIA.
Tlf: 02/6496379
Fax: 02/7492390



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கொழும்புப் பயணம்.

# ஏமாந்த தமிழர்

கோடை விடுமுறைக்குச் சிலர் இலங்கை சென்று வந்தனர். அவர்களில் சிலர் கூறிய தகவல்கள் இவை.

"பொதுவாகத் தமிழர்கள் சிங்களவர்களை 'மோடயா' (மடையர்) என்று குறிப்பிடுவது வழக்கம். ஆனால் உண்மையில் தமிழர்கள்தான் 'மோடயா' என்று நினைக்க வைக்கிறது கொழும்பு நிலை.

தமிழர்கள் பல ஆயிரங்களை ஏஜன்சியிடம் கொடுத்துவிட்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கோ மேலை நாடுகளுக்கோ வருகின்றனர். மேலை நாடுகளில் தமது அரசியற் தஞ்சக் கோரிக்கைகளை நிறுவப் படாதபாடு படுகின்றனர். இப்படிப் பாடுபட்டு அந்தந்த நாடுகளில் மிகக் கஷ்டப்பட்டு உழைத்து மிச்சம் பிடித்து ஊரில் உள்ள குடும்பத்திற்கு அனுப்புகின்றனர்.

தமிழர் பலர் (முக்கியமாகக் குடாநாட்டில் இருந்து) கொழும்பு வந்துள்ளனர். இவர்களது வருகையால் கொழும்பில் வாடகை மிக அதிகம் கூடியுள்ளது. சிங்களவர்கள் தமது வீட்டின் ஒரு பகுதியை மட்டும் தாங்கள் பாவித்துக்கொண்டு, மிகுதியை அதிக வாடகைக்குத் தமிழர்களுக்கு வழங்குகின்றனர். இதன்மூலம் அதிகமாகச் சம்பாதிக்கின்றனர். இதைவிட வெளிநாடுகளுக்குச் செல்லக் கொழும்பு வந்து நிற்பவர்கள் தங்கும் ஹொட்டல்கள், லொட்ஜ்கள் தமது வாடகையைப் பலமடங்கு உயர்த்தி வைத்துள்ளன.

அதைவிட வேறு செலவுகள்.



தமிழர்களுக்குப் பெரும்பாலும் வெளிநாடுகளில் இருந்து பணம் வருவதால் தாராளமாக ஆடம்பரச் செலவுகள் செய்கின்றனர். வெளிநாடுகளில் இருந்து வந்து திருமணம் செய்பவர்களும் திருமணத்திற்கு வாகனங்கள், மண்டபம் என்று பல தேவைகளுக்கு அதிக பணம் செலவிடுகின்றனர்.

இவ்வாறான நிலைகளால் இருந்த இடத்திலேயே அதிக பணம் உழைப்பவர்கள் சிங்களவர்கள்தான். பல கஷ்டங்களை அனுபவித்து உழைக்கும் தமிழர்களின் பணத்தைக் கஷ்டப்படாமலே பெறும் முறையைச் சிங்களவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியலில் போலவே இதிலும் அவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டுகின்றனர். பெருமைபேசி ஏமாறுவது தமிழர்கள் மட்டுமே.

இன்னொருவர் கூறியது

குடாநாட்டிலிருந்து 'தப்பி' வருபவர்கள் 16 வயது முதல் 25வயது வரை உடையோரே அதிகம். இவர்களால் கொழும்பில் எதிர்காலத்தில் பெரும் பிரச்சனை உருவாகவுள்ளது.

இவர்களது சகோதரர்கள் வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்புகிறார்கள். இவர்களோ தமது சகோதரர்களது கஷ்டங்களை உணர்வதாக இல்லை. படிப்பிலோ தமக்குப் பயன்தரும் துறைகளிலோ கவனம் செலுத்துவதாக இல்லை. பகட்டாக உடை உடுப்பது, மோட்டார் சைக்கிளில் சுற்றுவது, விலையுயர்ந்த ஹோட்டல்களில் உணவு உண்பது என்று உல்லாசமாகப் பொழுது போக்குகிறார்கள்.

இதுவாவது பறவாயில்லை. பொழுதுபோக்கிற்காக சிங்களப் பெண்களின்பின் சுற்றுவது, பகிடி விடுவது என்று தமது ஆதிக்கத்தைக் காட்டுகின்றனர். இதனால் பல சிங்களவர்கள் வெறுப்படைகின்றனர். சில இடங்களில் சிறு சச்சரவுகளும் நிகழ்ந்துள்ளன. இவை காலப்போக்கில் விஸ்வரூபமெடுக்கலாம். கொழும்பில் உள்ள எல்லாத் தமிழர்களுக்கும் எதிரானதாக இது மாறலாம், 83கலவரம் போல. எனவே இந்த இளைஞர்கள் பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டும். வெளிநாட்டில் உள்ள தமது சகோதரர்களின் கஷ்டங்களை உணர்ந்து பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டும்.

தமிழரிடமிருந்து தப்புவது கஷ்டம்

இவை இவ்வாறிருக்கக் கொழும்புக்கு வரும் தமிழர்களைச் சில சிங்களக் காடையர்களுடன் தமிழ் இயக்கங்களும் சேர்ந்து கப்பம் பறிப்பதில் ஈடுபட்டுள்ளனர். கொடுக்காவிட்டால் 'புலி' என்று கூறிக் கொண்டுபோய் விடுவார்கள்.

அங்குள்ள அனேக தமிழர்கள் கூறுவது இதுதான், சிங்களப் பொலிசோ, ராணுவமோ பிடித்தால் பிடிபட்டவர் எங்கிருக்கிறார் என்பதை அறியவும் மீட்பதும் ஓரளவு சுலபம். ஆனால் தமிழ் இயக்கங்கள் அதிலும் குறிப்பாக ஈபிடிபி கொண்டு சென்றால் எப்படி விசாரித்தும் எதையும் அறியமுடியாது. கடத்தப் பட்டவர் இறந்துவிட்டதாக நினைத்து ஈமக்கிரியைகள், அந்திரட்டி செய்ய வேண்டியதுதான்.

'தமிழ் விடுதலை' இயக்கங்கள் கொழும்பில் நடத்தும் காட்டுதர்பார் இதுதான்.

– செய்திகேட்டோன் –

## புதிய சஞ்சிகை!

டென்மார்க்கில் புதிதாக ஒரு சஞ்சிகை தொடங்கியுள்ளது. அண்மையில் வெளிவந்த இந்தச் சஞ்சிகை விலைமாதர்களால் தமக்கென்றே நடத்தப்படுவது. இவ்வாறான ஒரு சஞ்சிகை உலகில் வேறு பகுதிகளில் வெளிவருவதாக அறியப்படவில்லை. இச்சஞ்சிகையில் விலைமாதர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் முக்கியமாக ஆராயப்படும். நோர்வேயைவிடவும் டென்மார்க்கில் விலைமாதர்கள் தமது தொழிலை நடத்துவதற்கான சுதந்திரம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

– கேசவன் –

www.tamilarangam.net

# இலங்கையில் இருந்து சில செய்திகள்

* சிவிலுரிமைகள் இயக்கம், இலங்கையின் தென்பகுதியில் அரசியற் காரணங்களுக்காக அண்மையில் 30 தாக்குதற் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாக அறிவித்துள்ளது. இவற்றிற் பெரும்பான்மை, லலித் காமினி கூட்டுக் கட்சி ஆதரவாளர்கள் மீது நிகழ்ந்துள்ளது. 'அத்த' பத்திரிகையின் கேலிச் சித்திர ஓவியரான யூனுஸ் (60வயது) கத்திக் குத்துக்கு இலக்கானார்.

* பிரேமதாசாவின் ஜனாதிபதித் தேர்வு செல்லுபடியாகாது என சிறிமாவோ அம்மையார் தொடுத்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. 88பக்கங்களில் எழுதப்பட்ட இத்தீர்ப்பு பிரேமதாசவுக்குக் கிடைத்த மேலும் ஒரு வெற்றியாகக் கருதப்படுகிறது. மூன்று வருடங்களாக நிகழ்ந்த இந்த வழக்குச் செலவுகளை சிறிமாவோ அம்மையார் செலுத்த வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 1988 ஜனாதிபதித் தேர்தலில் வன்முறைகள் இடம்பெற்றிருந்தாலும், அவ்வன்முறைகள் தீர்ப்பைப் பாதித்துள்ளதாக நிரூபிக்கப் படவில்லை என உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

* செப்டம்பர் முதலாம் திகதி சைக்கிள் குண்டு ஒன்றுக்கு 22 முஸ்லிம் பொதுமக்கள் பலியான சம்பவம் சாய்ந்தமருதில் நிகழ்ந்துள்ளது.

இதைத் தொடர்ந்து நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களில் பத்துத் தமிழர்கள் காயமடைந்தனர்.

* திருமலைப் பகுதிகளில் தமிழர்கள் வெளியேறிய பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் படையினரின் பாதுகாப்புடன் நிகழ்கின்றன. சில பகுதிகளில் தமிழர்களது வயல்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய நீரைத் தமது வயல்களுக்குத் திருப்புவதில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

* வடக்கில் அண்மையில் நிகழ்ந்த தாக்குதல்களால் ராணுவம் பிடித்த இடங்களில் இருந்து லட்சக் கணக்கில் மக்கள் வெளியேறியுள்ளனர். யாழ்க் குடாநாட்டில் ஏறத்தாழ இரண்டரை லட்சம் அகதிகள் உள்ளதாக மதிப்பிடப்படுகிறது. யாழ்நகரின் சனத்தொகை பாதியாகக் குறைந்துள்ளதாக அறியப்படுகிறது.

* பன்னிரு கத்தோலிக்க ஆயர்கள் கடுமையான விமர்சனங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றைக் கூட்டாக விடுத்துள்ளனர். பொறுப்பற்ற விதத்தில் செய்தி வெளியிடும் பத்திரிகைகள், ஏழைகளைக் கணக்கில் எடுக்காத பொருளாதாரத் திட்டங்கள் என்பவற்றைக் கடுமையாகச் சாடியுள்ள இவ்வறிக்கையில் இனப் பிரச்சனைக்கு அரசியற் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப் பட்டுள்ளது. குறைந்த வருமானம் உடையவர்கள் தம்மால் வாழமுடியாது என்ற நிலைக்கு வந்துள்ளதை இவ்வறிக்கை கவலையோடு சுட்டிக் காட்டியுள்ளதோடு, வறியோருக்கும் பணம் படைத்தோருக்கும் இடையே நிலவும் இடைவெளி கூடுவதையும் கண்டித்துள்ளது. வடகிழக்கு யுத்தத்தையும், கருத்துச் சுதந்திரம் பறிக்கப்படுவதையும் அறிக்கை கண்டித்துள்ளது.

– மாதவன் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நானும் பாரதியும் சாப்பிட்ட இரவு

பாரதி, முட்டை உண்பதில்லை.
அதற்குப் பதிலாகத்தான், அவன்
உலகத்தை விழுங்கினான்.
நான் அவனோடு நேற்றிரவு
சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.
மிகவும் பசி என்றான்.
பாத்திரத்தைச் சேர்த்து உண்டான்.

நிலவை அவன்
உடைத்து நசித்துப் பிசைந்து உண்ட விதம்
எனக்கு வியப்பாக இருந்தது.
கடலைச் சிறுகோப்பைக்குள் நிறைத்தெடுத்தான்.
உண்டு உண்டே அவன் அதனைக் குடித்து முடிக்கையில்
சமுத்திரத்தில் நீந்திக்கொண்டிருந்த
கப்பல்களும் அவன் வயிற்றுள் சமித்தன.

பெண்ணின் வாய்க்குள்ளால் தன் குதிகாலை விட்டே
கால் கழுவுகின்றான்.
என்றெல்லாம்,
நான் சொன்னேன்.

உண்ட இடத்திலேயே வெடித்தான் பாரதி.
எனது வீடு முழுக்க
அவனது கவிதைகள்
சிதறித் தெறித்தன.
போத்தல் உடைந்து தேன் வழியும் விதம்போல
அவனில் இருந்து
கவிதைகள் ஒழுகின.
நான் கையைக் கொடுத்து நாக்கில்
தொட்டு வைத்தது கூட
மறக்கமுடியாத இனிப்பாய்
இருந்தது.
தமிழின் ஒவ்வொரு எழுத்தும் உயிர்த்து உயிர்த்து
நாங்கள் சாப்பிட்ட இடமெல்லாம்
பாரதியை வணங்க வந்தன.
ஏதோ, ஓர் எழுத்து என்னை வந்து
தொடையில் குத்தியது.
பாரதியை நான் உடைத்த ஆத்திரத்தில்,
இரட்டைக் கொம்பை நீட்டியபடி.

25.08.92

**சோலைக்கிளி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனக்கும் நல்ல பசிதான்.
நான் வானத்தைப் பிடித்து விழுங்கினேன்.
இன்று விடிய, அதன் வயிற்றுள் இருந்த சூரியன் எனது
தொண்டையில் சிக்கிக் குத்தியது.
பாரதி விழுந்து விழுந்து சிரித்தான்.
நட்சத்திரங்களை மிட்டாய்போல் உணவியபடி
பலமாய்.

பாரதியின் மீசையில் இருந்து இப்போதும் தேன் வடிவதனை
அந்த இரவு வேளையிலும் நான் கண்டேன்.
காற்று வழக்கம்போல் இப்போதும் அவனின்
குதிகாலைத் தடவி
பிடரியை முகர்ந்து
வாசத்தையும் இனிப்பையும் பெற்றுக்கொண்டுதான்
காதலர்களைத் தாலாட்டப் போகிறது.

நானும் பாரதியும் பூக்களைப்பற்றிப் பேசிக்கொண்டே சாப்பிட்டோம்.
கண்ணம்மாவைப் பற்றிய கதையும் வந்தது.
வயதுபோனாலும் கண்ணம்மா இப்போதும்
அதே இளமை, குளுகுளுப்பு என்றான்.
நம்மூர் பெண்களது நலத்தை அவன் அக்கறையாய் என்னிடத்தில்
துருவி விசாரித்தான்.
ஆண்களைத் தோளில் சுமந்தபடி இருந்தாலும் பாதகமில்லை
பார்த்துக்கொண்டிருக்கலாம்,
இங்கு நடப்பதோ
மிக்க் கொடுமை.
பெண்குடித்து அவள் வயிற்றுக்குள் இருக்கின்ற நீரில்தான்
ஆண் குளிக்கின்றான்.

# பாரதி நினைவு நிகழ்வுகள்

இலங்கை இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சு நடத்திய பாரதி நினைவார்த்த நிகழ்வுகள் ஒகஸ்ற்29, செப்டம்பர்2, 19ஆம் திகதிகளில் நிகழ்ந்தன.

முதல்தினம் செ.குணரத்தினம் தலைமையில் எஸ்.முரளீதரன் (சிகரத்துக்கு மேலே), 'சோலைக்கிளி' யு.எல்.எம்.அதீக் (நானும் பாரதியும் சாப்பிட்ட இரவு), உ.சேரன் (விட்டு விடுதலையாகி நிற்பாய் ஒரு சிட்டுக்குருவியைப் போல) ஆகியோர் கவியரங்கில் பங்கெடுத்தனர்.


இரண்டாவது தினம் அமைச்சர் தேவராஜ் தலைமையில் அமைச்சர் செல்லச்சாமி (பாரதி யார்?), முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் அஷ்ரப் (சமகால அரசியலில் பாரதியின் தாக்கம்), பா.உ. மாவை சேனாதிராஜா (பாரதியின் பாஞ்சாலி) ஆகியோர் கருத்தரங்கில் பங்கெடுத்தனர்.


இறுதி நாளன்று ஆய்வரங்கு நிகழ்ந்தது. கொழும்பு பல்கலைக்கழகச் சட்டப் பீடாதிபதி நா.செல்வக்குமரன் தலைமையில் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் செ.யோகராசா (பாரதியும் இலங்கையும்) கொட்டகலை கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் ந.ரவீந்திரன் (பாரதியார் நோக்கில் காந்தியடிகள்), சமூக உதவி வழங்கலுக்கான அவுஸ்திரேலிய நிறுவனத்தின் சாந்தி சச்சிதானந்தம் (பாரதியும் பெண் விடுதலையும்) ஆகியோர் பங்கெடுத்தனர்.


இவ்விழாவில் கவி செ.குணரத்தினத்தின் 'விடிவுகள் அடிவானில்' என்ற கவிதைத் தொகுதியும் வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





www.tamilarangam.net

# புகைப்பட உலகம்

# பெரு; சில பதிவுகள்

சேதுபதி

புதிய கலைகளில் புகைப்படக் கலை முக்கியம் வாய்ந்த ஒன்று. இது கடந்த நூற்றாண்டில்தான் தோன்றியது, எனினும் இன்று உலகரீதியாக முக்கியம் பெற்று விளங்குகிறது. இது நாளாந்த வாழ்வுடன் தொடர்புடைய ஒரு உயிருள்ள கலையாக விளங்குகிறது.

ஆனால் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இதன் வளர்ச்சி மிகக் கட்டுப்பட்டதாகவே உள்ளது. புகைப்படக் கலையில் ஈடுபாடு கொண்டுள்ளவர்களும், அதை வளர்ப்பவர்களும் மிக அரிதாகவே உள்ளனர். இந்த வகையில் தற்போதைய தலைமுறையில் குறிப்பிடத் தக்கவராகத் தற்போது நோர்வேயில் வாழும் தமயந்தி திகழ்கிறார்.

கலை, இலக்கியங்கள் அந்தந்தக் காலத்தின் பிரதிபலிப்புகளாக இருப்பன. இவை பின்னாளில் அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையை அறியப் பெரிதும் உதவுவன. இந்த வகையில் புகைப்படக் கலை மிக முக்கியம் பெறுகிறது. குறிப்பாக இன்று ஈழமக்களைச் சூழ்ந்துள்ள போர்ச் சூழல் மிகக் கொடியது. இந்தத் துயர்மிகு வரலாற்றை எதிர்காலத்தில் எமது அடுத்தடுத்த சந்ததியினர் அறிந்துகொள்ள கலை இலக்கியங்கள் - குறிப்பாக புகைப்படங்கள் - நல்ல பதிவுகளாக அமையும். இதைத் தமிழ் மக்கள் அனைவரும் உணரவேண்டும்.

இங்குள்ள படங்கள் பிரான்சில் நிகழ்ந்த 22வது உலகப் புகைப்படக் கண்டாட்சியில் பார்வைக்கு வைக்கப் பட்டவை. பெரு நாட்டுப் புகைப்படக் கலைஞர் மாட்டின் சம்பியின் (Martin Chambi, 1891 –1975)பதிவுகள் இவை. 1930களில் பெருவில் நிலவிய பெரும் வகுப்பு வேறுபாட்டை, அக்கால வாழ்க்கை முறையைத் தனது கருவிக்குள் சிறைப்பிடித்த அவரது படங்களில் சில இவை.

புகைப்படத்தில் ஒளியையும் நிழலையும் பாவிப்பது கலைஞனின் திறமையை வெளிக்கொணரும். ஏறத்தாழ அறுபது வருடங்கள் முன்பே தனது ஆற்றலைக் காட்டியுள்ளார் சம்பி.





தன்னைத்தானே எடுத்த படம்

www.tamilarangam.net

# சுவடுகள்

அண்மைக் காலங்களாக நோர்வேயில் மக்கள் தொடர்புச் சாதனங்களில் இலங்கைத் தமிழர்கள் பற்றிய பல தகவல்களும் செய்திகளும் வெளிவந்துள்ளன. பத்திரிகைகளில் வெளியான செய்திகள் தவிர, அண்மையில் பி.பி.சி. நிறுவனத்திடம் இரவல் வாங்கிய தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றும் நோர்வே தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

வழமை போலவே இந்த நிகழ்வுகள் பற்றிப் பல விவாதங்கள் தமிழ் மக்கள் மத்தியில் வந்துள்ளன. இந்தச் செய்திகளும், அவை வெளிவந்த விதமும் தமிழ் மக்கள் பற்றிய எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும் என்பது பரவலான அபிப்பிராயமாகக் கூறப்படுகிறது. இவற்றில் சில செய்திகள் வெளிவந்ததே தமிழ் மக்களுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதுடன் வேறு சிலவற்றில் உண்மைத் தன்மையும், அச்செய்திகள் வெளியிடப்பட்டதன் நோக்கமும் கேள்விக்கிடமாக உள்ளன.

இவ்வாறான செய்திகள் ஏற்படுத்தும் தாக்கங்கள் அண்மைக் காலத்தில் அதிகரிப்பதுடன், இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு எதிரான கருத்துகளும் நடவடிக்கைகளும் ஐரோப்பாவில் அதிகரிக்கும் இந்தக் காலகட்டத்தில் எமது கவனம் இதுபற்றித் திருப்பப்பட வேண்டியதாகிறது. தமிழர் மீதான அனுதாபம் நோர்வேயிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் 1983 கலவரத்தையடுத்து அதிகரித்து, பின் காலத்துக்குக் காலம் மாறுபாடடைந்து தற்போது மிகக் குறைந்துள்ளதுடன், தமிழருக்கு எதிரான அபிப்பிராயமாகவும் வளர்கிறது.

எமது விடுதலைப் போராட்டத்தில் இருந்த, இருக்கும் பிழையான பல அம்சங்களே எமது போராட்டத்திற்கு சர்வதேச ஆதரவு கிடையாமற் போனமைக்குக் காரணம் என்பதை உணர்வது மிக இலகுவானது. இதனால் தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளுக்கான நியாயத்தைக்கூட சர்வதேச அரங்கில்

www.tamilarangam.net

சொல்லமுடியாத நிலையே நிலவுகிறது. தொடர்ச்சியாக தொடர்புச் சாதனங்களில் வெளிவரும் தவறான தகவல்களை மறுக்கவோ, எமது போராட்டத்தின் நியாயத்தை சர்வதேச அரங்கில் எடுத்துக்கூறவோ தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அமைப்பு நோர்வேயில் இல்லை. இதனால் வரும் பாதிப்புகள் அனைத்துத் தமிழருக்கும் பொதுவானவை.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புகள் சில இருந்தாலும் இவை இணைந்து செயற்படாமை ஒரு பெரிய பலவீனமாகும். இணைந்த செயற்பாட்டுக்கு எடுக்கப்பட்ட சில முயற்சிகளும் வெற்றிதராது போய்விட்டன. இங்குள்ள தமிழர் பிரச்சனைகள் தொடர்பாக ஒரு உறுதியான குரல் கொடுக்கவல்ல அமைப்பு இதுவரை உருவாகவில்லையென்றே கூறவேண்டும். அவ்வாறான அமைப்பில் நோர்வே நாட்டவரையும் - முக்கியமாக அரசியற்துறை சார்ந்தவர்களை - இணைத்திருப்பது அவசியமாகும். நோர்வே முழுவதும் உள்ள தமிழர்களின் குரலாக இருக்கக்கூடிய ஒரு அமைப்பு உடனடியாகத் தேவைப்படுகிறது. இங்கு வாழும் ஏனைய வெளிநாட்டுச் சமூகத்தினர் இவ்வாறு அமைப்புகளை உருவாக்கித் தமக்கு இங்கு ஏற்படும் பிரச்சனைகளை இலகுவான முறையில் தீர்க்கின்றனர். அந்தச் சமூகத்தினர் பற்றிய முடிவுகளை அரசு எடுக்கும்போதும் இவ்வாறான அமைப்புகளைக் கலந்து பேசுகின்றது, அல்லது அவர்களது கருத்தையும் செவிமடுக்கிறது. ஆனால் நோர்வேயில் பெரியளவிலான தொகையில் வாழும் தமிழர்களது குரல் என்று சொல்ல ஓரமைப்பும் இல்லை. இது தமிழ் மக்களாகிய எமது தவறல்லவா?

தமிழ் மக்களை மாத்திரமன்றி வெளிநாட்டவர் யாவரையும் பாதிக்கும் நிறவெறி பற்றியும் நாம் கவலைப்படுவது மிகக்குறைவு. பொதுவான விடயங்களில் பங்கெடுப்பதும் எம்மவரிடையே குறைவாக உள்ள பழக்கம். இவற்றைவிட்டு நீங்கி ஒரு பொது அமைப்பை உருவாக்கி இங்கு வாழும் காலத்தில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்க்க முயலவேண்டும். அவ்வாறு ஒரு பொது அமைப்பைக் கட்டுவதற்கு நாம் எமது தனிப்பட்ட நலன்களைக் கைவிட்டுவிட்டு சில அடிப்படை உடன்பாடுகளுடன் இணைதல்வேண்டும். நாம் இவற்றைச் செய்யாவிடில், எம்மைப் பாதிக்கும் பிரச்சனைகள் தீர்க்கப்படாமலே தொடர்வதை யாரும் தடுக்கமுடியாது.

சுவடுகள் 38
ஆவணி - புரட்டாதி 1992

'Suvadukal' - Herslebsgate 43, 0578 Oslo 5, Norway





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

*அப்படிப் பாக்கும் போது — உலக அளவில் நமது போட்டோ கிராபி, நமது கேமரா உபகர ணங்கள் ரொம்ப பழசுன்னு சொல்லலாமா?*

நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். நம்மகிட்டே ஒரு Panavision கேமரா இல்லாமெ போகலாம். ஆனால் Arri-flex கேமரா ரொம்ப மட்டமான ஒண்ணுன்னு நான் ஒத்துக்கத் தயாரா இல்லே. பத்திலிருந்து இருபது சதவீதம் தரம் குறையலாம். It is not the machine, but the man behind it.

**நம்ப நாட்டிலே டைரக்டர் சொல் லும் frame-ஐத்தான் எடிட்டர் வெட்டி ஒட்டுகிறார். பெரும் பாலும் படத்தின் phase, rhythm இவற்றின் முழுப் பொறுப்பும் இயக்குநருடையதுதான். அத னாலேதான் எடிட்டிங் portfolio -வையும் நீங்க எடுத்துக் கிட்டீங்களா?**

No. நான் Cinematography மாணவன் institute-லே. ஆனால் அங்கே டைரக்ஷன் கிளாசிலும், எடிட்டிங் கிளாசிலும்தான் அதிக நேரமிருப் பேன். Professorsகிட்டே அதனாலே ஏகப்பட்ட சண்டை. முறையா அங்கே அதையெல்லாம் கத்துக்கிட்ட வன். என் ஆரம்ப கட்டத்திலே ஒரு சீனியர் எடிட்டர் என்னோட இருந்

# பாலு மகேந்திராவின் பேட்டி

பாலு மகேந்திராவின் பேட்டி

அது சிறந்த பிராந்தியப் படம். 'சந்தியாராக'மும் அப்படியே.

**மன்னிக்கணும். ஒரு சின்ன digression. சிறந்த படத்திற்கு ஒரு பரிசு. மற்றொரு படத்தின் இயக்குநருக்கு சிறந்த இயக்குநர் பரிசு என்று தருகிறார்கள். சிறந்த படத்தைத் தருபவர் தானே சிறந்த டைரக்டர்?**

Theoretically yes. நீங்க சொல்றதை ஒத் துக்கறேன். logical-ஆக ஒப்புக் கொள்ள லாம். ஆனால், இங்கேயும் வெளி நாட்டிலேயும், ஆஸ்கார் தேர்விலும் கூட, பெரும்பாலும் சிறந்த படம், சிறந்த டைரக்டர் பரிசுகள் ஒரே படத் திற்கே கிடைப்பது வழக்கம். ஆனால், சில சமயங்களில் அது மாறிப் போவதுண்டு. ஒரு படம்னா, அதன் தீம், சொல்லியிருக்கிற விதம், நடிப்பு, மற்ற தொழில்நுட்பங்கள் - இதன் எல்லாவற்றின் சேர்க்கையும் அழகாக இணைந்து, ஒரு கலைநயம் மொத்த மான அந்தப் படைப்பில் இருக்கும் பட்சத்தில் அதை 'சிறந்த படம்' என் கிறோம். சிறந்த டைரக்டர்னு வர்றப் போ, இதிலே சில விஷயங்கள்





www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"'மூன்றாம் பிறை'யில் கமல்ஹாசன் சிறந்த நடிகர் பரிசு பெற்றால், அது என்னுடைய படத்திலே என்கிற முறையிலே என்னையும் சேரும்."



தார். அவர் இருந்தபோது நான்தான் ஒவ்வொரு frame-ஐயும் நிர்ணயிப்பேன். இந்த sound இங்கே ஆரம்பிக்கிறது, இங்கே முடியுதுங்கறதையும் நான்தான் முடிவு பண்ணுவேன். அதாவது, creative part of editing, நூறு சதவீதம் என்னுடைய பங்குதான் இருக்கும். அவர் ரிடயர்டாகி சென்றபின் நானே எடிட்டிங் பண்ண ஆரம்பிச்சேன்.

**உங்க படங்களிலே எல்லா மேஜர் பொறுப்புகளையும் — கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன், எடிட்டிங், ஒளிப்பதிவு எல்லாவற்றுக்கும் நீங்களே பொறுப்பேற்கிறீங்க. ஆனா, photography-தான் மேலோங்கி நிக்குது. அதற்குத்தான் உங்களுக்கு award கூட கெடைச்சிருக்கு... இதை மறுக்க நினைக்கறீங்களா?**

ஓரளவு மறுக்கிறேன். ஓரளவு ஒத்துக்கறேன். ஒரு சின்ன திருத்தம். 'வீடு' பெற்ற பரிசு ஒளிப்பதிவுக்கு அல்ல, to correct you. குறைவா இருந்தாலும், 'டைரக்டர்' என்கிற முறையிலே, தெளிவாகவும் ஆழமாகவும் சொல்லியிருக்காருன்னா அந்த கோணத்திலேயிருந்து 'Best director'-ன்னு தேர்ந்தெடுக்கிறாங்க. அதிலே ஏதோ ஒரு நியாயம் இருப்பதாகவே படுகிறது.

முன் கேள்வியை எடுத்துக்கிட்டா, 'வீடு' சிறந்த படமா தேர்ந்தெடுத்தா டைரக்டர்ங்கற முறையில் அது என்னை சேரும். 'மூன்றாம் பிறை'யில் கமல்ஹாசன் சிறந்த நடிகர் பரிசு பெற்றால், அது என்னுடைய படத்திலே என்கிற முறையிலே என்னையும் சேரும். I was responsible partly or mostly. கமலிடமுள்ள நடிப்பை வெளிப்படுத்தும் வண்ணம், கேரக்டரை செப்பனிட்டு, தேவைக்கேற்ப guide பண்ணி, அதை உணர்ச்சி பூர்வமாக வரையறுத்தது நான். அர்ச்சனாவின் பாத்திரப் படைப்புக்கு நான் பொறுப்பாளி. அவள் இப்படி நடிக்க வேண்டுமென கணித்தது நான். எனவே, என் படத்திற்கு கெடைக்கிற எந்த award-உம் நேரடியா எனக்கு கெடைக்கிற award ஆகும்.

**மகேந்திரன், பாக்யராஜ் போன்றவர்கள் basically writers. அவங்க கூட அவர்களை மிகவும் கவர்ந்த கதைகளை வெளியே இருந்து வாங்கி, படமாக்கியிருக்கிறார்கள். நீங்க அப்படி வெளியாரை அணுகுவதில்லை.**

வாங்கியிருக்கேன். 'மூடுபனி' ராஜேந்திரகுமார் எழுதின ஒரு நாவல் தான். அதோடு, ஜான் பவுலேஸ் எழுதின 'Collector' என்கிற நாவலையும் சேர்த்து இருக்கிறேன். வாங்கக் கூடாதென்கிற பிடிவாதமில்லை.

**உங்களுடைய best films, நல்ல படங்கள் மற்ற மொழிகளில் தான் என்பது தமிழன் வருத்தப் பட வேண்டிய ஒன்று.**

"என்னதான் என்னை விபசாரியா ஆக்கிக்கிட்டாலும், ஒரு நாகரீகமான விபசாரியா இருந்துக்கிட்டிருக்கேன்."

"ரஜனியை நான் எதிர்பார்த்த மாதிரி பயன்படுத்த முடியாமல் போனது என் Career-லே ஒரு விபத்துதான்."





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"என் ஆரம்ப கட்டத்திலே ஒரு சீனியர் எடிட்டர் என்னோட இருந்தார். அவர் இருந்தபோதும் நான்தான் ஒவ்வொரு Frame-ஐயும் நிர்ணயிப்பேன்!"

"ரஜனியும் ஒத்துக்கிட்டு, ரஜனியின் தயாரிப்பாளரும் ஒத்துகிட்டா, ரஜனியை வெச்சு அற்புதமான ஒரு படம் கொடுக்க என்னால் முடியும்..."



நிச்சயமா நானும் வருத்தப்பட்டேன். 'வீடு', 'சந்தியாராகம்' தமிழிலே 'மாட்டிக்கிட்டதிலே' எனக்கு ஏகப்பட்ட சந்தோஷமா இருக்கு.

***கமல் — ரஜனியை வெச்சு படமெடுத்திருக்கிற நீங்க, கமலைப் பயன்படுத்தின அளவுக்கு, அல்லது பயனடைஞ்ச அளவுக்கு ரஜனியைப் பயன் படுத்தவில்லை.***

இந்த குற்றச்சாட்டை நான் ஒத்துக்கறேன். அந்த நிகழ்வுக்கு நான் மட்டும் முழுப் பொறுப்பாளி அல்ல. நான் ரஜனிக்காக எழுதின Script வேறே. அதுதான் 'யாத்ரா'. ஆனா தயாரிப்பாளருங்க ஒத்துக்கலே. கடைசி நிமிடத்திலே கதையை மாத்த வேண்டி வந்தது. ரஜனியை நான் எதிர்பார்த்த மாதிரி பயன்படுத்த முடியாமெப் போனது என் Career-லே ஒரு விபத்துதான். I regret very much.

***தமிழ்ப்பட இயக்குநராக இருக்கிற நீங்க மலையாளம், வங்காளம் என மாற்று மொழிகளிலும் இயக்குநராக இருந்தால் இன்னும் அதிகமா — noticeable-ஆக பேசப்படுபவராக ஆயிருக்கலாம்னு எப்பவாவது நெனச்சுப் பார்த்ததுண்டா?***

அந்த மாதிரி நான் வருத்தப்பட்டதுண்டு. ஆனா நீங்க சொன்ன காரணத்துக்காக அல்ல. இந்தப் படத்தை மலையாளத்திலே பண்ணியிருந்தா, இதை அங்கே நல்லவிதமா ஏத்துக்கிட்டிருப்பாங்களே - அப்படின்னு நான் வருத்தப்பட்டிருக்கேன். தமிழ்லே அதுக்கு கெடைச்ச விமர்சனங்களை விட, மலையாளத்திலே அதுக்கு வரக்கூடிய விமர்சனங்கள் இன்னும் ஆழமாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருந்திருக்கும் - அப்படின்னு நான் வருத்தப்பட்டிருக்கேன். ஒரு படத்திலே நான் வெச்ச நுணுக்கங்

தாலும் — இருங்க இப்படிச் சொல்கிறேன். என்னுடைய கதாபாத்திரத்திற்கேற்ற நடிகர்/நடிகை ஸ்டாரா இருந்தாலும், இல்லாவிட்டாலும் எனக்கு ஒகேதான். ஒரு தயாரிப்பாளர் தன் படத்தின் ஹீரோ, ஹீரோயின் ஸ்டாரா இருந்தா, தனக்கு அனுகூலங்கள் இருக்குன்னு நெனைச்சா, அதுக்கு நான் குறுக்கே நிற்கறதில்லே — ஒரு ஸ்டாரோட வேலை செய்யறதிலே எந்தவிதமான கூச்சமோ தயக்கமோ இருந்ததில்லை, as long as I am convinced that the star is going to reach my expectations. நிச்சயமா கமலும், ஸ்ரீதேவியும், ரஜனியும், மாதவியும் நடிக்கறப்போ செலவு அதிகமாகத்தான் ஆகும். அதேபோல் விற்பனை விலையும்.

***அப்படி நீங்க நினைச்சீங்கன்னா — நீங்க Commercial படங்கள் தான் பண்ண முடியும் — ஒரு நல்ல நிறைவான படத்தைத் தந்த பெருமையைப் பெற முடியாது.***

உண்மை. completely I agree. இந்த நட்சத்திரங்களையும், அவங்களுடைய சகல சௌகரியங்களையும், வியாபார சுகங்களையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ரஜனியினுடைய ஒரு earthy charm, மண்வாசனை கலந்த தோற்றம் — இன்னும் முழுமையாக ஒரு படத்திலேயும் வரலே. துரதிருஷ்ட வசமாக, தான் வரைந்த வட்டத்திற்குள்ளேயே அவர் மாட்டிக்கிட்டார். அதிலேருந்து இனிமே வெளியே வர்றது கொஞ்சம் கஷ்டம்.

**இப்போ— ரஜனியுடன் பணிபுரிய இன்னொரு வாய்ப்பு கிடைச்சா, அதை உங்க வழிக்கு ரஜனியைக் கொண்டுவர பயன்படுத்துவீங்களா, ரஜனி பாணியிலே நீங்களும் போக முயல்வீர்களா?**

ரஜனியும் ஒத்துக்கிட்டு, ரஜனியின் தயாரிப்பாளரும் ஒத்துக்கிட்டா, ரஜனியை வெச்சு அற்புதமான ஒரு படம் கொடுக்க என்னால் முடியும். I can and I want.

**You mean, Commercial?**

Not Commercial. ரஜனியை வைத்து art film பண்றதுன்னா அது வேறே. level discussion. அந்த மாதிரி படத்திலே நடிக்க ஆர்வமிருந்தா அவரை சந்தோஷமா என்னாலே உபயோகிக்க முடியும். அந்த எல்லைக்கு போகாமெ, வியாபார ரீதியில், ரஜனியை வித்தியாசமாக, இதுவரை அவர் பண்ணாத, அவருடைய Style-களோ, அவருடைய வழக்கமான பாணியோ இல்லாத ஒரு படத்தை பண்ணனும்னா அதை ஒரு Challenge-ஆ எடுத்துக்குவேன்.

களை - அடடா இதை தமிழில் பண்ணி தொலைச்சிட்டோமே, பெங்காலியிலே பண்ணியிருந்தா இதை புரிஞ்சிருப்பாங்களே - அப்படின்னு நான் வருத்தப்பட்டிருக்கேன். என்னுடைய ஆசை, வெறின்னு கூட சொல்லலாம். தமிழ்லே படங்கள் வரணும் - அகில இந்திய — அகில உலக ரீதியிலே பேசப்படற படங்கள் வரணும். Why not?

**உங்களுடைய வெற்றிப் படங்களில் இளையராஜா, நட்சத்திர நடிகர்கள், நடிகைகள், ஊட்டி மாதிரி costly locations, பலதரப்பட்ட உயரத் தேவைகள் எல்லாம் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள். அதாவது ஒரு Commercial இயக்குநரின் எல்லா எதிர்பார்ப்புகளும். அப்படியிருக்க உங்கள் படங்கள் பணத் திருப்திதான் தரவேண்டுமே தவிர, மனத் திருப்தி தந்தால் போதாது, இல்லையா?**

நான் அதை ஒப்புக் கொள்கிறேன்... சமீபகாலமாக.

'கோகிலா' அப்படியல்ல.

'கோகிலா' மட்டுமில்லே. மூன்றாம் பிறையும் அப்படித்தான். கமல்-ஸ்ரீதேவி நட்சத்திரங்களாக இருந்

மட்டுமே மனசிலே வெச்சு வர்ற ஒரு தயாரிப்பாளரிடம் என்னுடைய படைப்புத் தன்மையின் வெளிப்பாடு (expression) குறைகிறது. அது வேணும், இந்த dress இன்னும் கொஞ்சம் பணக்காரத் தனமாக இருக்கணும். இங்கே ஒரு டான்ஸ் வேணும் — இப்படியெல்லாம் போட்டு குழப்ப வேண்டியிருக்கு. It is inevitable. சுருக்கமா சொன்னா, நான் ரொம்ப பசியோட இருக்கேன். ரொம்ப... ரொம்ப பசியோட. என்னைக்கும் அந்த பசி அடங்காது — அடங்கக் கூடாது. அது என் பிரார்த்தனை. சுத்தமாக இனி சாப்பாடு இல்லேங்கிற நிலையை விட — ஏதோ நாலு ரொட்டித் துண்டு கெடைக்குது. அதையாவது சாப்பிடுவோம். என்னைக்காவது ஒரு நாளைக்கு சுடச் சுட சோறு, சுவையான கறிகளோட சாப்பாடு கிடைக்கும். அதுக்கு பொறுமையா காத்திருப்போம். இன்னைய பட்டினிக்கு நாலு

ரொட்டித் துண்டு இருக்கே — அது ஊசி போகாத வரை — என் ஆரோக்கியத்தை பாதிக்காத வரை ஓகே — இப்ப திருப்தி அடையறேன்.

(தொடரும்)



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

ஒகஸ்ற் 3

* மட்டக்களப்பில் நிகழ்ந்த மோதல் ஒன்றில் 12 புலிகளும், 14 படையினரும் பலியாகினர்.

ஒகஸ்ற் 4

* பதினைந்து படையினரும், பதினைந்து புலிகளும் வவுனியா பிரப்பமடு மோதலில் பலியாகினர் என அரச செய்திகள் கூறுகின்றன.

* கொழும்பில் பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, தெஹிவளை - கல்கிசை, வெள்ளவத்தைப் பகுதிகளில் 200 தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைதாகியுள்ளனர். இவர்களில் யுவதிகளும் அடங்குவர்.

ஒகஸ்ற் 6

* தமிழகத்தில் இருந்து 132 தமிழகதிகள் விமானமூலம்

ஒகஸ்ற் 9

* கிழக்கில் மயிலந்தனைக் கிராமத்தில் 35தமிழ் மக்கள் ஆயுதம் தாங்கிய நபர்களால் வெட்டிக் கொல்லப் பட்டனர்.

* இனப்பிரச்சனைக்கு உடனடியாக அமைதியான முறையில் தீர்வு காணப்பட வேண்டும் என பிரேமதாசா கேகாலையில் பேசியுள்ளார். யுத்தம் இலங்கைக்கு ஒரு வருடத்தில் இரண்டாயிரம் கோடி செலவினத்தை ஏற்படுத்துகிது எனவும் அவர் கூறினார்.

ஒகஸ்ற் 10

* கொழும்பில் ஒரு தமிழ் வர்த்தகர்மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டு அவர் தீயில் கருகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இரவு நிகழ்ந்த பெற்றோல் குண்டுவீச்சில் இன்னொரு கடை எரிந்துள்ளது.

* கொப்பேகடுவவின் மரணச் சடங்குகளில் கலந்துகொண்ட பிரதி அமைச்சர் ஒருவர் மீதும் ஏனைய பல அரச அதிகாரிகள் மீதும் கோபம் கொண்ட மக்கள் தாக்கியதில் 13பேர் காயமடைந்தனர். ஏறத்தாழ 25000 பேரைக் கலைக்கப் பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர்.

ஒகஸ்ற் 12

* கண்ணிவெடியில் கொல்லப்பட்ட இராணுவ அதிகாரிகளின் இறுதிக்கிரியைகளில் மீண்டும் பல தாக்குதல்கள் இடம்பெற்றன.

ஒகஸ்ற் 22

* 'காணாமற் போனோர்' பற்றி ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது மூன்று இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது. அவ்வறிக்கையில் உள்ள ஒரு கண்டுபிடிப்பில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் மாத்தறைப் பொலிசாரின் காவலில் இருந்தபோது காணாமற் போனதாகவும், அதுபற்றிப் பொலிசார் போதிய தகவல் தரவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

ஒகஸ்ற் 23

* 'தி ஐலண்ட்' பத்திரிகை ஆசிரியரும் இரு செய்தியாளர்களும் இரகசியப் பொலிசாரால் விசாரணை செய்யப் பட்டுள்ளனர். இனந்தெரியாத சிலரால் காட்டூன் ஓவியர் யூனுஸ் (அத்த) கத்திக்குத்துக்கு ஆளானதைத் தொடர்ந்து, யூனுஸின் கடிதத்தைப் பிரசுரித்தனர் என்ற குற்றத்திலேயே இவர்கள் விசாரணை செய்யப்பட்டனர்.

ஒகஸ்ற் 24

* புலிகளின் தாக்குதல் ஒன்றில் ஏழு படையினர் கொல்லப் பட்டதாக அரசு அறிவித்துள்ளது. இச்சம்பவத்தில் நான்கு புலிகள் கொல்லப் பட்டனர் எனவும் அரசு கூறியுள்ளது.

* படையினரின் ஹெலியை நோக்கி 'கெற்றப்போல்ற்'றினால் தாக்கிய 16வயதுச் சிறுவன்மீது துப்பாக்கிச் சூடு நிகழ்த்தப் பட்டுள்ளது. இச்சம்பவம் கதிரவெளியில் (மட்டக்களப்பு) நிகழ்ந்தது.

www.tamilarangam.net

திருகோணமலை கொண்டுவரப்பட்டனர். இவர்கள் தமது சுயவிருப்பிலேயே இலங்கை திரும்புவதாக அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. தற்போது இந்தியாவில் ஏறத்தாழ 80,000 இலங்கைத் தமிழர்கள் தங்கியிருப்பதாக மதிப்பிடப் படுகிறது.

* 'ஏசியாவீக்' சஞ்சிகையின் கொழும்பு நிருபர் ஜோன் கொல்மி, ஏசியாவீக்கில் வெளியாக இருந்த பிரேமதாசாவின் படம் ஒன்று பற்றிப் பொலிசாரால் விசாரணை செய்யப் பட்டுள்ளார். இவர் அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஒகஸ்ற் 7

* அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றைப் படம்பிடித்துக் கொண்டிருந்த உள்நாட்டு வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களின் புகைப்படக் கலைஞர்கள் குண்டர்களால் தாக்கப்பட்டனர். தாக்கியோரைத் தம்மால் அடையாளம் காட்ட முடியும் எனத் தாக்கப்பட்டோர் கூறியுள்ளனர்,

ஒகஸ்ற் 8

* வடக்கில் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, வடபிராந்திய இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்ன, (வட) கடற்படைத் தளபதி மோஹான் ஜெயமஹா உட்படப் பத்து உயர் அதிகாரிகள் கண்ணிவெடி ஒன்றில் கொல்லப்பட்டனர்.

ஒகஸ்ற் 13

* இராணுவ உயரதிகாரிகளது இறுதிச்சடங்குகளில் நிகழ்ந்த வன்முறைகளுக்கு எதிர்க்கட்சி ஒன்றே காரணம் என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்ஹ கூறியுள்ளார். இக்குற்றச்சாட்டை அனுரா பண்டாரநாயகா (சு.க) மறுத்துள்ளார்.

ஒகஸ்ற் 14

* இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் சம்பளப் பணம் 50லட்சம் துப்பாக்கி முனையில் ரத்மலானையில் கொள்ளையடிக்கப் பட்டது. இந்தச் சம்பவத்தில் நிகழ்ந்த துப்பாக்கி மோதலில் மூவர் பலியானர். ஐவர் காயமடைந்தனர்.

ஒகஸ்ற் 15

* அம்பாறை மாவட்டத்திலுள்ள பக்கியல என்ற இடத்தில் ரோந்து சென்ற பொலிசார்மீது புலிகள் தாக்கியதில் ஏழு பொலிசார் பலியாகினர்

ஒகஸ்ற் 17

* மட்டக்களப்பு குருக்கள் மடம் பகுதியில் கிளேமோர் கண்ணிவெடிக்கு இரு படையினர் பலியாகினர்.

ஒகஸ்ற் 18

* வடக்கில் அரச படைகளின் ஷெல்களால் இரு குழந்தைகள் பலியாகியுள்ளனர். இதற்கு முந்திய வாரம் இரு இளைஞர்கள் இவ்வாறு பலியாகினர். இந்தச் சம்பவங்கள் பற்றி எதுவும் தெரியாது என கூட்டுப்படை அதிகாரி ஒருவர் கொழும்பில் கூறியுள்ளார்.

ஒகஸ்ற் 26

* நான்கு இலங்கைத் தமிழர்கள் உட்பட 32 பேருக்கெதிராக தமிழ்நாட்டில் வன்முறையைத் தூண்டிவிட முயற்சி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப் பட்டுள்ளது.

ஒகஸ்ற் 27

* 150 இலங்கைத் தமிழர்கள் சுவிஸில் இருந்து திருப்பி அனுப்பப் படுவது பற்றி, ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனுடன் சுவிஸ் தூதுக்குழு ஒன்று பேச்சு நடாத்தியுள்ளது. இவர்களது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தருமாறு இலங்கை அரசிடம் சுவிஸ் கேட்டுள்ளது.

* இராணுவ வலயத்தினுள் புகமுயன்ற 20 புலிகள் கொல்லப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது. ஒன்பது பேரே பலியானதாக புலிகள் கூறியுள்ளனர்.

ஒகஸ்ற் 29

* கடற்புலிகளால் மண்டைதீவில் இருந்து கடற்படைப் படகு ஒன்று கைப்பற்றப் பட்டது. இப்படகு 42அடி நீளமும், 12 அடி அகலமும் உடையது.

* ஆயுதந் தாங்கியோரால் லவித் அத்துலத் முதலி தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று தெஹிவளையில் நிகழ்ந்தது. ஆறுபேர் கொண்ட தாக்குதற் குழு தப்பி ஓடிவிட்டது.

ஒகஸ்ற் 30

* ஒரு படைவீரர் உட்பட எட்டுப்பேர் பஸ்ஸில் வைக்கப்பட்ட குண்டு ஒன்று வெடித்துக் கொல்லப்பட்ட சம்பவம் திருமலையில் நிகழ்ந்துள்ளது.

* ஐ.நா.வின் செயலாளர் நாயகமாக 1953முதல் 1961வரை பணிபுரிந்த டாக் ஹம்மர்ஷொல்ட் ஆபிரிக்காவில் பயணம் செய்த விமானம் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. கடங்கா அதிபரைச் சந்திக்க அவர் பயணம் செய்த விமானம் விழுந்து நொருங்கியதில் அவர் கொல்லப்பட்டதாக முன்பு செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால், தற்போது முன்னாள் ஐ.நா. பதவி வகித்த இருவரை ஆதாரம் காட்டி வெளியான செய்தியில், அவ்விமானம் கூலிப்படையினரால் சுட்டு வீழ்த்தப் பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

* ஹொலந்தின் றொட்டடாம் நகரப் பொலிசார் தீவிரமாக ஹெரோயின் பாவிப்போரின் பாவனைக்கு இலவசமாக ஹெரோயின் வழங்கத் தீர்மானித்துள்ளனர். இவ்வாறு வழங்கப்படுவது நகரில் குற்றச்செயல்களைக் குறைக்கும் எனப் பொலிசார் கருதுகின்றனர். தமது பாவனைக்கான தேவை பற்றிச் சரியான தகவல் தராதோர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

* நீண்டகால இடைவெளிக்குப் பின் தென்னாபிரிக்க அரசும் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளன. மீண்டும் பேச்சுகளை ஆரம்பிக்க முன்நிபந்தனையாகப் பல அரசியற் கைதிகள் விடுதலை செய்யப் பட்டுள்ளனர். இதேவேளை, ஏற்கனவே அரசுடன் பேச்சுகளில் ஈடுபட்டிருந்த இன்காத்தா அமைப்பு தனது மக்கள் பாரம்பரியமாகக் காவும் ஆயுதங்களைக் களைய உத்தரவு பிறப்பிக்கப் பட்டதை எதிர்த்துப் பேச்சுகளில் இருந்து விலகியுள்ளது.

* ஆபிரிக்க நாடான ஸய்ர் (Zaire) அதிபர் மொபூடு சேசே சேகோ, தனது சிகையலங்காரத்திற்கு அமெரிக்காவில் இருந்து ஒருவரை ஒவ்வொரு முறையும் வரவழைப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளது. கடந்த எட்டு வருடங்களாக இருவாரத்திற்கு ஒருமுறை அங்கு விமானத்தின் முதல்வகுப்பில் பயணம் செய்யும் இந்த நபர் அங்கு ஆடம்பர ஹோட்டலில் தங்குவதாகவும் அவரது ஒரு வருகைக்கான செலவு ஏறத்தாழ 5000 டொலர்கள் எனவும் அமெரிக்கப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

* ஜப்பானிய மன்னர் அகிஹிட்டோ உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சீனா செல்ல உள்ளார். இவ்விஜயத்தின்போது இரண்டாம் உலக யுத்த காலத்தில் சீனாவை ஆக்கிரமித்திருந்த ஜப்பான் அங்கு நடந்துகொண்ட விதத்திற்காக மன்னிப்புக் கேட்கவே மன்னர் அங்கு செல்கிறார் எனக் கருதும் வலதுசாரித் தீவிரவாதிகள் அவரது பயணத்தை எதிர்க்கின்றனர்.

* அணு உற்பத்திக் கழிவுகளை நாட்டிற்குள் அனுமதிப்பதில்லை என சுவீடன் தீர்மானிக்க உள்ளது. ஏற்கனவே, வெளிநாடுகளில் இருந்து இவ்வாறான கழிவுகளைக் கொண்டு வருவதை பிரான்ஸ் தடை செய்துள்ளது.

* குர்திஷ் கட்டுப்பாட்டில் உள்ள வட ஈராக்கில் நிகழ்ந்த கூட்டம் ஒன்றில், ஈராக்கின் சதாம் எதிர்ப்பு அமைப்புகள் ஒன்றாக இணைந்து செயல்படுவது பற்றி ஆராய்ந்துள்ளன. தமது பிரதேச, அரசியல், இன வேறுபாடுகளை மறந்து சதாம் ஹுசைனை வீழ்த்தத் தாம் ஒன்றுபடுவதாக இவை அறிவித்துள்ளன.

* இத்தாலிய அமெரிக்கக் கூட்டு நடவடிக்கை ஒன்றில் 200க்கு மேற்பட்ட போதைப் பொருட் கடத்தற்காரர் கைதாகினர். கொலம்பிய கொக்கேய்ன் அதிபர்கள் மற்றும் இத்தாலிய மாபியா முக்கியஸ்தர்களின் நெருக்கமானவர்கள் இதில் அடங்குவர்.



www.tamilarangam.net

www.tamilarangam.net

ஓர் அமெரிக்க மடல் விக்கி எழுதுவது

# சூடுபிடித்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

உலகின் மூத்த ஜனநாயக நாடான அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் வரும் நவம்பர் மூன்றாம் திகதி நிகழவுள்ளது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பொதுவுடைமை அரசுகளின் வீழ்ச்சிக்குப் பின் - வோர்சோ ஒப்பந்தத்தின் மரணத்தின் பின் - உலகின் இரண்டாவது வல்லரசான சோவியத் குடியரசுகள் தனித்தனியாக உடைந்து போனபின் - உலகின் தனி வல்லரசாக நிற்கும் அமெரிக்கா சந்திக்கும் முதலாவது தேர்தல் இது. இடையில் முளைத்த சுவரை உடைத்துக்கொண்டு ஒரே நாடாக இணைந்துகொண்ட ஜேர்மனி, பலஸ்தீன மக்களின் உரிமைகளைக் கௌரவிக்கப் போவதாக உறுதியளித்த யிற்ஷாக் றபினை நாட்டின் பிரதமராக்கிய இஸ்ரேல், அரசாங்கத்தில் கறுப்பு மக்களுக்குரிய இடத்தை அங்கீகரித்து வாக்களித்த வெள்ளைத் தென்னாபிரிக்கா என உலகம் எதிர்பாராத மாற்றங்களைக் காணும் இந்நேரத்தில் இத்தேர்தல் வருகிறது. கல்வி அறிவு, தொழில்நுட்பத் திறன், மனிதவளம், இராணுவ பலம் இவ்வாறு செல்வத்திலும் செல்வாக்கிலும் முன்னணி வகிக்கும் அமெரிக்காவை, உலகெங்கும் காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், அரசியற் பிரச்சனைகளின் மத்தியில் இருபத்தொராம் நூற்றாண்டுக்கு வழிநடத்திச் செல்லப்போகும் தலைவரின் தெரிவை, முழு உலகமும் அக்கறையுடன் அவதானித்துக் கொண்டிருக்கிறது.

சர்வதேச மட்டத்திலான முக்கியத்துவம் ஒருபுறமிருக்க, உள்நாட்டிற் காணப்படும் பல்வேறு பிரச்சனைகளைச் சரியாகக் கையாளத் தெரிந்த ஒருவரை வெள்ளை மாளிகைக்கு அனுப்புவதில் உள்ள அவசியத்தை அமெரிக்கர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். பணவீக்கம், வீடின்மை, வறுமை, வரிச்சுமை, வேலையின்மை, கல்வி முறையில் உள்ள குறைபாடுகள், சுகாதார வைத்தியக் கவனிப்பில் உள்ள பிரச்சனைகள், நிலைகுலைந்துள்ள சட்டம் ஒழுங்குப் பராமரிப்பு, அதிகரிக்கும் போதை மருந்துப் பாவனை போன்றன அடுத்த ஜனாதிபதி உடன் கவனிக்க வேண்டிய சில முக்கிய சவால்கள்.



**அமெரிக்க அரசாங்கம்**

தேர்தல் நிலவரங்களைப் பார்க்கமுன் அமெரிக்க அரசின் அமைப்புப் பற்றிச் சுருக்கமாகப் பார்க்கலாம். இலங்கை ஜனாதிபதி போலவே அமெரிக்க ஜனாதிபதியும் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டவர். ஆயினும் கொங்கிறஸ் (Congress) உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவின்றி முக்கிய விடயங்களில் ஜனாதிபதி சுயமாக இயங்க முடியாது. கொங்கிறஸானது செனற் (Senate), பிரதிநிதிகள் சபை (House of representatives) என்று இரு பிரிவுகளைக் கொண்டது. மாநிலத்துக்கு இருவர் என நூறு செனற்றர்களும், குடிசனப் பரம்பலுக்கேற்ப 435 மக்கள் பிரதிநிதிகளும் இருப்பர். கொங்கிறஸ் சுயமாகத் தீர்மானங்களை நிறைவேற்ற முடியும். அவற்றை நிராகரித்துத் தடுப்புரிமையைப் (Veto) பிரயோகிக்கும்

www.tamilarangam.net

அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. ஆனால் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை ஜனாதிபதி நிராகரிக்க முடியாது.

இலங்கையில் உள்ளது போன்று ஜனாதிபதித் தேர்தல் நாடளாவிய எளிய அறுதிப் பெரும்பான்மையால் தீர்மானிக்கப் படுவதில்லை. வாக்குகள் மாநில ரீதியாகவே கணக்கிடப் படுவதால் ஒவ்வொரு மாநிலத்திலும் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவது முக்கியமானது. எல்லா மாநிலங்களிலும் ஒரே வேட்பாளர்கள்தான் இருப்பார்கள் என்பதில்லை. நாட்டின் இரு பிரதான கட்சிகளான ஜனநாயகக் கட்சியும் (Democratic Party), குடியரசுக் கட்சியும் (Republican Party), நியமிக்கும் வேட்பாளர்கள் எல்லா வேட்பாளர்கள் எல்லா மாநிலங்களிலும் போட்டியிடுவர். சிறிய கட்சிகள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்களின் பெயர்களைப் பிராந்திய ரீதியில் ஆங்காங்கே காணலாம்.

சரி, அப்படியானால் ஜனாதிபதி எவ்வாறு தெரிவாகிறார் என்ற வினா அப்போது எழும். ஒவ்வொரு மாநிலத்திலும் வெற்றி பெறும் வேட்பாளர்கள் தமது சார்பில் தெரிவாளர்களை (Electors) நியமிப்பர். உதாரணமாக அலபாமா மாநிலத்தில் பெரும்பான்மை வாக்குகளைப் பெறும் வேட்பாளர் அம்மாநிலத்திற்கென ஒதுக்கப்பட்ட ஒன்பது தெரிவாளர்களையும் நியமிக்கலாம். இவ்வாறு அமெரிக்காவின் 50 மாநிலங்களில் இருந்தும், தலைநகர் வோஷிங்டனில் இருந்தும் குடிசன விகிதத்திற்கேற்ப மொத்தம் 538 தெரிவாளர்கள் நியமனம் பெறுவர். இவர்களே ஒன்றுகூடி ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வாக்களிப்பர். இத்தெரிவில் அறுதிப் பெரும்பான்மை (அரைவாசிக்கு மேல்) பெறும் வேட்பாளர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப் படுவார்.

உண்மையில், சனத்தொகை கூடிய முதல் பத்து மாநிலங்களில் (கலிபோணியா, நியூயோர்க், ரெக்ஸாஸ்......) மட்டும் வெற்றி பெறுவதன் மூலம் - அதாவது, அரைவாசிக்குக் குறைந்த மாநிலங்களையும், அரைவாசிக்குக் குறைந்த மொத்த வாக்குகளையும் மட்டும் பெற்று - ஒரு வேட்பாளர் ஜனாதிபதியாக வரமுடியும். கடந்த எழுபது வருடங்களில் மிகவும் குறைந்தளவு தெரிவாளர்களைப் பெற்று (297 - 241) வெற்றியீட்டிய ஜிம்மி காட்டர் (1976) அரைவாசிக்குக் குறைந்த மாநிலங்களில் (24) மட்டுமே வெற்றி பெற்றிருந்தார். 50.1% வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார் அவர். மிகப் பெரிய வித்தியாசத்தில் வெற்றி பெற்ற றொணால்ட் றீகன் (1984) 49 மாநிலங்களை வென்றாரெனினும், 58.8% வாக்குகளையே பெற்றிருந்தார்.

எந்த வேட்பாளரும் அறுதிப் பெரும்பான்மைத் தெரிவாளர்களைப் பெறாதவிடத்து மக்கள் பிரதிநிதிகள் சபை ஜனாதிபதியை நியமிக்கும். அதேபோல செனற் உப ஜனாதிபதியை நியமிக்கும். ஆனாலும் பெரும்பாலும் தேர்தல் இரு கட்சிகளின் நேரடி மோதலாகவே இருப்பதால் இந்த நிலை இதுவரை ஏற்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை (லீப் வருடங்களில்) நிகழும். இரண்டு தடவைகளுக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக இருக்க முடியாது. செனற் சபைத் தேர்தல்கள் ஆறு வருடங்களுக்கு ஒருமுறையும், பிரதிநிதிகள் சபைத் தேர்தல்கள் இரு வருடங்களுக்கு ஒருமுறையும் நிகழும். கடந்த முப்பத்தெட்டு வருடங்களாக பிரதிநிதிகள் சபையிலும், கடந்த பத்து வருடங்களாக செனற் சபையிலும் ஜனநாயகக் கட்சியே பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருக்கிறது.

தேர்தல் நிலவரம்

அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி புஷ் (George Bush) குடியரசுக் கட்சியின் முன்னைய ஜனாதிபதி றொணால்ட் றீகனின்கீழ் எட்டு வருடங்கள் (1980 - 88) உப ஜனாதிபதியாக இருந்தவர். 1988 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னால் இவரது வெற்றி இலகுவானதாக இராது என அபிப்பிராய வாக்கெடுப்புகள் தெரிவித்தன. ஏராளமான தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வீசினார் புஷ். 'புதிய வரிகளை விதிக்கமாட்டேன்' (Read my lips; No new taxes) என்பது அவற்றில் முக்கியமானது. தவிர, நாட்டின் கல்வி அபிவிருத்தி, சுற்றாடல் சுத்தம் என்பனவே தனது அரசின் முக்கிய செயற் திட்டங்களாக இருக்கும் எனவும் கூறினார். மேலும், ஜனநாயகக் கட்சி வேட்பாளரான டுகாகிஸ் (Micheal Dukakis) ஆளுனராக இருந்த மஸாசுசெட்ஸ் மாநிலத்தின் பொஸ்ரன் துறைமுகத்தின் சுத்தம் தொடர்பாகவும், அங்கே குற்றவியற் சட்டங்கள் தீவிரமாக இல்லை என்றும் புஷ் அணி தொடர்ச்சியாக ஒளிபரப்பியது. அமெரிக்கத் தேர்தல் வரலாற்றில் மிகக் கேவலமான பிரசாரங்களைக் கண்ட இத்தேர்தலில் ஜனநாயகக் கட்சி தோற்றுப் போயிற்று.

கடந்த பெப்ரவரியில் முடிந்த ஈராக் யுத்தம் ஜோர்ஜ் புஷ் தலைமைக்குக் கிடைத்த வெற்றியாக அமெரிக்கர்களால் கருதப்பட்டது. தொண்ணூறு வீதத்துக்கு மேற்பட்டோர் அடுத்த ஜனாதிபதியாக புஷ்தான் வரவேண்டும் எனக் கருத்துத் தெரிவித்தார்கள். ஆனாலும், இந்தப் போர் ஓய்ந்தபின் மக்கள் கவனம் சீர்குலைந்து போயிருந்த உள்நாட்டு விவகாரங்கள்பாற் திரும்பியது. வெளிநாட்டுச் சந்தைகளிற் போட்டியிட முடியாமல் அமெரிக்கத் தயாரிப்புகள் முடங்கிக் கிடந்தன. பெரிய நிறுவனங்கள் திணறின. சிறியவை மூடப்பட்டன. பெருமளவு தொழிலாளர்கள் வேலை இழந்தார்கள். சோவியத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அமெரிக்க ஆயுத விற்பனையும் இராணுவம் சார்ந்த தொழில்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. உள்நாட்டைக் கவனிக்காமல் வெளிநாட்டு விவகாரங்களிலேயே புஷ் முழு நேரத்தையும் வீணடித்து விட்டதாக மக்கள் கோபப்பட்டார்கள். ஜோர்ஜ் புஷ்ஷின் செல்வாக்கு வேகமாகச் சரியத் தொடங்கியது.

தனது திட்டங்களை ஆதரித்து வாக்களிக்காமல் இலாபம் கருதி கொங்கிரஸ் அவற்றை நிராகரிப்பதாக புஷ் குற்றம் சாட்டினார். ஜனாதிபதியின் திட்டங்கள் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் சாத்தியமான அம்சங்களைக் கொண்டிருக்கவில்லை என்றும், வரவு செலவுத் திட்டத்திற் துண்டுவிழும் ஆயிரக் கணக்கான கோடி டொலர்களைச் சமன் செய்யும் அவசியம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மீண்டும் களத்தில் றொஸ் பெறோ!

யூலையில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்க் களத்திலிருந்து விலகிய றொஸ் பெறோ செப்டம்பர் இறுதியில் தாம் மீண்டும் போட்டியிடப் போவதாக அறிவித்தார். ஏனைய இருவரையும்விட வேறுபட்ட வாக்குறுதிகளுடன் களத்தில் நிற்கும் பெறோ, இதுவரை தேர்தலுக்காக ஒருகோடி டொலர்களுக்குமேல் செலவழித்துள்ளார். இவரது சொத்துகளின் மொத்தப் பெறுமதி 20பில்லியன் டொலர்கள் என மதிப்பிடப் படுகிறது.

– பிரமன் –

இருக்கையில் வாக்குகளைப் பெறும்பொருட்டு வரிக்குறைப்புகளை அறிவிக்க முற்படுவதை அனுமதிக்க முடியாது என்றும், கொங்கிறஸின் ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் உறுதியாக இருந்தனர். தனது பிரசாரத்தின்போது உறுதியளித்த 'வரிவிதிக்க மாட்டேன்', '3கோடி புதிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவேன்' போன்ற வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமைக்குக் கொங்கிறஸ்தான் காரணம் என்ற புஷ்ஷின் பிரசாரத்தை, தனது கையாலாகாத் தனத்துக்கு அடுத்தவர்மீது பழிபோடுகிறார் புஷ் என்று மக்கள் எரிச்சலுடன் விமர்சித்தனர்.


இதேவேளையில் ஜனநாயகக் கட்சியின் நிர்வாகத்தில் இருந்த கொங்கிறஸ் வங்கியிலும், தபாலகத்திலும் இருந்த காசோலை மற்றும் போதை மருந்து மோசடிகள் வெளிவந்தன. ஜனநாயகக் கட்சி வேட்பாளராக நியமிக்கப்பட இருந்த பில் கிளின்ரன் (Bill Clinton) தொடர்பாக, வியட்நாம் போருக்குப் போகும்பொருட்டு இராணுவத்தில் சேராமல் (1969இல்) ஒளித்து ஓடினார் என்றும், குடும்பச் சினேகிதர் என்று கருதப்பட்ட இன்னொரு பெண்ணுடன் தவறான உறவு வைத்திருந்தார் என்றும் செய்திகள் வெளியாகின. ஒன்றன்பின் ஒன்றாக வெளியான இச்செய்திகள், 'அரசியல் ஒரு சாக்கடை' என்ற அபிப்பிராயத்தை அமெரிககர்களிடம் – குறிப்பாக மத்திய வகுப்பு மக்களிடம் – ஏற்படுத்தின.

அடுத்த ஜனாதிபதி யார் என்ற கேள்விக்கு விடைதேடிக் கொண்டிருந்த அமெரிக்க மக்களுக்கு, ரெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்த றொஸ் பெறோ (Ross Perot) என்ற கோடீஸ்வரர் தேர்தலில் போட்டியிடத் தயாராயிருப்பதாகச் செய்தி கிடைத்தது. எல்லா மாநிலங்களிலும் அரசியலில் ஒரு 'மாற்றம்' வேண்டும் என்று காத்திருந்த தொண்டர்கள் திரண்டு இறங்கினார்கள். தேர்தல் அலுவலகங்கள் மும்முரமாக வேலை செய்தன. அபிப்பிராயக் கணிப்புகள் புஷ், கிளின்ரன், பெறோ மூவரும் தலா முப்பது வீத வாக்குகளைப் பெறுவர் எனத் தெரிவித்தன. எனினும் கொம்பியூட்டர் தொழிலில் வெற்றிகரமாக விளங்கிய பெறோவிற்கு அரசியல் இலகுவாக இருக்கவில்லை. 'நாட்டின் முன்னேற்றத்திற்கு என்ன திட்டத்தை வைத்திருக்கிறீர்கள் என்ற கேள்விக்குப் பதில் சொல்ல அவரால் முடியவில்லை. செய்தியாளர்களிடமிருந்து எழும் கூர்மையான கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமலும், அரசியல் ஆலோசகர்களதும் தொண்டர்களதும் எதிர்பார்ப்புகளையும் கருத்துகளையும் கையாள முடியாமலும் அவர் திணறினார். 'இந்த மனிதரை நம்ப முடியுமா?' என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்தது.

பன்னிரண்டு வருடங்களாக வெள்ளை மாளிகையைக் கைப்பற்ற முடியாமல் திணறும் ஜனநாயகக் கட்சியின் எல்லாச் சக்திகளும் ஒன்றிணைந்து பில் கிளின்ரனைத் தமது வேட்பாளராக யூலை நடுப்பகுதியில் அறிவித்தன. உபஜனாதிபதிப் பதவிக்கு இளம் வயதினரும், வியட்நாம் போரில் பங்குபற்றியவரும் சுற்றாடல் மற்றும் சர்வதேச அரசியல் அனுபவம் வாய்ந்தவருமான செனற்றர் அல் கோ (Al Gore) பெயர் அறிவிக்கப்பட்டது. இதுதவிர, ஜனநாயகக் கட்சியின் கொள்கைப் பிரகடனத்தில் கல்வி மற்றும் மருத்துவப் பராமரிப்பு போன்றவற்றைச் சீர்படுத்தும் திட்டங்களும் வெளிநாட்டு இராணுவத் தளங்களை மூடி அதன்மூலம் உள்நாட்டை அபிவிருத்தி செய்யும் திட்டங்களும் அடங்கியிருந்தன. பணக்காரர்களுக்கான வரிவிதிப்பு, தொழில்நுட்பத் துறை அபிவிருத்தி, பெண்களின் உரிமைகளுக்கான அங்கீகாரம், பாலியல் பழக்கங்களை அடிப்படையாக வைத்துக் காட்டப்படும் ஒதுக்கலுக்கு எதிரான பாதுகாப்பு போன்றவையும் பில் கிளின்ரனால் முன்வைக்கப் பட்டன. இந்தச் சமயத்தில் சுயேச்சையாகப் போட்டியிட இருந்த றொஸ் பெறோ தாம் விலகிக் கொள்வதாக அறிவித்தார். யூலை மாதமுடிவில் எடுக்கப்பட்ட அபிப்பிராயக் கணிப்பு கிளின்ரனுக்கு மிகவும் சாதகமாக (56:28) அமைந்திருந்தது.

குடியரசுக் கட்சியின் கொள்கைப் பிரகடனம் ஒகஸ்ற் மாத முடிவில் வெளியானது. கருச்சிதைவுக்கு எதிரான சட்டவிதிப்பு, கல்வித் துறையைப் பெருமளவுக்குத் தனியார் மயப்படுத்தல், வரிகளைக் குறைத்தல் போன்றவற்றை அப்பிரகடனம் வலியுறுத்திற்று.

www.tamilarangam.net




*செப்டம்பர் இறுதிவார நிலைகள்......*

கொங்கிறஸின் கெடுபிடிகளைக் கண்டித்தும் வெளிவிவகாரக் கொள்கைகளில் தனது வெற்றியை - பொதுவுடைமைவாதத்தின் வீழ்ச்சி உட்பட - எடுத்துக் காட்டியும் புஷ் மக்களிடம் வாக்குக் கேட்டார். குடியரசுக் கட்சியினரைக் கொங்கிறஸ் அங்கத்தினராக்குங்கள், அவர்களது ஆதரவுடன் இந்த நாட்டை நிமிர்த்துகிறேன் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். உப ஜனாதிபதி வேட்பாளர் டான் குயல் (Dan Quayle) தனது கட்சியே குடும்ப நலன்களைக் கவனிக்கும் என்றும், பில் கிளின்ரன் ஒழுக்கமற்ற - நம்பமுடியாத - ஒரு மனிதர் என்றும் பிரசாரம் செய்தார். குடியரசுக் கட்சியின் மற்றைய தலைவர்கள், கருச்சிதைவை ஆதரிக்கும் ஜனநாயகக் கட்சியைக் கொலைகாரர்களாக வர்ணித்தும், கிளின்ரனின் மனைவி ஹிலாறி (Hilary) எழுதிய கட்டுரைகளைத் திரிபுபடுத்தி அவர் வெள்ளை மாளிகைக்குள் நுழையத் தகுதியற்றவர் என்றும் பேசினார்கள். இந்த வாதங்கள் மக்கள் மத்தியில் எடுபடவில்லை என்பதை ஓகஸ்ற் முடிவில் எடுக்கப்பட்ட அபிப்பிராயக் கணக்கெடுப்பில் காணப்பட்ட கிளின்ரனின் 10 - 15% மேலதிக ஆதரவு காட்டியது.

பொதுவாகப் பார்க்குமிடத்து ஜனநாயகக் கட்சி சிறுபான்மையினர், பெண்கள், மத்திய வகுப்பு மக்கள், புதிய கருத்துகளை ஆதரிப்போர், அமைதி விரும்பிகள், மிதவாதிகள் போன்றோரைப் பிரதிநிதித்துவம் செய்வதாகவும், குடியரசுக் கட்சியானது பணக்காரர்கள், இனவாத வெள்ளையர், சமயவாதிகள், ஆண் மேலாதிக்கக் கருத்துடையோர், பாரம்பரியவாதிகள் போன்றோரைப் பிரதிநிதித்துவம் செய்வதாகவும் சொல்லலாம். வேட்பாளர்களைப் பொறுத்தவரை வாக்குறுதிகளைக் காக்கத் தவறியமை மட்டுமன்றி நாட்டை வறுமைக்கு இட்டுச் சென்ற புஷ், பொறுப்பாகப் பேசத் தெரியாத கோமாளி என்று பலராலும் வர்ணிக்கப்படும் குயல் இருவரையும்விட, வறுமையான ஆக்கன்ஸா (Arkansas) மாநிலத்தை, ஆளுனராக இருந்து, முடிந்தளவு திறமையாக கடந்த 11 வருடங்களாக வழிநடாத்தும் கிளின்ரன் - வல்லமையும் திட்டங்களும் கொண்ட கோ இணையே சிறந்தது என்ற கருத்து எல்லா அபிப்பிராய வாக்கெடுப்புகளிலும் தென்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் உள்ள இன்னொரு பிரச்சனை வாக்காளர் தட்டுப்பாடாகும். சென்ற தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானோரில் 71.1% பேரே வாக்காளராகப் பதிவு செய்தனர். இவர்களில் 70.6% பேரே வாக்களித்தனர். அதாவது வயது அடைந்தோரில் அரைவாசிப் பேரே (50.8%) வாக்களித்திருந்தனர். வாக்காளராகப் பதிவு செய்யும் முறையை எளிமையாக்கும் திட்டம் ஒன்றை கொங்கிறஸ் முன்வைத்தபோது புஷ் அதை நிராகரித்தார். எவ்வாறாயினும் இம்முறை அதிகம் பேர் வாக்களிக்கும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

சொந்தமான சாதனைப் பட்டியலை முன்வைக்க முடியாத புஷ் அணியினர் குடியரசுக் கட்சியின் பாரம்பரியத்திற்கிணங்க எதிரணியினரைக் கேவலமாகத் தாழ்த்தித் தாக்கிப் பேசுவதன் மூலம் தம்மை உயர்த்திக் கொள்ள முற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஆயினும், பதவியில் இருக்கும் அணி இவ்வாறு ஒரு தந்திரத்தைப் பாவிப்பதை அமெரிக்க வாக்காளர்கள் அங்கீகரிக்கும் வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. இதுதவிர கொங்கிறஸ், வெள்ளை மாளிகை இருதரப்புமே ஒரு கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்தால் நல்லதென மக்கள் கருதுவதாகவும் தெரிகிறது. ஆனாலும் அரசியல் அவதானிகள் மற்றும் மக்கள் கருத்து வல்லுனர்களின் அபிப்பிராயத்தின்படி தேர்தல் முடிவுகளை எதிர்வுகூற இன்னமும் காலம் கனியவில்லை.

www.tamilarangam.net

# நாடகத்தில் தரமும் சர்வதேசத் தொடர்புகளும்

-மாவை நித்தியானந்தன்

ஒரு நாடகத்துக்கு (அல்லது வேறு எந்தக் கலை நிகழ்ச்சிக்கும்) ரிக்கற் விற்க முற்படும் போது, முதலில் கேட்கப்படும் கேள்வி 'இது எந்த நிதிக்கு?' என்பதாகும். இந்தக் கேள்வியில் முக்கியத்துவம்' வாய்ந்த பல விஷயங்கள் தொக்கு நிற்கின்றன.

நிகழ்ச்சியை ஆக்குபவரே பார்வையாளரிடம் போய் ரிக்கற் வாங்கும்படி கேட்கிறார்; பார்வையாளர் தாமாக வந்து ரிக்கற் கேட்கவில்லை என்பது முக்கியமானது. ஆகவே 'இது எந்த நிதிக்கு? 'என்ற கேள்வியைக் கேட்கும் உரிமை இவருக்கும் அதற்கு விடை கூற வேண்டிய கடமைப்பாடு அவருக்கும் ஏற்படுகின்றன. சினிமாக் கொட்டகையிலோ, கார்ணிவலிலோ போய் ரிக்கற் வாங்கும்போது, எந்த நிதிக்கு என்று எவரும் கேட்பதில்லை. அல்லது ஒரு ஆங்கில நாடகத்துக்குப் போய் ரிக்கற் வாங்கும் போதும் இதைக் கேட்பதில்லை.

அதேபோல, ஒரு டாக்டரிடம் சிகிச்சை பெறும்போதோ, அல்லது ஒரு சட்ட வல்லுநரிடம் சேவை பெறும்போதோ பணம் எந்த நிதிக்கு என்று எவரும் கேட்பதில்லை. ஆனால் மாதக் கணக்காகவும், சில வேளை வருடக் கணக்காகவும் சிரமப்பட்டு, நேரத்தையெல்லாம் செலவழித்து, தமிழ் நாடகம் அல்லது கலை நிகழ்ச்சி தயாரித்து , அதை மேடையேற்ற முனைபவர்கள்தான், பணம் எந்த நிதிக்கு என்று கணக்குக் காட்ட வேண்டியவர்களாயும் உள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் ஓர் ஆங்கில நாடகத்தைப் பார்க்க ஆகக் குறைந்தது இருபது டொலராவது தேவை. சில வேளை ஐம்பது, நூறு என்றும் ஆகலாம். இதேவேளை ஒரு தமிழ் நாடகத்துக்குக் கட்டணம் ஐந்து டொலர். இதுவும்கூட ஏதோ ஒரு உதவி நிதிக்கென்றால் தான் கொடுக்கப்படும்; நாடகத்துக்கல்ல. அதேவேளை, 'தமிழ் தமிழ்' என்று கத்தித் திரிபவர்களும் நாமே.

ஆங்கிலத்தில் தொழில் ரீதியான நாடக, கலை முயற்சிகள் வளர்ந்துள்ளன. தமிழிலோ...? தமிழில் ஒரு நாடகத்தை ஐந்து டொலருக்குக்கூடச் 'சந்தைப் படுத்த' முடியாத நிலை உள்ளது. இதற்குக் காரணம் சந்தை, சந்தைப்படுத்தப்படும் பொருளின் (நாடகத்தின்) தரம், சந்தைப்படுத்தும் விதம் ஆகிய மூன்றுமே. அத்துடன், பாரம்பரியமாக நாங்கள், சினிமா தவிர்ந்த ஏனைய கலைகளுக்கு அதிகம் பணம் கொடுத்துப் பழக்கப்படாதவர்கள். தரத்தைப் பற்றி ஏதும் கவலைப்படாமல், சன சமூக நிலைய முன்றல்களிலும், கோயில் வீதிகளிலும் இலவசமாக நாடகம் பார்த்து இன்பமடைந்தவர்கள். கலைநிகழ்ச்சிகள் எமக்கு பல சந்தர்ப்பங்களில் திருவிழாக்கள் போல் இழுபடுகின்ற, நேரத்தைப் போக்கும் சாதனங்களாகவே அமைந்திருக்கின்றன.

பார்வையாளர்கள் தாமாகவே வந்து பணம் கொடுத்து ரிக்கற் வாங்கி நாடகம் பார்க்கும் நாள்தான், ஒரு நாடகம் சுய மதிப்புடன் மேடையேறும் நாள், இது எப்பொழுது வரும்? எப்படி வரும்?

தரமும், நல்ல திட்டமிடலுமே இதை சாதிக்க வல்லன. தமிழ் நாடகம் என்றதும் பார்வையாளர் மனத்தில் என்ன தோன்றுகிறது? நிச்சயமாக அது தரமும், பெருமதியும் அல்ல (விதிவிலக்குகள் உண்டு). இதை நீக்கும் வலிமை தமிழ் 'நாடகத் துறையின் கைகளிலேயே இன்று உள்ளது.

இன்று இலங்கை, இந்தியாவுக்கு வெளியே - பல சர்வதேச நகரங்களிலும் - ஊக்கமான தமிழ் நாடக முயற்சிகள் நடைபெறுகின்றன. இது நல்ல விஷயம். வளர்ச்சியடைந்த நாடுகளின் வளர்ச்சியடைந்த - பிறமொழி நாடக அரங்கத்துக்கு அருகருகே நடைபெறும் முயற்சிகளாக இவை இருப்பது அரிய வாய்ப்பாகும்.

பிறந்த மண்ணையும், சுவாசித்த காற்றையும், சொந்த பந்தங்களையும் விட்டு விட்டுத் தொலைதூரம் வந்து விட்ட சாதாரண தமிழர் மனங்களில் காணப்படும் வெறுமையும், வரட்சியும், ஏக்கமும் விளங்கத் தக்கதே. வாழ்க்கைக்கு அர்த்தம் தேடும் எமது தேடலுக்கு நல்ல பதிலாக அமையத் தக்கவை கலைகளும் கலாசாரமுமே.

வெளிநாடுகளே சொந்த நாடுகளாகிவிட்ட எமது இளைய தலைமுறையினருக்கும் அடுத்தடுத்த தலைமுறயினருக்கும் வாழ்க்கை எப்படி அமையப் போகிறதென்ற கேள்விக்கு விடை தெளிவற்றே உள்ளது. இந்த விடை இன்றைய தலைமுறையினரில் பெருமளவு தங்கியுள்ளதெனில் அது மிகையல்ல.

இந்தக் கோணங்களில் பார்க்கும்போது, உலக நகரங்களில் இன்று நடக்கும் கலை முயற்சிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. நாடுகளும், நகரங்களும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொலைவிலும், பலதிசைகளிலும் சிதறியிருப்பினும் முயற்சி ஒன்றே. பின்னணிகளும் ஒத்தனவே. எனவே, இந்த முயற்சிகள்யாவும் இணைக்கப்படவும், ஒருமுகப்படுத்தப்படவும் சாத்தியமும், தேவையும் உண்டு. சுருங்கச் சொல்லின், சர்வதேச நகரங்களுக்கிடையில் ஒரு தொடர்பும், கூட்டுறவும், வளர மிகுந்த வாய்ப்பும், தேவையும் இன்று உள்ளன.

தமிழ் நாடகத்துக்கு எப்போதும் இருந்துவரும் பெரிய பிரச்சினை, தரமான பிரதிகளுக்கான தட்டுப்பாடு. அதுவும், வெளிநாட்டுத் தமிழர்களின் வாழ்கைப் பின்னணியில் நாடகப் பிரதி தேடுவோருக்கு அது கிடைப்பது முயற்கொம்பாக உள்ளது. இதைவிட, தாய் நாட்டை நோக்கிய எமது ஏக்கங்களுக்குத் தீனியாகவும், பழைய ஞாபகங்களை அசைபோடுவதற்கு வாய்ப்பாகவும் அமையத்தக்க பிரதிகளும், இளைய தலைமுறையினரின் தேவைக்காக இதிகாசங்கள், காப்பியங்களைத் தழுவிய பிரதிகளும் தேவையாக உள்ளன. ஒரு நகரில் மேடையேறும் நல்ல நாடகப் பிரதி, ஏனைய நகரங்களுக்கும் கிடைக்க வேண்டும். பிரதி மட்டுமல்ல, தயாரிப்புக் குறிப்புகள், உத்தி - ஒளியமைப்பு விபரங்கள், **Special effects, sound effects** போன்றவை கூடப் பரிமாறப்படலாம். ஒலி நாடாக்களும், வீடியோ நாடாக்களும் இத்தகைய பரிமாற்றங்களை இலகுபடுத்தும். காலப் போக்கில், நாடகக் குழுக்களின் முழுமையான மேடையேற்றங்களைக் கூடப் பரிமாறிக் கொள்ளக்கூடிய சூழ்நிலையும் வரலாம்.

இவையெல்லாம் நாடகக் கலையை புதிய வளர்ச்சிப் படிநிலைகளுக்கு இட்டுச் செல்லுதல் கூடும். தரத்தின் வளர்ச்சி, 'சந்தைப் படுத்துதலை' இலகுவாக்கும். சந்தையையே மாற்றியமைத்துவிடும்.

உலகளாவிய ரீதியில் நாடக சஞ்சிகை, செய்தி மடல் போன்றன வெளியிடுதலும் சாத்தியமானதே. நாடகக் கலைஞர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் இதனால் பெரும் பயன் விழைதல் கூடும். நாடகத் துறைத் தகவல்களைப் பரிமாறவும், அறிவை விருத்தி செய்யவும், கருத்துக்களை விவாதிக்கவும், விமர்சனங்களை வெளியிடவும் இது நல்ல களமாகலாம். ஒரே நேரத்தில்பல இடங்களிலிருந்து ஒரே பிரசுரத்தை வெளியிடுதலும் சாத்தியமே. **Photocopier, Facimile** போன்ற சாதனங்களும், இலகுபடுத்தப்பட்ட நவீன அச்சு வசதிகளும், தமிழ் கொம்பியூட்டர் அச்சுகளும், துரித கடிதப் போக்குவரத்து வசதிகளும் இத்தகைய பிரசுர முயற்சியை இலகுவாக்க உதவும்.

சுருங்கச் சொன்னால், சர்வதேச ரீதியில் தமிழ் நாடகத் துறையை ஒன்றிணைக்கும் நாடக இயக்கமொன்றின் தோற்றம், காலத்தின் இன்றைய தேவை.

நன்றி: அக்கினிக்குஞ்சு, (Priya publications, Post Box 470, Moorabbin, VIC - 3189, AUSTRALIA)




*– Tilstanden er verre enn jeg trodde – nå har også Byrået for "forsvunne" personer forsvunnet.*

"நான் நினைத்ததைவிட நிலைமை மோசமாக இருக்கிறது, 'காணாமற் போனோரைக் கண்டுபிடிக்கும் அலுவலகத்'தையே காணவில்லை"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எப்பொருள் யார்வாய் கேட்பினும்...

• துருவச்சி •



புரியாத புதிர் 5

தமிழரோடு காலந்தள்ள முடியாது!

"எங்களிட்ட ஒற்றுமை இல்லை. மற்றவர்களைச் சமமாக மதிக்கும் பழக்கமில்லை" எனும் பீடிகையுடன் கதையை ஆரம்பித்தார் விசித்திர கவிராயர்.

"ஏன் என்ன பிரச்சனை?" எனக் கேட்டேன்.

"இல்லத்தம்பி, பொதுவாக ஒரு தமிழன் மற்றத் தமிழனைக் குறை சொல்றது வழக்கம். இது கவலை தாற விசயம். நான் நோர்வேயில் சந்தித்த அனேக தமிழர்கள் சொல்லுறது இதுதான். இந்தத் தமிழ்ச் சாதியோட ஒண்டும் செய்ய முடியாது, அதால நாங்கள் அவ்வளவா ஆக்களோட பழகிறதில்லை எண்டு. இப்பிடிப் பலரும் சொல்லுறாங்கள். இதன்படி பார்த்தால் ஒவ்வொருத்தரும் தாங்கள் தாங்கள் நல்லவர்களாக இருப்பது போலக் கருதுகிறார்கள். அப்படி ஒவ்வொருத்தரும் இருந்தால் எல்லாத் தமிழரும் நல்லவர்கள்தான். முழுத்தமிழரும் நல்லவராக இருந்தால் ஏன் பிரச்சனை வருது?

இது எனக்கு விளங்கேல்லை, உமக்கு விளங்குதோ தம்பி" என்று கேட்டார் கவிராயர்.

நானோ "சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்த மாதிரி இருக்கு" என்றேன்.

புரியாத புதிர் 6

சிங்களவர் தமிழரையும்

தமிழர் முஸ்லிமையும்

அடுத்ததும் இப்படித்தான் என்று தொடங்கினார், 'என்ன?' என்று கேட்டேன்.

*சோவியத் குடியரசுகள் சுயநிர்ணய உரிமை கேட்டதும் அதை அங்கீகரிக்கும் பணக்கார நாடுகள் உலகில் மற்ற நாடுகளில் மோசமான முறையில்*

www.tamilarangam.net

இனங்கள் ஒடுக்கப்படுவதைப் பார்க்கிறதில்லை. இதுக்குப் பல உதாரணங்கள் சொல்லுவன். அதைவிட எமக்கு, எங்கட சனத்துக்கு (மற்றைநாட்டுப் பிரச்சனை தெரியாவிட்டாலும் என்று மெதுவான குரலில் சொல்கிறார்) நல்லாத் தெரிஞ்ச விடயம் தமிழரை சிங்களவர் ஒடுக்கிறதுதான். இப்ப எந்தப் பகுதிச் சிங்களவர் தமிழரை ஒடுக்குகினம் எண்டு நாங்கள் பாக்கிறதில்லை. எங்கட சனம் அதுகளைப் பற்றி விளங்க நேரமில்லாமல் திரியுது. எங்கட சனம் ஒடுக்கப்படுகிறது சிங்களப் பேரினவாதத்தால், ஆனால் அதே சிங்களச் சனம் இந்தியா தங்களை ஒடுக்கிறதாக உணர்கினம். இது ஒருவகையில் உண்மை. ஆனால் அவையள் தமிழரை ஒடுக்கிறது பற்றி எதுவும் பேசிறதில்லை, உணர்றதுமில்லை. அண்மையில் ஈராக் குவைத்தை ஆக்கிரமித்து ஒடுக்க முயன்றது. இஸ்ரேல் பாலஸ்தீனரை ஒடுக்கிறதாகச் சொல்லி அந்தப் பிரச்சனையையும் இதிலை சம்பந்தப் படுத்தி தான் பலஸ்தீனர்பக்கம் என்று காட்ட வெளிக்கிட்டது. இதில் யசீர் அரபாத்தும் தன்ரை நிலை மறந்து குவைத் ஆக்கிரமிப்பைப் பற்றியும் பாராமல் சதாமோடு கூடிக் குலவினதாலை பலஸ்தீனர்களுக்குக் கெட்ட பெயர். ஏன் ஈராக் செய்த பிழை, அரபாத்துக்குப் புரியவில்லை? சரி, ஏன் அங்க போவான்? இங்க இலங்கையில இந்தியா தனது மேலாதிக்கக் கையைப் போடுதுஎண்டு சிங்கள ஆக்கள் கத்துகினம். அதே ஆக்கள் தமிழரை ஒடுக்குகினம். அதைவிட தினசரி சிங்கள அரசின் ஒடுக்குமுறைக்குப் பலியாகும் தமிழினம் சிறுபான்மையிலும் சிறுபான்மையான முஸ்லிம்களை ஒடுக்கிறது என்னவெண்டு விளங்கேல்லை. இதுவும் தமிழனுக்கு விளங்கேல்லை.

இதுதான் ஒவ்வொருத்தரும் தனக்குத்தான் எண்டால் கத்திக் கூச்சல் போடுவான். அதே பேர்வழி மற்றவை ஒடுக்கப்படேக்கை பாராததுமாதிரி இருப்பான். இது எப்பிடி முடியுது எண்டு எனக்கு விளங்கேல்லை. உங்களுக்கு யாருக்காவது விளங்கினால் சொல்லமுடியுமா?

நான் கூச்சல் போடவில்லை, என்ன பதில் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

## சுபமங்களா

தமிழில் பல நல்ல கலை இலக்கிய முயற்சிகள் பற்றிய தகவல்களையும், படைப்புகளையும் சுமக்கும் சஞ்சிகை. மாதமொருமுறை வெளிவரும் இவ்விதழின் வருடசந்தா (விமானத் தபாலில்) 400 இந்திய ரூபாய்கள். ஆசிரியர் கோமல் சுவாமிநாதன். தொடர்புகள்:

சுபமங்களா,
10, டொக்டர் அப்பாதுரை தெரு,
சீத்தம்மாள் கொலனி,
சென்னை 18,
தமிழ்நாடு.

www.tamilarangam.net

# வெளிநாட்டவரும் மாநகர முதல்வரும்



ஒஸ்லோ மாநகர முதல்வரான றூணண கொராட்சன் அண்மைக் காலங்களாக வெளிநாட்டவர்கள் - குறிப்பாக கறுப்பர்கள் (கறுப்பர்கள் என்றதும் ஆபிரிக்கர்கள் மட்டும் என எண்ணவேண்டாம், கறுப்புத் தலைமயிரைக் கொண்ட
ஆசிய, லத்தீனமெரிக்கர்கள் அனைவரும் வெள்ளையரின் (?) பார்வையில் கறுப்பர்கள்தான்) - தொடர்பாக வெளியிட்டுவரும் கருத்துகள் இங்கு வாழும் வெளிநாட்டவர்கள் மத்தியில் மட்டுமன்றி நாட்டின் சகல அரசியல் சமூக மட்டங்களிலும் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது.

இவரின் இந்த இனவாதக் கருத்துகள் பற்றி அபிப்பிராயம் தெரிவித்துள்ள 'வெளிநாட்டவர் எமக்குத் தேவையா?' என்ற நூலின் ஆசிரியர் ஹன்ஸ் ஆணே ஷெல்சோஸ், இவ்வாறான கருத்துகள் வளர்ந்து வருவதற்கு ஒருவகையில் இனவாத எதிர்ப்பு அமைப்பினரும், வெளிநாட்டவரின் ஆதரவு அமைப்புகளும் பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறியுள்ளார். இவை வெளிநாட்டவருக்கு வக்காலத்து வாங்குவதிலேயே கரிசனை கொள்கின்றன; வெளிநாட்டவர்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள், புகார்கள் பற்றித் தெளிவை ஏற்படுத்தத் தவறிவிடுகின்றன எனக் கூறியுள்ளார். வெளிநாட்டவர்கள் தொடர்பான சாதகமான அம்சங்களைக் கணக்கிலெடுக்கும் இவர்கள், பாதகமான அம்ங்களைக் கணக்கிலேயே எடுப்பதில்லை என்பதுடன் அவற்றை நியாயப்படுத்தவும் செய்கின்றனர் எனக் கூறியுள்ளார். இது இங்குள்ள வெளிநாட்டவர்க்குச் செய்யும் துரோகம் என அவர் கூறியுள்ளார்.

கொராட்சனின் கருத்துகள் வலுவற்றவை, முக்கியமாக போதைவஸ்து விடயத்தில் வெளிநாட்டவர் பற்றி அவர் குறிப்பிட்ட கருத்துகள் கண்டிக்கத் தக்கது மட்டுமன்றி உண்மைக்குப் புறம்பானதுமாகும் என ஹன்ஸ் ஆணே தெரிவித்துள்ளார். புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளிநாட்டவர் பற்றி வெளியிடப்படும் தகவல்கள் காவல் துறையினராலும், அரசியல்வாதிகளாலும் துஷ்பிரயோகம் செய்யப் படுகின்றன எனவும், அண்மையில், 5000க்கு மேற்பட்ட வெளிநாட்டவர்கள் சட்டவிரோதமாக ஒஸ்லோவில் தங்கியிருப்பதாக வந்த தகவல் பிழையானது எனவும் அவர் கூறியுள்ளார். இவ்வாறு தங்கியுள்ளோர் பெரும்பாலும் உல்லாசப் பிரயாணிகள், தொடர்ந்து பயணம் செய்வதற்காக தற்காலிகமாகத் தங்கியிருப்பவர்கள் மற்றும் இந்நாட்டுப் பிரஜாவுரிமை பெற்றவர்கள், குறுங்கால விஜயம் மேற்கொண்டவர்கள் என அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

விளக்கியுள்ளார்.

கலாசார வேறுபாடுகள், முரண்பாடுகள் எமது மத்தியில் தோன்றினாலும் இவற்றை அனுசரித்து செயல்பட வேண்டியது எமது கடமை எனக் கூறும் ஹன்ஸ், கொராட்சனின் கருத்துகள் கண்டிக்கப்பட வேண்டியவை எனவும் கூறியுள்ளார். செல்வந்தர்களும் ஏழைகளும் வாழும் இந்த உலகில் நான்குகோடி மக்கள் பசிக் கொடுமையால் வாடுகிறார்கள் என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கூறுகிறார் நல்லெண்ணம் படைத்த ஹன்ஸ் ஆணே.

● இலக்சிக்கா

## "நினைவுத் தொடரில்"



நீள்தொலைவில்
நீண்ட மலைத் தொடரின்
முடிவிலா நீளங்கள்
மனதின் கற்பனைகள்
கனவுகள் போல்.

கோடையின் வருகைக்கு
கோலமிடும் பொன்னிறப்
பூக்களுடன் புற்களும்.
நீண்ட இரவைத்
துரத்தி நின்று
வேடிக்கை பார்க்கும்
நள்ளிரவு சூரியன்.
துள்ளிக் குதித்துத்
துணைதேடும்
சிற்றருவி ஈற்றில்
சலசலக்கும் ஓடையில்
சங்கமிக்கும்.

ஆழ்கடலின் அமைதியை
அலைக்கழிக்கும் அலைகள்
ஆர்வத்தோடு கரைதேடும்.
மண்ணோடு அலைபேசும்
அழகை மலையிடுக்கில்
மறைந்து செவிமடுக்கும்
மாலைச் சூரியன்.
செம்பந்தைத் திசை
அறியாதுருட்டிவிட்டு
இரவு ஆட்சிபிடிக்கையில்
பச்சை மஞ்சளான
வண்ணங்களிழந்து
தோழனின் பிரிவுக்காய்
துக்கம் அனுஷ்டிக்கும்
தாவர இராச்சியம்.


இரவின் ஆட்சியில்
இலவசமாய் தரையிறங்கும்
வெண்பஞ்சுத் துகள்கள்.
வெள்ளியைத் துணைக்கழைத்து
வீதிஉலாவரும் வெண்ணிலவு.

இவையனைத்தும்
ஒருங்கே கொண்ட
கரையோரத் தீவுகளைப்
பிரிய நேர்ந்து
இயந்திரத்தை விழுங்கி
இயலாமல் அவஸ்தையுறும்
தலைநகரில் எனது
நாட்களை இழக்க
நிர்ப்பந்திக்கப்பட்டேன்
எதற்காக?

சுபத்ரா

www.tamilarangam.net







## தேவி எழுந்தாள்

தற்போது ஐரோப்பியச் சஞ்சிகைகள் பலவற்றில் எழுதிவரும் சி.சிவசேகரத்தின் அண்மைக்காலக் கவிதைகளின் தொகுதி இது. வழமை போலன்றி கவிஞரின் குறுகிய முன்னுரையே இதில் இடம்பெற்றுள்ளது.

"முற்போக்கு இலக்கியம் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாக மட்டுமன்றிச் சமுதாயத்தை மாற்றியமைக்கும் ஒரு கருவியாகவும் அமையவேண்டும். இது நமது வரலாற்றுத் தேவை. அந்த அளவில் இலக்கியத்தின் சமுதாய விமர்சனப் பணி முற்போக்கு இலக்கியத்தில் அதிக அழுத்தம் பெறுகிறது. என்னுடைய கவிதைகளில் முன்னைவிட அதிக அளவில் இப்போது இவ்வாறான அழுத்தம் உள்ளது என நினைக்கிறேன். இதற்கான காரணங்களில் இன்றைய அரசியற் தேவைகள் பற்றிய என் மதிப்பீடு முக்கியமானது எனினும் இடைக்கிடை நண்பர்கள் முன்வைக்கும் விமர்சனங்களது பாதிப்பையும் குறிப்பிட்டாக வேண்டும்." என்று தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார் கவிஞர்.




## நாங்கள் மனிதர்

இலங்கையின் மூத்த தலைமுறைக் கவிஞர்களில் ஒருவரான முருகையனின் கவிதைத் தொகுதி இது. கடந்த முப்பதாண்டு காலத்தில் இவர் எழுதிய கவிதைகளில் இதுவரை தொகுக்கப்படாத கவிதைகளின் தொகுதி இது.

"இக்கவிதைகள் எல்லாம் மனிதகுல மேம்பாட்டை நோக்கிய உள்ளுந்தல்களாகவும், தேடுதலாகவும், விசாரணையாகவும், அங்கலாய்ப்புகளாகவும்,

www.tamilarangam.net

தேற்றமாகவும், தெளிகையாகவும், உறுதியாகவும் உள்ளன. இடையறாத பரிசீலனைகளின் ஆவணங்களாகவும் அமைகின்றன. மனிதனைப் பிணித்துள்ள தளைகள் நீங்கவேண்டும்; தடங்கல்கள் அகலவேண்டும்; அதன்பேறாக முழுமையான விடுதலை கிட்டவேண்டும் என்னும் வேட்கையின் மூச்சொலிகளை வாசகர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்" என முன்னுரையில் முருகையன் குறிப்பிடுகிறார்.●

*இவ்விரு நூல்களையும் இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து தமிழகத்தில் சவுத் ஏசியன் புக்ஸ் வெளியிட்டுள்ளது.*

*தொடர்புகள்: சவுத் ஏசியன் புக்ஸ், 6/1 தாயார் சாகிப் 2வது சந்து, சென்னை 600002.*

சிவன்

## நிகழ்வுகள்

* தவறான தகவல்களின் அடிப்படையில் இங்கு அரசியற் தஞ்சம் கோரிய இலங்கைத் தமிழர்கள் சிலர் பலவந்தமாக இங்கிருந்து திருப்பி அனுப்பப்பட உள்ளதாக 'வேகே' தினசரி (25/9/92) செய்தி வெளியிட்டுள்ளது. இவர்களது தகவல்களைச் சரிபார்க்க இங்கிருந்து இலங்கை சென்றிருந்த அரச அதிகாரியின் பேட்டியையும் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

* முன்பு பி.பி.சியின் உலக சேவையில் ஒளிபரப்பான புலிகள் பற்றிய 'தற்கொலைக் கொலையாளிகள்' என்ற நிகழ்ச்சியை நோர்வேயின் தேசிய தொலைக்காட்சி (NRK) 28/7/92 இரவு ஒளிபரப்பியது.

* சுவடுகளின் நான்காண்டு நிறைவையொட்டி வாசகர்கள் – சுவடுகள் சந்திப்பு தொய்யன் தேவாலயத்தில் நிகழ்ந்தது.

* 'பொப்பிசைப் பிதா' நித்தி கனகரத்னம் மற்றும் பலருடன் கலந்துகொண்ட இசை நிகழ்ச்சி ஒன்று ஒஸ்லோவில் நிகழ்ந்தது. இசை வழங்கியவர்கள் நோர்வேயில் வசிக்கும் கே.சுந்தர் மற்றும் குழுவினர்.

## ஹங்கேரியச் சிறையில் 51 தமிழர்கள்!

ஐரோப்பாவில் அரசியற் தஞ்சம் கோரும் வழியில் 51 தமிழ் அகதிகள் ஹங்கேரியில் தடை முகாம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளனர். வெளியுலகுடன் தொடர்பற்றிருந்த இவர்களது கடிதம் ஒன்று களவாக வெளியே கடத்திச் செல்லப் பட்டதையடுத்து, அந்த அகதிகளது துயர்நிலை வெளியே தெரியவந்துள்ளது.

முகாமில் மிக மோசமான நிலையில் வசதிகளற்ற அறைகளில் தாங்கள் வைக்கப் பட்டிருப்பதாகவும், முகாம் காவலர்கள் தங்களைத் தாக்குவதாகவும், பெண்கள் பாலியல் வதைக்கு உள்ளாவதாகவும் இந்தக் கடிதம் தெரிவிக்கிறது. சிலர் நாள் முழுவதும் இருட்டினுள் வைக்கப் படுவதாகவும், மருத்துவ வசதிகள் எதுவும் வழங்கப் படுவதில்லை எனவும் கடிதம் கூறுகிறது.

அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் தம்மை விடுவிக்க முயற்சி எடுக்காவிடில் தாம் உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பிக்க உள்ளதாகவும் இவர்களது கடிதம் தெரிவிக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நினைவில் நிறைந்தவர்

- சிவன் -




பொப் மா(ர்)லி மறைந்து பத்து வருடங்கள் கழிந்தாலும் இசையை நேசிக்கும் அனைவரதும் மனதில் இப்போதும் அவரது நினைவுகள் நிறைந்திருப்பன. சமூகத்துக்குப் பயன்படும் விதத்தில் இசையைப் பயன்படுத்த முடியும் என்பதை அவரது பல பாடல்கள் நிரூபித்தன.

இசைமூலம் அரசியற் கருத்துகளைச் சொல்வது காலம் காலமாக இருந்து வந்தாலும், பொப் மா(ர்)லி அண்மைக்கால வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லப்படக் கூடியவர். இவரது இசை மேற்கத்தைய நாடுகளில் மட்டுமன்றிக் கீழைத்தேய நாடுகளிலும் மிகப் பிரபலம் பெற்றது. இத்தனை காலம் கடந்து மனதில் நிறையும் இவரது பாடல்களைப் பற்றியும், இவரது வாழ்வு பற்றியும் ஒரு வீடியோ வெளிவந்துள்ளது. Time Will Tell என்ற தலைப்பில் ஒன்றரை மணி நேரம் கொண்ட இந்த வீடியோவில் பல மறக்கமுடியாத கணங்கள் பதிவாகி உள்ளதாகப் பத்திரிகைகள் விமர்சனம் எழுதியுள்ளன.

இசையைத் தங்கள் வசதிகளைப் பெருக்குவதற்குப் பயன்படுத்தும் பல கலைஞர்களுக்கு, பொப் மா(ர்)லி பற்றிப் புரிந்துகொள்வது சிரமம்தான். நேர்மையான கலைஞனதும், உண்மையான ரசிகனதும் நேசிப்புக்கு உரியவர் அவர்.

## அடுத்த இதழில்

சல்மான் ருஷ்டி; ஒரு 'சரித்திரப்' பார்வை

பண்பாடு என்றால்.......

'எம்.ஜி.ஆர்; மனிதனும் மாயையும்'

கி.பி.அரவிந்தனின் நெடுங்கவிதை

சித்திரலேகாவின் 'எண்பதுகளில் ஈழத்துத் தமிழ் இலக்கியம்: போக்குகளும் சவால்களும்'

சித்தன் எழுதும் யாழ்ப்பாணப் பயணம்

ஆதவன் கவிதைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடல்கடந்த தமிழர்களைப் பற்றிய எனது நூல் ஒன்று விரைவில் வெளிவர இருக்கிறது. அதற்கு உரிய விதத்தில் பயன்படும் எந்தவிதமான தகவல்களையும் நன்றியுடன் ஏற்பேன்.

கடல்கடந்த நாடுகளில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகளில் 'சுவடுகள்' அமைப்பிலும் அடக்கத்திலும் தனித்துவத்தைப் பேணுகின்றது.

சாரல்நாடன்
டுன்சினானே எஸ்டேட்,
பூண்டுலோயா
இலங்கை

'புலம்பெயர்ந்த உள்ளங்கள் பொருமி வெடித்தபோது தெறித்த உணர்வுப் பொறிகளில் ஆதார பூர்வமான உண்மைகளை சுவடுகள் சுமக்கின்றது என மனம் நிறையக் கூறுகிறேன்.

இளைய அப்துல்லா,
அக்குறணை
இலங்கை


சுவடுகள் நண்பர்கட்கு,

இதழ் கிடைத்தது.

'வேதாளம் கேட்ட வில்லங்கக் கேள்வி' நல்லதொரு வடிவம். தொடராக இதழின் ஒரு அம்சமாக சேர்த்துக் கொள்ளலாம். இன்னும் கொஞ்சம் அழகியல் தன்மையைக் கூட்டினால் வாசகரிடையே வரவேற்புப் பெறும். முருங்கையில்தான் வேதாளம், பைன் மரத்திலுமா என வேதாந்தி வியந்திருக்கலாம். வேதாளம் எந்த இயக்கமோ என்பது நகைச்சுவை உணர்வுடன் சிந்திக்கத் தூண்டியது. இன்னும்கூட நகைச்சுவை கலக்கலாம்.

தமிழில் 'விந்தன்' எனும் எழுத்தாளர் தமது 'மனிதன்' இதழில் இவ்வகை நகைச்சுவைத் தொடர் ஒன்றைக் கையாண்டார். எல்லோரும் அறிந்திருந்த வழிவழியான பழங்கதைகளை, 'பாட்டி பேத்திக்குச் சொன்ன கதைகள்' என்பதை மாற்றி, 'பேத்தி பாட்டிக்குச் சொன்ன கதைகள்' எனும் தலைப்பில் நவீன தன்மைகளுடன் சிரிப்பையும் சிந்தனையையும் தூண்டினார்.

விகடகவி அரசன் பூனைக்குத் தரும் பாலைத் தனதாக்கும் முயற்சியில் பாலைச் சுடச்சுடக் காய்ச்சிப் பூனைக்கு வைப்பான். பூனை நாக்கால் நக்க முனைந்ததும் சுட்டுவிடும். சூடுகண்ட பூனை அடுப்படியை நாடாதல்லவா? பாலை விகடகவி தனதாக்குவான். இது நாமெல்லாம் அறிந்த கதை. இதனை விந்தன், விகடகவி சுடச்சுட வைக்கும் பாலைப் பூனை நக்காமல் தன் வாலை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டு சூடாறிவிட்டதா என்று பரிசோதித்துவிட்டு பொறுத்திருந்து குடிக்கும். விகடகவி ஏமாந்துபோவான். இப்படி பேத்தி பாட்டிக்குக் கதை சொல்வாள்.

வேதாளம் கதையையும் 'வேதாந்தி' இன்னும் செரித்து, உத்திமுறையைக் கையாண்டு படைப்பாராயின் அரியதொரு வடிவம் கிடைக்கக்கூடும். கேள்விகள் நறுக்கென அமைதல் வேண்டும். முயற்சிக்க வாழ்த்துகள்.

இதழின் வடிவமைப்பில் இன்னும் மெய்வருத்தம் போதாது என்றே சொல்வேன். அட்டையின் சிவப்பு நிறம் பொருத்தமாய் இருப்பினும், வாசகர்கள் இரத்தம் மீதும் ஈழத்தின் துன்பம் மீதும் வெறுத்துப்போய் உள்ளனர். அது சிவப்பு நிறத்தைப் புறந்தள்ளும்.

எனது கட்டுரையில் ஓரிடத்தில் தவறாக அச்சிடப் பட்டிருப்பதுபோல் தோன்றுகிறது. 'சிறைமீண்ட செம்மல்கள் சிலரை அதிகப்படுத்தி இளைஞர் தலைவரென உருவகப் படுத்தினார்...' எனும் இப்பகுதி கருத்து மயக்கத்தைத் தருகிறது. தயவுசெய்து எனது கையெழுத்துப் பிரதியில் இப்படித்தானா என ஒப்பிட்டுப் பாருங்கள். அதிலும் இப்படி இருப்பின் அது தவறானது. 'சிறை மீண்ட செம்மல்கள் சிலரை இவர் இரத்த திலகமிட்டு அறிமுகப்படுத்தி இளைஞர் தலைவரென உருவகப்படுத்த முயன்றார்.' என்றே அர்த்தம் இருக்கவேண்டும்.

இதழுக்கு இம்முறை வெளியே இருந்து கடுமையான விமர்சனங்கள் வரக்கூடும். விமர்சனங்களைக் கட்டாயம் கவனத்திற் கொள்ளுங்கள். மனந்தளராதீர்கள்.

'தலையங்கம்' நன்றாகவே இருந்தது. கனடா இலக்கிய நிகழ்வு சொன்னமுறை உண்மையில் அற்புதமாக இருந்தது.

கி.பி.அரவிந்தன்
பிரான்ஸ்

அன்பின் சுவடுகள் ஆசிரியருக்கு,

தங்களின் சுவடுகள் நான்காவது வருடத்தை நிறைவு செய்வதையிட்டு வாழ்த்துகள். வெளிநாடுகளில் குறைந்த மூலவளத்துடன் பத்திரிகை நடத்துவது இலகுவான காரியமல்ல. நேரம் கிடையாத இயந்திர வாழ்வில் இதைச் செய்வது இலகுவல்ல.

சுவடுகளின் கடந்தகால இதழ்களில் 'நடுநிலை'மாற்றம் பற்றி ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சுவடுகள் மே இதழில் நீங்கள் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில் இந்தியா புலிகளைத் தடை செய்வது நியாயமற்றது, ஜனநாயக விரோதமானது என்று எழுதியிருந்தீர்கள். இது சரியான கருத்துத் தான். ஆயினும் நீங்கள் ஈழத்தில் மாற்று இயக்கங்களைத் தடைசெய்து, உறுப்பினர்களைக் கொலை செய்து, இன்றும் பல ஆயிரம் பேரைக் கைது செய்து (இதில் இயக்கம் இல்லாதவர்கள், மனிதாபிமானிகள், அரசியல்ப் பக்கமே தலைவைத்தும் படுக்காதவர்கள் உள்ளனர்) சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்யும் புலிகளைப் பற்றிச் சுட்டிக் காட்டவில்லை.

அதேபோல் யூன் இதழில் சமுத்திரன் எழுதிய 'விடுதலைப்புலிகளின் மீதான தடையும் ஈழத்தமிழர் போராட்டமும்' எனும் கட்டுரையில் விடுதலைப்புலிகளை அரசியற் காரணங்களுக்காகத் தடைசெய்வதாக எழுதியுள்ளார். ஆனால் ஒருவரிகூட விடுதலைப் புலிகளால் மாற்று இயக்கங்கள் தடைசெய்யப் பட்டதை எதிர்த்து எழுதவில்லை. இது ஒருபக்கத்தை மட்டுமே பார்ப்பதாகும். இவ்வாறான தவறுகளை சுவடுகளும் சமுத்திரனும் விடமாட்டார்களென நம்புகிறேன்.

அ.மோகன்
ஜேர்மனி

www.tamilarangam.net

## திறமைகாட்டும் ஆசிய மாணவர்கள்!

அமெரிக்கப் பாடசாலைகளில் சிறந்த மாணவர்கள் பத்துப் பேரின் பெயர்ப் பட்டியலை எடுத்தால் அதில் மூன்றுமுதல் ஐந்துபேர்வரை ஆசிய நாட்டவர்கள் இருப்பதாக அறியப்படுகிறது. குறிப்பாக சீனா, ஜப்பான், வியட்நாம், லாவோஸ் நாட்டவரே இவ்வாறு முன்னணியில் உள்ளனர்.

அண்மையில் மூன்று அமெரிக்க ஆய்வாளர்களும், இரு மனோவியலாளர்களும், ஒரு ஆசிய நாட்டு ஆய்வாளரும் இணைந்து, ஐந்து நகரங்களில் அகதிகளாக வந்து குடியேறிய மக்களிடையே நடாத்திய ஆய்வுகளில் இவ்வாறு ஆசிய மாணவர்கள் முன்னணி வகிக்க அவர்களது குடும்ப உறவுகளே காரணம் என்று அறியப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியில் 20 நாடுகளில் 1,75,000 மாணவரிடையே நடத்தப்பட்ட இன்னொரு ஆய்வின்படி அமெரிக்கப் பாடசாலைகளில் கணிதம், இயற்கை விஞ்ஞானம் போன்ற பாடங்களின் தரம் ஏனைய நாடுகளில் உள்ளதைவிடக் குறைவாகவே உள்ளது. அத்துடன் அமெரிக்க மாணவர்கள் அதிகளவு நேரத்தைத் தொலைக்காட்சி பார்ப்பதில் செலவிடுவதாகவும் அறியப்படுகிறது.

இந்த ஆய்வுகளின்படி ஆசியாவில் கொரியா, தைவானும், ஐரோப்பாவில் ஹங்கேரி, சுவீடனும் முன்னணி வகிக்கின்றன.

சில ஆசிய மாணவர்கள் வசதி குறைந்த பாடசாலைகளில் படித்தாலும், வசதியான பாடசாலைகளில் பயிலும் அமெரிக்க மாணவர்களைவிட அதிக புள்ளிகளைப் பெறுகின்றனர். ஆய்வின்படி கொரியா, ஜப்பான், தைவான் நாடுகளில் படிப்பை முடிக்கும் ஒரு மாணவனது அறிவு, அமெரிக்க மாணவர்களைவிட அதிகமாக உள்ளது.

இதற்கு ஆய்வாளர்கள் கூறும் காரணம் 'சுமுகமானதும், இறுக்கமானதுமான குடும்ப உறவுகள்' இங்கு நிலவுவதே. அமெரிக்காவில் பல குடும்பங்களிடையே தாய் தந்தையர் பிரிந்து வாழ்தல் அதிகமாக இருப்பதும், சீரான குடும்ப உறவு இல்லாததும் மாணவர்களை அதிகமாகப் பாதிப்பதுடன், இதனால் ஆசிரியர்களின் வேலைப்பளு அதிகமாக இருப்பதும் அவதானிக்கப் பட்டுள்ளது.



இத்தோடு இன்னொரு சுவையான விடயமும் அவதானிக்கப் பட்டுள்ளது. பெரிய குடும்ங்களில் உள்ள பிள்ளைகள் அதிகம் படிப்பவர்களாக இருக்கிறார்கள், காரணம் மூத்த பிள்ளைகள் இளையவர்களுக்குப் படிக்க உதவுவதே.

● சண்முகம் ●

www.tamilarangam.net

# மனந்திறத்தல் மனந்திறத்தல் மனந்திறத்தல்

சந்தா

சுவடுகளின் சந்தாதாரர்கள் பலர் தமது முகவரி மாற்றத்தை உரிய காலத்தில் அறிவிப்பதில்லை. இதனால் உங்களுக்குரிய பிரதிகள் தவறிப்போக வாய்ப்புண்டு. தயவுசெய்து முன்கூட்டியே முகவரி மாற்றம் பற்றி எழுத்து மூலம் அறிவியுங்கள்.

படைப்புகள்

சுவடுகளில் வெளியிடத் தரமான படைப்புகளை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். ஆக்கங்கள் சமுகத்திற்குப் பயன் விளைக்கும் துறைகள் சார்ந்ததாய் இருப்பது விரும்பத்தக்கது. தவிர்க்கமுடியாத காரணங்களால் பிரசுரமாகாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப முடிவதில்லை. படைப்பாளிகள் தம்முடன் படைப்பின் பிரதியை வைத்திருக்க வேண்டுகிறோம்.

தொடர்புகள்

சுவடுகளின் வளர்ச்சியில் வாசகர்கள் விமர்சனரீதியாகப் பங்களிக்க வேண்டுகிறோம். சுவடுகள் பற்றிய உங்களது அபிப்பிராயங்களை எமக்கு எழுதுங்கள். நாகரீகமாக எழுதப்படும் கடிதங்கள் பிரசுரிக்கப்படும். இடவசதியைக் கருத்திற் கொண்டு கடிதங்களை முழுமையாகப் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

நிறைவு

சுவடுகள் தனது ஐந்தாவது வருடத்தில் காலடி வைக்கிறது. இத்தனை காலத்திலும் எம்மோடு தோள்கொடுத்த வாசகர்களையும், படைப்பாளிகள் மற்றும் நண்பர்களையும் நன்றியோடு நினைவுகூர்கிறோம். இதுவரை வெளியான இதழ்களில் உள்ள குறைகளையும் நிறைகளையும் தெரிவியுங்கள். புதிதாகச் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் என நீங்கள் கருதுபவற்றையும் குறிப்பிட்டு எழுதுங்கள். தொடர்ந்தும் சுவடுகளைத் தரமாக்க உங்களது ஆலோசனைகளை வரவேற்கிறோம்.

முகவரி

சுவடுகளை உங்கள் நண்பர்களிடம் அறிமுகம் செய்யுங்கள். புதிய சந்தாதாரர்களைச் சுவடுகளுக்கு அறிமுகப் படுத்துங்கள். சுவடுகளைப் பரவலாக்க உங்களது ஒத்துழைப்பு பெரிதும் உதவும்.

விமர்சனம்

சுவடுகள் வாசகர்கள் பலரது சந்தா கிடைக்கவில்லை. இதைப்பற்றி அடிக்கடி நினைவுபடுத்த நேரிடுவது கவலைதான். ஆனால் எமது நிதி நெருக்கடியை நீங்களும் கவனத்தில் கொள்வீர்கள் என நம்புகிறோம். பன்னிரு இதழ்களுக்கான சந்தா 300 நோர்வேஜியக் குறோணர்கள் (அண்ணளவாக 50 டொலர்கள்). வங்கியூடாக மாத்திரம் பணத்தை அனுப்புங்கள். வங்கிக் கணக்கிலக்கம் 1607 5213062, வங்கியின் பெயர் SparebankenNOR.

சுவடுகளுடனான சகல தொடர்புகளுக்கும் பின்வரும் முகவரியையே பாவிக்கவும்.

Herslebs Gate 43,
0578 Oslo,
Norway.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐந்தாவது வருடத்தில் சுவடுகளின் முதல் காலடி!

சுவடுகள் ஆரம்பித்து இன்று நான்கு ஆண்டுகள் நிறைந்துவிட்டன. சற்றே ஆச்சரியம் தருகிற சங்கதிதான். எத்தனையோ சிக்கல்களைத் தாண்டி இன்றுவரை நிற்கும் மிகச்சில ஐரோப்பியச் சஞ்சிகைகளில் சுவடுகளும் ஒன்று என்பதை நினைக்கையில் மனது நிறைகிறது. இதற்கான பெருமிதத்தில் வாசகர்களுக்கும் பெரும்பங்குண்டு. உறுதியான ஆதரவும் பின்பலமும் வாசகர்களிடம் இருந்து கிடைத்திராவிடில் சுவடுகள் எப்போதோ நின்றுபோயிருக்கக் கூடிய ஆபத்து இருந்தது. அதேபோல் இன்று சுவடுகளுடன் நேரடியாகப் பங்கேற்காவிட்டாலும் ஆரம்பத்தில் சுவடுகளை நிறுவி, வளர்த்த நண்பர்களை இன்று சுவடுகள் நன்றியோடு நினைவுகூர்கிறது. அவர்களே சுவடுகள் வேர்விடக் காரணமாக இருந்தனர். இன்று கிளைபரப்புவதற்கு வேர்களது அவசியம் மறக்கப்படக்கூடிய ஒன்றல்ல.

சுவடுகள் பல படிகளைத் தாண்டி வந்திருக்கிறது என்றாலும் தனது அடிப்படைகளை முற்றிலும் மாற்றிவிடவில்லை. அரசியல் மாத்திரம் என்று குறுக்கிவிடாமல் சமூகத்தின் பலதரப்பட்ட துறைகளையும் தொட்டுச் செல்லும் அம்சங்களைத் தன்னில் முன்போலவே இனியும் சுவடுகள் சுமக்கும். இவை சமூகத்திற்குப் பயன்விளைக்கும் துறைகளாக இருப்பதே சுவடுகளின் விருப்பம் எனினும் வாசகர்களது உணர்வுகட்கு மதிப்பளிக்கப்படும்.

சுவடுகள் தன்னைச் சூழ்ந்துள்ள நிகழ்வுகள் பற்றிய தனது கருத்துகளை வெளியிடும் அதேவேளை இந்த நிகழ்வுகள் பற்றியும், சுவடுகளில் வெளியாகும் ஏனைய படைப்புகள் பற்றியும் வாசகர்களின் மாற்றுக் கருத்துகளைச் சுவடுகள் முன்போலவே எப்போதும் வரவேற்கிறது. ஒருபக்கக் கருத்துகளை மாத்திரம் கேட்பதும் சிந்திப்பதும் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிற வழிதான்.

இத்தனைகாலம் நீங்கள் வழங்கிய ஆதரவைச் சுவடுகள் தொடர்ந்தும் எதிர்பார்க்கிறது. சுவடுகளின் போக்கை நல்ல விமர்சனங்கள் மூலம் வழிநடத்துவது வழமை போலவே உங்களது பொறுப்பு என்பதை மீண்டும் நினைவுறுத்துகிறோம்.

பிறிதோர் இதழில் சந்திப்போம்.

நன்றிகள்!

- சுவடுகள் -

'SUVADUGAL', A Tamil Monnthly from Norway. Issue Nr 38, Au-Sep'92